

# ஹிஜாப்:
## ஒரு வேர் நிலைப் பார்வை
12



03
## முஸ்லிம் சிறுபான்மையை புறக்கணிக்கச் சொல்லுகிறதா இந்தியா?

## "நான் அரசியலில் இருக்கும்வரை ஒருபோதும் முஸ்லிம்களின் கலாசாரம், தனியார் சட்டங்களில் கைவைப்பதற்கு இடமளிக்கப்போவதில்லை"
07









# மீள்பார்வை
මීළ්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/116/NEWS/2019 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 428 • 13 டிசம்பர் 2019 வெள்ளிக்கிழமை • ரபீஉல் ஆகிர் 1441 • விலை 40.00







# MCC இனால் கட்சி பிளவுபடும் அபாயம்



அமெரிக்காவின் மில்லேனியம் சலேஞ்ச் கோபரேஷனுடன் அரசாங்கம் செய்து கொள்ளவுள்ள 480 மில்லியன் டொலர் நிதி உதவி ஒப்பந்தம் தொடர்பில் அரசாங்கத் தரப்பில் பிளவுகள் வெடித்து வருகின்றன. (பக். 14)



## வாழ்த்துக்கள்

நேபாளத்தின் காத்மண்டு மற்றும் பொக்காரா நகரங்களில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை 251 பதக்கங்களைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்தது. அத்தோடு 15 தங்கப் பதக்கங்களை இலங்கைக்கு வெளியில் முதற்தடவையாகப் பெற்றுள்ளது.

# அதிகமான ஊடகவியலாளர்களைச் சிறையிலடைத்த நாடாக சீனா

இந்த ஆண்டில் அதிகமான ஊடகவியலாளர்களைச் சிறைப்படுத்திய நாடாக சீனாவை இனங்காணப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி குறைந்தது 48 ஊடகவியலாளர்கள் சீனாவில் சிறையிலடைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. (பக். 11)



# சுற்றாடலுக்கென விஷேட தொலைபேசிச் சேவை

சுற்றாடல் தொடர்பான முறைப்பாடுகளை பொது மக்கள் இலகுவாக மேற்கொள்ளும் வகையில் தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

011-5978725, 011-5978726, 011-5978728

# நிதியமைச்சின் சேவைகளை இணையத்தினூடாகச் செயல்படுத்த நடவடிக்கை




காகிதப் பாவனையைக் குறைத்து, அனாவசிய தாமதங்களையும் குறைக்கும் வகையில் முதலமைச்சின் சேவைகளை இணையமயப்படுத்தும் வேலைத் திட்டமொன்றை நிதி அமைச்சு ஆரம்பித்துள்ளது. நிதியமைச்சின் கீழுள்ள தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த வேலைத் திட்டத்தினூடாக அரச நிர்வாகத் திறனை (பக். 14)

# சக்திக்க விவகாரம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமையில் முறையீடு



எழுத்தாளர் சக்திக்க சத்குமாரவை தன்னிச்சையான தடுப்புக் காவலில் வைத்திருப்பது தொடர்பில் ப்ரீடம் நெள மற்றும் ப்ரொஸ்கோ ரோஸ் எல்எல்பி அமைப்புக்கள் ஐக்கிய நாடுகள் செயற்பாட்டுக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

சக்திக்கவின் நான்கு மாதகாலத் தடுப்புக் காவலும், அவருக்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் சட்ட நடவடிக்கைகளும் ஐசிசிபிஆர் மற்றும் மனித உரிமைகளுக்கான (பக். 11)

# இந்திய குடியுரிமைச் சட்டம். இலங்கைத் தமிழர்கள் ஏன் சேர்க்கப்படவில்லை?



பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசம் ஆகிய நாடுகளில் இருந்து மத துன்புறுத்தல் காரணமாக இந்தியாவுக்கு வந்த முஸ்லிம் அல்லாதவர்களுக்கு மட்டும் இந்திய குடியுரிமை கிடைக்க வழி செய்யும் இந்திய குடியுரிமை சட்டத் திருத்த மசோதாவை இந்தியா நிறைவேற்றியது.

இந்த மசோதா குறித்து நடைபெற்ற விவாதத்தில் காங்கிரஸ் மற்றும் தி.மு.க.வை சேர்ந்த உறுப்பினர்கள் எதிர்த்தும், அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஆதரவாகவும் பேசினர்.

இது தொடர்பாக காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ப. சிதம்பரம் பேசுகையில், (பக். 14)

# பலாலி விமான நிலையம் பிராந்தியமயமாகிறது



பலாலி விமான நிலையம் இந்திய அரசின் பூரண ஆதரவுடனும் 300 மில்லியன் ரூபா உதவியுடனும் அபிவிருத்தி செய்யப்பட்டு பிராந்திய விமான நிலையமாக மாற்றப்படும் என சுற்றாடல், சிவில் விமான சேவை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். இந்தியத் தூதுவர் தரஞ்சித் சிங் உடனான பேச்சுவார்த்தைகளின் பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார். (பக். 11)

# சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தேசிய பாடசாலைகள் Z புள்ளியிடலுக்குப் பதிலாக புதிய முறை

பாடசாலை கட்டமைப்புக்குள் உள்ள பாடசாலைகளில் ஆயிரம் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக அபிவிருத்தி செய்வதற்கும் ஒவ்வொரு மாவட்டத்தையும் உள்ளடக்கிய வகையிலும் புதிய மும்மொழி பாடசாலையை அமைப்பதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இலவசமான சமமான நீதியான தரமான கல்வியை அனைத்து மாணவர்களுக்கும் வழங்குவதை நோக்காகக் கொண்டு அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சகல வசதிகளைக்கொண்ட மூன்று பாடசாலைகளை அபிவிருத்தி செய்து அந்த பாடசாலைகளை (பக். 11)

# சமூக ஊடகங்களில் இருந்து தரவு சேர்க்க புலனாய்வுப் பிரிவுக்கு பயிற்சி தேவை



உலகெங்குமுள்ள அரசாங்கங்கள் இணையத் தாக்குதல் அச்சுறுத்தலை அங்கீகரித்து அவற்றைச் சமாளிப்பதற்குத் தயாராகின்றன. இலங்கையில் அதற்கான தயாரிப்புகள் போதுமானதாக இல்லை என சிங்கப்பூரின் நயாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்புக் கற்கைகள் பேராசிரியர் ரொஹான் குணரத்ன தெரிவித்தார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரிக்கும் ஜனாதிபதி [illegible] அவர் இவ்வாறு தெரிவித்தார். (பக். 11)

# தமிழில் மஹாவம்சம்




கி.மு. 600 இலிருந்தான இலங்கையின் வரலாற்றை எடுத்துரைக்கும் மகாவம்சத்தை தமிழிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து வெளியிடுவதற்கு கலாச்சார அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கான தொரு செயலகம் பத்தரமுல்ல, செத்சிரிபாயவில் நான்காம் மாடியில் இம்மாதம் 09 ஆம் திகதி முதல் இயங்கத் தொடங்கியுள்ளது என அமைச்சின் பணிப்பாளர் அனுஷ கோகுல தெரிவித்தார். (பக். 11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் பேசும் சித்திரங்கள்

றியாஸ் குரானா


தமிழ் பேசும் சமூகம் கூட்டாகச் சேர்ந்து விளித்துக் கொண்டு களத்தில் இறங்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. எங்கள் பகுதிகளில் எங்கள் சுவர்களில் 'அவர்கள்' தங்கள் வக்கிரங்களை, மனோவிகாரங்களை, பேரினவாதப் பிம்பங்களை, குரோதக் குண்டுகளை சித்திரங்களாக வரைந்து எங்களைத் தங்கள் கலாச்சார அழுத்தத்திற்குள் அடக்கிவைக்க நாம் இடமளிக்கப் போகிறோமா..? அல்லது எங்கள் மண்ணில் எங்கள் இருப்பையும் பாதுகாப்பையும் கலாசாரத்தையும் உணர்வுகளையும் சுதந்திரமாக வெளிக்காட்ட முன் வரப்போகிறோமா..? காத்திரமான உரையாடல்களை முன்னெடுப் போம் தமிழ் பேசும் உறவுகளே!

SOCIAL MEDIA

**சமூக வலைத்தளங்களில் அலசப்படுபவை**

## அவதானம் வேண்டும்

முர்ஸலீன் மூஸா




அவர்கள் எமது சுவர்களில் வரைவதற்கு முன் வரைய வேண்டுமாம். அவர்கள் இனமுறுகலைத் தூண்டும் ஏனைய மதங்களை சமூகங்களை இழிவுபடுத்தும் ஓவியங்களை வரைவதை யாரும் தடுப்பதில்லை. ஆனால் நாங்கள் கவனமாக அரபு எழுத்துக்கள் வராமல் வரைய வேண்டுமாம்.

அவதானம் வேண்டும். தேவையில்லாத பிரச்சினைகளை வலிந்து தேடி எடுக்க வேண்டியதில்லை. ஆனால் பயந்து அடிமைப்பட்டு கூனிக் குறுகி வாழ வேண்டியதில்லை.

நாம் வரைகின்ற கருப்பொருள்களை இஸ்லாத்தின் பார்வையில் அதற்கான முக்கியத்துவத்தை உணர்த்தும் அரபு வசனங்களை அரபியில் எழுதி மொழி பெயர்ப்பை சிங்களத்தில் எழுதலாம். அப்போது அவர்களில் ஒரு சிலராவது அரபியில் சொல்லப்படுபவை எல்லாம் தீவிரவாதக் கருத்துக்கள் இல்லை என்பதை விளங்கி கொள்ள வாய்ப்பாக அமையும்.

# பேசும் சுவர்கள்

முஹம்மத் அஜாஸ்



Dec 02ம் திகதி இலங்கை அதிபர் தனது ட்விட் பக்கத்தில், சிறியதொரு வீடியோவைப் பகிர்ந்திருந்தார். அந்த வீடியோவில் இளைஞர்களால் வரையப்பட்ட சில சுவரோவியங்கள் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன. அதை வரைந்த இளைஞர்களையும் பாராட்டியிருந்தார்.

அந்தச் சுவரோவியங்களைப் பார்க்கும் போது, பன்மையான சமூகங்களைக் கொண்ட ஒரு நாடு இலங்கை என்பதை உணர்த்தும் குறியீடுகள் எதனையும் அந்தச் சுவரோவியங்களில் காண முடியாதுள்ளது.

சிங்கள கலாச்சாரம், இராணு வீரர்களைக் கொண்டாடும் விதமாக, எங்கள் ஹீரோக்கள் எனக் குறிப்பிட்டு சில சுவரோவியங்கள் இருந்தன.

இதே வகையில் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த கலைஞர்களும் தங்கள் ஓவியங்களை வீதிச் சுவர்களில் தீட்ட வேண்டும். கலாச்சாரம், பண்பாடு, அரசியல் செய்தியென அனைத்தையும் இந்தச் சுவரோவியங்கள் - தெருவுக்குக் கொண்டு வந்திருக்கின்றன. தொலைக்காட்சிகளிலோ, முகநூல்களிலோ, புத்தகங்களிலோ வெளிப்பட்ட இந்த மனோபாவங்கள், வீதிச் சுவர்களில் அமர்ந்து கொண்டு இனி வருங்காலங்களில் அனைவரையும் தாக்கப் போகின்றன.

ஜனரஞ்சக வெளிக்கு வரும் இந்தச் சுவரோவியங்கள், அனைவருடனும் பேசப் போகின்றன. இது ஒருவகையில் விளம்பரம்தான். அதே நேரம் ஒரு கவர்ச்சிகரமான அரசியல் பிரச்சாரமும் கூட.

தவிர்க்க முடியாமல், கண்களில் சிக்கப் போகின்றன. அப்படிச் சிக்கும் ஓவியங்கள் பன்மையான கலாச்சார மற்றும் பண்பாட்டு அம்சங்களை அனைத்து நாட்டு மக்களிடமும் கொண்டு சேர்க்கப் போகின்றன. அரசியல் செய்திகளையும் ஆழ்மனதில் வளர்க்க உதவப் போகின்றன.

சிறுபான்மை கலைஞர்கள் இதைக் கவனத்திற்கொள்ள வேண்டும். அவர்களும் தமது கலாச்சார, பண்பாட்டு நினைவுகளைச் சுவர் ஓவியங்களாக உருவாக்க வேண்டும். அதுபோல், தமது அரசியல் செய்திகளையும் சுவர்களில் ஓவியங்களாகத் தீட்டி, நாட்டு மக்களின் மனங்களில் சிறுபான்மை மக்களைப் பற்றி நினைவுகளையும் பதியச் செய்ய வேண்டும். இது காலத்தின் முக்கியமான ஒரு செயற்பாடாக இலங்கையில் உருவெடுக் கப் போகின்றது.

பெரும்பான்மை சமூகம் மாத்திரமே இந்தச் சுவரோவியங்களில் பங்கேற்கும் பட்சத்தில், சிறுபான்மைச் சமூகங்களின் கலாச்சாரம், பண்பாடு மற்றும் அரசியல் செய்திகள் எதுவும் இல்லாது, பன்முகத் தன்மையற்ற ஒற்றைக் கலாச்சார பண்பாட்டு நாடாகக் காட்சிப்படுத்த ஏதுவாக அமைந்துவிடும். சிறுபான்மை மக்களின் அரசியல் செய்திகள், மறைந்தே போய் விடும்.

முல்லாக்கள் இங்கும் வருவார்கள். ஓவியம் வரைவது இஸ்லாத்தில் ஹராமெனக் கூறி முஸ்லிம் கலைஞர்களைப் பங்கேற்க விடாது தவிர்க்கவும் வாய்ப்புள்ளது.

இத்தாலியின் Street Artist Pier Paolo Spinazze தனது சுவரோவியங்களினூடாக பாசிசத்தோடு சண்டை போட்டுக்கொண்டிருக்கிறாரெனக் கடந்த ஆண்டு கவனஈர்ப்பைச் செய்த விமர்சனங்களும் ஓவியங்களும் வெளிவந்திருந்தன.

சுவரோவியங்களினூடாக பாசிசத்திற்கு எதிராகச் சண்டையிட முடியும் எனக் காட்டியிருக்கிறார். சிறுபான்மைச் சமூகங்களும், தமது அரசியல் செயற்பாட்டைக் கலைசார்ந்த போராட்டமாக மாற்றியமைக்க முடியும். சாதாரண பெரும்பான்மை மக்களின் மனங்களில் சிறுபான்மையினரின் நியாயங்களை சுவரோவியங்களினூடு பேச முடியும். சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த கலைஞர்கள் இதற்குத் தயாராகுவார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

சிறுபான்மைச் சமூகத்தவர்களின் சுவரோவியங்களையும் இலங்கை அதிபர் பாராட்டுவாரென நம்புவோம்.



## முஸ்லிம் சமூகம் அவசரமாக தொழிற்பட வேண்டும்

எம்.என். முஹம்மத்

இலங்கையின் இரு பிரதான ஊடகங்கள் முஸ்லிம் சமூகத்தின் மீதான ஊடகப் போரை தேர்தல் முடிந்ததன் பின்பும் விட்டதாகத் தெரியவில்லை. முஸ்லிம்களையும் முஸ்லிம் வியாபார நடவடிக்கைகளையும் கடுமையாகக் கொச்சைப்படுத்தி செய்திகளை வெளியிட்டு வருகின்றது.

இன்னொரு பக்கம் அதிதீவிர மதவாத சிந்தனை கொண்ட பிக்கு ஒருவர் நளீமியாவில் கற்றவர்களுக்கு பதவி வழங்கக் கூடாது. என்றும் அங்கு சலபி, இஹ்வானிய சிந்தனைகள் கற்பிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூற்றுக்கு பின்னாலுள்ள மிகப் பெரிய அரசியல் தற்போது உயர் தரத்தில் உள்ள மூன்று நளீமீக்களையும் அமைச்சுக்களின் செயலாளர்களாக நியமிக்கப்படக் கூடாது என்பதாகும். முஸ்லிம்களை அமைச்சின் செயலாளர்களாக நியமிக்காமல் இருப்பதற்கு ஏதாவது ஒரு காரணத்தை தேடி கண்டறிந்து கொண்டே இருக்கின்றனர்.

உண்மையில் நளீமியா ஒரு நடுநிலை சிந்தனை கொண்ட ஒரு கல்வி நிறுவனம் ஆகும். அதனை ஒரு பயங்கரவாத நிறுவனமாக காட்டுவதற்கு எடுக்கின்ற முயற்சி கடுமையாக கண்டிக்கப்பட வேண்டும். நளீமீகளுக்கு பதவி கொடுத்தால் சம்பிரதாய முஸ்லிம்கள் தலை எடுக்க முடியாதாம். யார் இந்த சம்பிரதாய முஸ்லிம்கள், சமூகத்தை நுணுக்கமாக கூறுபோட எத்தனிக்கும் இந்த முயற்சியை முஸ்லிம் சமூகம் துணிவுடனும், அறிவுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

ஸலபுகள் என்ற சொல் கொச்சைப்படுத்தப்படுகிறது. இதன் உண்மையான அர்த்தத்தை இந்நாட்டு சிங்கள தமிழ் மக்களுக்கு விளங்க வைப்பது முஸ்லிம் மார்க்க தலைமைகளின் கடமையாகும்.

பிரித்தானியாவில் செய்தது போன்று இந்த நாட்டில் உள்ள இஸ்லாமிய சிந்தனைகள், இயக்கங்கள் தொடர்பில் ஒரு நேர்மையான ஆய்வு அறிக்கையை செய்யுமாறு அரசை வேண்ட வேண்டும். அதில் ஏதாவது சிந்தனைகள் பயங்கரவாதத்தைத் தூண்டுகிறது எனக் கண்டால் அவற்றைக் களைவதற்கு சமூகம் தயாராக இருக்க வேண்டும். ஏனெனில் தப்லீக் ஜமாத் உட்பட இலங்கையில் உள்ள எல்லா இஸ்லாமிய இயக்கங்களையும், மத்ரஸாக்களையும் இந்த பிக்குகள் அடிப்படை இன்றி குறை கூறுகின்றனர்.

அடுத்து இந்த நாட்டு சிங்கள மக்களுக்கு ஒன்றைத் தெளிவாக விளங்க வைக்க வேண்டும். சிலர் முஸ்லிம்கள் அமைச்சரவையில் இல்லை என்று கொண்டாடுகின்றனர். உலக மொத்த முஸ்லிம் சனத்தொகை 1.3 பில்லியன், அவர்கள் 2030 இன் பின்பு உலகின் பெரும்பான்மை சமூகமாக மாறிவிடும். முஸ்லிம்களுடன் மோதல் நிலை அரசியலால் ஏற்றப்படும் பொருளாதார, இராஜதந்திர பதிப்புகள் நாட்டை எவ்வளவு பாதிக்கும் என்பதை விளங்க வைக்க வேண்டும்.

பயங்கரவாதம் முஸ்லிம் சமூகத்தில் இருந்தால் அது களையப்பட வேண்டும். அதற்காக மொத்த சமூகத்தையும் பயங்கரவாதிகளாகக் காட்ட எத்தனிக்கும் முயற்சிகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

முஸ்லிம் அரசியல் தலைமைகள் இந்த விடயங்களில் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும். பாரிய கலவரம் ஒன்றுக்கான சூழலை உருவாக்கும் முயற்சி திரை மறைவில் நடக்கிறது. இதனை தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

# இனத்துவேசம் இன்றி அரசியல் செய்யலாம் என்பதை எடுத்துக் காட்டிய முன்னாள் பிரதமர்

ஐ.எல்.எம். ராஸிக்

1993ம் ஆண்டு கெலிஒய கலுகமுவ பெரிய பள்ளிவாசல் கட்டட நிர்மாணப் பணிகள் தொடர்ந்த போது அந்த இடத்துக்கு திடீரென தி.மு. ஜயரத்ன அவர்கள் விஜயம் செய்தார்கள். அப்பொழுது முதலாம் மாடிக்கான கொங்கிரீட் போடப்பட்டுக் கொண்டிருந்தது. முழு ஊரும் இதற்கான பணியில் ஈடுபட்டதைக் கண்ட அவர் ஆச்சரியமடைந்தார். அவர் மேல்மாடிக்கு ஏறி வேலைகளை அவதானித்தார். அத்துடன் நின்றுவிடவில்லை ஊர்மக்கள் வரிசையிலிருந்து கற்களை பரிமாறுவதைக் கண்ட அவர் தானும் ஒருவராக இருந்து கற்களை பரிமாறி அவர்களுக்கு தோளோடு தோள் நின்று ஒத்துழைத்தார். இது அன்னாரது தாழ்மையான மனப்பான்மையை எடுத்துக் காட்டுகிறது.

உளத்தூய்மையுடன் முஸ்லிம் சமூகத்துக்காக இவர் ஒத்துழைத்தார் என்பதற்கு இது ஒரு முக்கியமான சான்றாகும். தான் பாராளுமன்ற அங்கத்தவராக இருந்தபோது உஸ்பகிஸ்தானுக்கான தனது முதலாவது வெளிநாட்டு பயணத்தைத் தொடர்ந்தார். இவ்வேளையில் அழகான தொப்பிகளை அணிந்து முஸ்லிம்கள் தொழுகையை நிறைவேற்றுவதைக் கண்ட இவர், அதனால் ஆகர்ஷிக்கப்பட்டு தன்னுடைய இலங்கையில் உள்ள முஸ்லிம் நண்பர்களை நினைவுகூர்பவராக பல தொப்பிகளை அங்கிருந்து வாங்கிக் கொண்டு வந்து அவர்களுக்குப் பரிசாக அளித்தார்.

நாங்கள் முஸ்லிம்கள் என்ற வகையில் அவர் எங்கள் சமூகத்திற்கு செய்த அளப்பரிய சேவையை என்றும் நாம் மறுப்பதற்கில்லை. ஆனால் அவர் தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்ட போது பெரும்பான்மையான மக்கள் அவரை கைவிட்ட பொழுதும் முஸ்லிம் சமூகம் என்றும் அவருடனேயே இருந்து அவருக்காக பூரண ஒத்துழைப்பை வழங்கியது.



இப்பிரதேசத்திலே வாழ்கின்ற அனைத்து முஸ்லிம்களும் இவரை மறக்காமல் இருக்கும் சம்பவமாக 2014 ஆம் ஆண்டு கம்பளையில் நடந்த இன அசம்பாவிதத்தைக் குறிப்பிடலாம். 1914 ஆம் ஆண்டு சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நடந்த இனக்கலவரத்தை ஞாபகப்படுத்தி முஸ்லிம்களின் மத்தியிலே மிக மோசமான இனக்கலவரம் ஒன்றை உருவாக்குவதற்கு பெரும்பான்மை சமூகத்தின் சிலர் ஒரு பேரணியாக ஒன்று சேர்ந்து முஸ்லிம்களைத் தாக்க கம்பளை நகருக்குள் [illegible] பிரதமர் தி. மு. ஜயரத்ன [illegible] ஏறி உடனடியாக அந்த இடத்துக்கு விரைந்து அந்த ஆர்ப்பாட்டக் காரர்களை விரட்டி அடித்தார். காலோச்சிதமான அவரது முடிவு கம்பளை நகரில் இனங்களுக்கு மத்தியிலே அமைதியை ஏற்படுத்த வழிகோலியது. நாடு முழுவதும் பரவி முஸ்லிம்களுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்த இருந்த இந்த அசம்பாவிதத்தை தனது சமயோசித முடிவால் அவர் தடுத்து நிறுத்தினார்.

1960 ஆம் ஆண்டிலிருந்து அவருடன் நான் நெருங்கிப் பழகியவர் என்ற வகையில் அவரை நான் மனிதப் புனிதராக மதிக்கிறேன். கம்பளை நகர அபிவிருத்தியில் மாபெரும் பங்காற்றிய ஒரு சமூக சீர்திருத்தவாதி. அவர் விட்டுச் சென்ற அந்த அடையாளங்கள் எப்பொழுதும் கம்பளை வாழ் மக்கள் மனதில் நீண்ட இடம்பிடித்திருக்கும். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

அவரது இழப்பு இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும். அவர் தன்னுடைய அரசியல் பயணத்தை இளம் வயதிலேயே ஆரம்பித்[illegible] இருந்து கொண்டு காலம் சென்ற முன்னாள் அமைச்சர் T.B இலங்கரத்ன அவர் [illegible]படுதலின் கீழ் அரசியல் துறையில் தன்னை வளர்த்துக் கொண்டார். உடபலாத கிராம சபையின் அங்கத்தவராக 1960களில் தெரிவு செய்யப்பட்டார். இது கம்பளை தேர்தல் தொகுதியிலிருந்து அவருக்கு பாராளுமன்றத்திற்கு செல்வதற்கான வரப் பிரசாதத்தையும் அளித்தது.

பல பொறுப்புள்ள அமைச்சுப் பதவிகளை வகித்த இவர், இறுதியில் இலங்கை திருநாட்டின் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார். நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்டிருந்த கம்பளை தேர்தல் தொகுதியை பிரதேசத்திலே அபிவிருத்தியடைந்த ஓர் தொகுதியாக தான் பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் அமைத்துக் காட்டினார். தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியை ஆஸ்பத்திரிகைகளைக் கட்டுவதற்கும், பாதைகளை புனரமைப்பதற்கும், மின்சாரம், நீர் வழங்கல் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும் பயன்படுத்தினார்.

அக்காலத்தில் காணி இல்லாமலும் வீட்டு வசதிகள் இல்லாமலும் அப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். இப்பிரச்சினைகளைக் கண்கூடாக கண்டறிந்த பிரதம மந்திரி தி.மு. ஜயரத்ன அவர்கள் அல்லும் பகலும் பாடுபட்டார். இதன் விளைவாக காணி சீர்திருத்தம் கமிஷனின் உதவியுடன் அரசாங்கத்திற்கு சொந்தமான பல ஏக்கர் காணிகளை ஏழை மக்களுக்கு பிரித்துக் கொடுத்தார். இதனை ஒரு சமூகத்திற்கு மாத்திரம் வழங்காது எல்லா சமூகத்திற்கும் பிரித்துக் கொடுத்தது அவரது பெருந்தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் சிறுபான்மையை புறக்கணிக்கச் சொல்லுகிறதா இந்தியா?

• லதீப் பாரூக்

ஆர்.எஸ்.எஸ். இன் இந்துத்துவ பாசிஸத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை முஸ்லிம்களையும் நோக்கி வெறுப்புணர்வைப் பரப்பி வருவதாகத் தெரிகிறது. இலங்கையின் ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டவுடன் ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக தனது வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கரை பிரதமர் மோடி அனுப்பி வைத்திருந்தார். இது தொடர்பில் ரஜீவ ஜயவீர கொழும்பு டெலிகிராபில் எழுதிய கட்டுரையொன்றில் குறிப்பிடும் போது, ஏழாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக கோதாபய ராஜபக்ஷ பதவியேற்ற 72 ஆவது மணித்தியாலயத்திலேயே ஓர் அழையா விருந்தாளி நாட்டுக்குள் நுழைந்தார். இந்தியப் பிரதமரின் விஷேட தூதுவராக வந்திறங்கிய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், ஜனாதிபதி கோத்தாவை இந்தியாவுக்கு வரவழைப்பதற்கான அழைப்பிதழையும் சுமந்து வந்தார். இந்தியாவின் எதிர்பார்ப்புக்களையும் அவர் இங்கு எத்திவைத்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன எனக் குறிப்பிடுகிறார்.

கொழும்புக்கான தனது விஜயத்தின் பின்னர் ராஜ்ய சபாவில் அமைச்சர் ஜெய்சங்கர் உரையாற்றியபோது, தான் அனைத்து இலங்கையர்களுக்குமான ஜனாதிபதி என்பதை ஜனாதிபதி கோத்தபாய உறுதிப்படுத்தினார். இந்த உறுதிமொழி தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும். அவரது விஜயத்தின் போதான எந்தக் கலந்துரையாடல்களிலும் இந்த உறுதிமொழி எடுத்துக் காட்டப்படுவதாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதிலிருந்து தனது எல்லா உரைகளிலும் பிரதமர் மோடி தமிழரின் உரிமைகள் பற்றிக் குறிப்பிடுகின்றார். இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது, குறிப்பெடுப்பதற்குக் கூட இலங்கையர் ஒருவரை அனுமதிக்காது இந்திய மொழி பெயர்ப்பாளரின் துணையுடன் மட்டும் மூடிய கதவுக்குள்ளால் நடத்தப்பட்ட இருதரப்புப் பேச்சுவார்த்தையின் பின்னர் தலைவர்கள் இணைந்து நடத்திய ஊடக சந்திப்பில் பிரதமர மோடி கருத்து வெளியிடுகையில், இன நல்லிணக்கத்துக்கான அனைவரையும் உள்ளடக்கிய அரசியல் பார்வை தொடர்பில் ஜனாதிபதி ராஜபக்ஷ என்னிடம் தெரிவித்தார். சமத்துவம், சமாதானம், நீதி, கண்ணியம் என்பவற்றுக்கான தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் அரசாங்கம் தனது நல்லிணக்க நடைமுறைகளைத் தொடரும் என்பதில் நான் திருப்தி அடைகிறேன். 13 ஆவது திருத்தத்தையும் அது உள்ளடக்கியதாகவிருக்கும் என்று தெரிவித்திருந்தார்.



எவ்வாறாயினும் இலங்கையின் இரண்டாவது சிறுபான்மையான முஸ்லிம்கள் தொடர்பில் பிரதமர் மோடி ஒரு வார்த்தையேனும் வெளியிடவில்லை. தீவிரப் பகையுடனான அவரின் இனவாத முகத்தைப் பற்றித் தெரிந்துள்ள முஸ்லிம்கள் அவர் முஸ்லிம்களுக்கு மனிதாபிமானம் காட்டுவார் என்பதை எதிர்பார்க்கவும் முடியாது.

அதனைத் தொடர்ந்து இந்தியா இலங்கைக்கான நிதி உதவி பற்றி அறிவித்தது. உள்ளகக் கட்டமைப்புக்கு 400 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு 50 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் தருவதாக இந்தியா அறிவித்தது. அதற்கு முந்திய நாள் பேச்சுவார்த்தைகளின் போது இரு நாடுகளினதும் பாதுகாப்பு முன்னுரிமை பெற்றிருந்தது. புலனாய்வுத் துறையிலும் பயங்கரவாதத்தை முறியடிப்பதிலும் ஆற்றலை அதிகரிப்பதற்கு இலங்கைக்கு இந்தியா எப்போதுமே உதவி வந்துள்ளது. இந்த ஆதரவினை நாங்கள் தொடர்ந்தும் வழங்குவோம் என பிரதமர் மோடி அந்தப் பேச்சுவார்த்தைகளின் போது தெரிவித்திருந்தார்.

இந்த வேளையில், நாட்டில் பயங்கரவாதம் இல்லாத போது சொல்லப்படுகின்ற பயங்கரவாதத்துக்கு எதிராக ஏன் போரிட வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது. ஆர்.எஸ்.எஸ். பாணியிலான சிங்கள இனவாதக் குழுக்களின் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட அப்பாவி நிராயுதபாணி முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தும் பயங்கரவாதம் மட்டுமே இங்கு நிலவுகிறது. மே 2009 இல் எல்ரிரிஈ தோற்கடிக்கப்பட்டதில் இருந்து இது தொடங்கி ஈஸ்டர் தாக்குதலின் பின் மும்முரமாகியது.

1947 பிரிவினைக்குப் பின்னர் இந்திய முஸ்லிம்கள் மீதான ஆர்.எஸ்.எஸ். இன் ஆயிரக்கணக்கான தாக்குதல்களை ஒத்ததான ஈஸ்டர் தாக்குதல்களில் வெளிநாட்டுச் சக்திகள் சம்பந்தப்பட்டிருப்பதாக அரசாங்கத்தின் அமைச்சர்களும் கருதினால் மல்கம் ரஞ்சித் அவர்களும் பல தடவைகளில் சுட்டிக் காட்டியிருந்தனர். இருந்தாலும் மைத்திரி - ரணிலின் கடந்த அரசாங்கத்தினால் இந்த வெளிநாட்டுச் சக்திகள் யார் என்பதனை வெளிப்படுத்த முடியவில்லை.

இந்தியப் புலனாய்வுப் பிரிவு இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் ஏப்ரல் 4 ஆம் திகதியே இலங்கை அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தது என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இஸ்ரேலியப் புலனாய்வு மொஸாட்டும் ஆர்.எஸ்.எஸ். உம் இந்தத் தாக்குதலில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என ஊகங்கள் தெரிவித்தன. ஆனாலும் ஊடகங்களின் இனவாதக் கூலிப்படைகள் இதனை இருட்டடிப்புச் செய்தன.

இன்னொரு பக்கத்தில் மோடி சமாதானத் தேவதையல்ல. அவர் முதலமைச்சராக இருக்கும் போது 2002 மேயில் குஜராத்தில் முஸ்லிம்கள் அழித்தொழிக்கப்பட்டதற்காக குற்றம் சாட்டப்பட்டவர். அமெரிக்காவாலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளாலும் நாட்டுக்குள் நுழையத் தகுதியற்றவர் என ஒரு காலத்தில் பிரகடனப்படுத்தப்பட்டவர். இந்த மோடிதான் தற்பொழுது உலகின் மிகப் பெரும் ஜனநாயக நாடான இந்தியாவின் பிரதமராக இருக்கிறார். இவர் தான் இப்பொழுது பயங்கரவாதம் பற்றிப் பேசுகிறார்.

பிராமணர் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களும் இதனைப் பரவலாகப் பிரசாரம் செய்கின்றன. ஆறு வருடங்களுக்கு முன்னர் இவர் பதவியிலமர்ந்த போதே முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டார். முஸ்லிம் பெண்களின் புதைகுழிகளைத் தோண்டியெடுத்து அவர்களைக் கற்பழிக்குமாறு பிஜேபியின் உத்தர பிரதேச முதலமைச்சர் ஆதித்ய யோகி, தனது இந்துத்துவா குண்டர்களுக்கு உத்தரவிட்டார். இந்தக் காட்டுமிராண்டித்தனம் இம்மியளவும் குறையாமல் இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. மதங்களும் கலாச்சாரங்களும் ஊற்றெடுத்த பழம் பெரும் இந்தியாவின் இன்றைய நிலை இதுதான்.

வொஷிங்டன், டெல் அவிவ், புதுடில்லி அச்சின் கீழ் மொத்த மத்திய கிழக்கையும் மூலையில் தள்ளி தெற்காசியாவை தனது ஆளுகையின் கீழ் கொண்டு வருவதற்கு இஸ்ரேலும் இந்தியாவும் ஒன்றிணைந்திருக்கின்றன என்பது யாவரும் அறிந்த விடயம். பாரிய இந்தியாவின் எல்லை ஆப்கானிஸ்தானிலிருந்து தெற்காசியா வரை விரிந்தது என பிஜேபியின் பொதுச் செயலாளர் ராம் மாதவ் ஒரு முறை அல்ஜஸீராவிடம் தெரிவித்திருந்தார். அறிவுள்ள இலங்கையருக்கு இதில் தெளிவான செய்தி இருக்கிறது. இதனால்தான் இலங்கையில் இந்தியாவினதும் இஸ்ரேலினதும் பிரசன்னம் தொடர்பில் இலங்கையர் கவனமாக இருக்க வேண்டியிருக்கிறது.

ஆர்.எஸ்.எஸ் பாணியிலான சிங்களத் தீவிரவாத வன்முறைகள் சிங்களவர் மத்தியில் முஸ்லிம்களுக்கு எதிரான நச்சுவிதைகளைத் தூவின. இதன் விளைவாக பெரும்பான்மைச் சிங்களவர்களின் வாக்குகளால் ஒரு ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க முடியுமாக அமைந்தது. தவிர்க்க முடியாமல் நாடு பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் சிறுபான்மையினருக்கும் இடையில் பிளவுபடுத்தப்பட்டுள்ளது. இது ஆக்கமா அழிவா என்ற நிலைக்கு புதிய ஜனாதிபதியைத் தள்ளியிருக்கிறது. கடந்த காலத் துன்பங்களை மறந்து புதிய ஜனாதிபதியுடன் ஒன்றாய் இணைந்து வேலை செய்வதற்கான தமது ஆர்வத்தை தமிழர்களும் முஸ்லிம்களும் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இனி நாட்டு மக்களை ஒன்றிணைத்து நாட்டை முன்னோக்கி நகர்த்துவது ஜனாதிபதி கோத்தபாயவின் கைகளில் உள்ளது. அனைவரும் ஒன்றாய் வாழக் கூடிய சொர்க்க புரியாக மீண்டும் இந்த அழகிய நாட்டைக் கட்டியெழுப்புவது தான் தற்போதைய உடனடித் தேவையாக முன் வந்து நிற்கிறது.

# ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் உணர்த்துவது என்ன?

• நிஹாஸ் ஜெய்னுலாப்தீன்

2019 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் குறிப்பாக சிறுபான்மை சமூகங்களின் எதிர்பார்ப்பை கேள்விக் குறியாக்கியுள்ளதோடு பல அரசியல் விமர்சகர்களின் ஆருடங்களையும் மாற்றியுள்ளது. இந்த பெரும் வெற்றிக்குப் பின்னால் உள்ள காரணங்களை முக்கியமாக மூன்று விடயங்களைக் கோடிட்டுக் காட்ட முடியும்.

இதில் முதலாவதாக 2009 ஆம் ஆண்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் அரசில் 30 வருடகால போர் முடிவுற்றதும் அதனை முடித்து வைப்பதில் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்களின் மீது பெரும்பான்மை சமூகங்களின் நம்பிக்கை மிகப் பிரதானமானது என்பதைக் குறிப்பிடலாம்.

இரண்டாவதாக இதனோடு இணைந்த ஒரு விடயமாக SLPP இன் திட்டமிடப்பட்ட ஒழுங்குபடுத்தப்பட்ட தேர்தல் வியூகத்தின் வெற்றியாக இந்த ஜனாதிபதித் தேர்தல் காணப்படுகிறது.

மூன்றாவதாக 2015 இல் வெற்றி பெற்ற நல்லாட்சி அரசின் தோல்வியுற்ற அரசியல் செயல்பாடுகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். இதனை விரிவாக விளக்குவது நோக்கமல்ல.



2009 ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் போர் வெற்றியானது நாட்டு மக்களிடையே மிகப் பெரும் எதிர்பார்ப்பையும் யாராலும் தோற்கடிக்க முடியாது என கருதிய LTTE ஐ வெற்றி கொண்டதும் பெரும் அங்கீகாரத்தை மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு பெற்றுக்கொடுத்தது. குறிப்பாக பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் இந்த வெற்றியின் பின்னணியில் மக்கள் சுபீட்சமான இலங்கையை எதிர்பார்த்தனர்.

யுத்தம் முடிவடைந்ததால் அதற்கான செலவுகள் இல்லை, உயிர் அழிவுகள், நாட்டின் பொதுச் சொத்துக்களுக்கான அழிவுகள் இல்லை. எல்லோரும் எங்கும் போய் வரலாம் என்ற சூழ்நிலை உருவாகியதன் காரணமாக பொருட்களின் விலை குறைவடையும், பொருளாதாரம் அபிவிருத்தி அடையும், போரை வெற்றி கொண்ட அரசு இத்தோடு சிறுபான்மை சமூகங்களின் அரசியல் பிரச்சினைகளுக்கும் தீர்வு தரும், பயங்கரவாதம் இல்லாத நாட்டில் தனிமனித உரிமை, சுதந்திரம், ஜனநாயகம் என்பன வளர்ச்சி அடையும், அரச ஊழியர்களின் சம்பளம் உயரும் என்பன போன்ற அதீத நம்பிக்கையை எதிர்பார்ப்பை மக்களுக்கு மஹிந்த ராஜபக்ஷ அரசின் மீது ஏற்படுத்தியது.

ஆனால், நடந்தது வேறு விதமாகவே இருந்தது. என்றும் இல்லாதவாறு பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்தது. ஒவ்வொரு வருடமும் அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பை எதிர்பார்த்த அரச ஊழியர்கள் பெரும் ஏமாற்றமடைந்தனர். சிறுபான்மை சமூகங்களின் அரசியல் தீர்வு என்பது ஒரு கானல் நீராகவே மாறியது. மாறாக சிறுபான்மை சமூகங்களை அச்சுறுத்தும் பல செயற்பாடுகள் அதிகரித்தன. சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக வெறுப்புப் பேச்சு மற்றும் பல கிராமங்கள், சொத்துக்கள் அழிவை ஏற்படுத்திய பல இனக்கலவரங்கள் ஏற்பட்டன. தனிமனித சுதந்திரம் கேள்விக் குறியாகியது மட்டுமல்ல, நீதித்துறையே நேரடிப் பாதிப்புக்குள்ளாகும் நிகழ்வுகள் நடந்தன. மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு இருந்த நல்லதொரு அரசியல் சூழ்நிலையையும் அங்கீகாரத்தையும் தவறவிட்ட ஒரு காலப் பிரிவாகவே இக்காலம் அரசியல் அவதானிகளால் நோக்கப்பட்டது.

பாரிய கடன்களை வெளிநாடுகளில் இருந்து பெற்று அதிவேக நெடுஞ்சாலைகளையும், வீதி அபிவிருத்திகளையும் வெறுப்புப் பேச்சுக்களின் ஊடாக பெரும்பான்மை சமூகத்தின் வாக்குகளையும் நம்பி உடனடித் தேர்தல் ஒன்றுக்கு உறுதியான நம்பிக்கையோடு மஹிந்த ராஜபக்ஷ அரசு சென்றது. ஆனால், எதிர்பாராத விதமாக அரசு தேர்தலில் தோல்வி கண்டது. இந்தத் தோல்விக்கு பொருட்களின் விலை ஏற்றமும் சிறுபான்மை சமூகங்களிடம் நிலவிய அச்சமும் பாரிய ஊழல் குற்றச்சாட்டுக்களும், மனித உரிமை மீறல்களும் பிரதான காரணமாகக் குறிப்பிடலாம்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில்தான் 2015 ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி (UNF) [illegible] குறுதிகளை வழங்கி வெற்றி பெற்றது. வெற்றி பெற்ற கையோடு UNF அரசு தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுமுகமாக 10,000 ரூபா சம்பள அதிகரிப்பு, பொருட்களின் விலை குறைப்பு, ஜனநாயக மனித உரிமைகள் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளாக தகவல் அறியும் சட்டம், பொலிஸ் ஆணைக்குழு, நீதிச் சேவை ஆணைக்குழு, சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழு என்பவற்றை நிறுவியதன் மூலம் தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றியது.

ஆனால், இந்த சுமுகமான அரசியல் சூழ்நிலை நீடிக்கவில்லை. மஹிந்த ராஜபக்ஷ அரசின் காலத்தில் இடம்பெற்ற முக்கிய ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நல்லாட்சி அரசின் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. எந்த ஊழல் குற்றச்சாட்டை எதிர்த்து நல்லாட்சி அரசு உருவாக்கப்பட்டதோ அவ்வாறான ஒரு மிகப் பெரிய ஊழலான மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் நல்லாட்சி அரசாங்கத்திலேயே நடைபெற்றது. அது மட்டுமல்லாமல், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கும் இடையிலான அதிகார முரண்பாடு அதன் தொடராக சிறிசேன அவர்கள் ஏற்படுத்திய 52 நாள் புதிய அரசும் மக்கள் மத்தியில் நல்லாட்சி அரசாங்கத்தின் கேலிக்கூத்தாகவே பார்க்கப்பட்டது. இவ்வாறான அரசியல் ஸ்திரமற்ற பொறுப்புக் கூறுவதற்கு யாருமற்ற ஒரு சூழலில்தான் ஏப்ரல் 21 தாக்குதல் நடைபெற்றமையும், அதைத் தடுக்க நல்லாட்சி அரசாங்கம் தவறியமையும் பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் ஒரு அச்சத்தை ஏற்படுத்தியது. அது தேசிய பாதுகாப்பு சீர்குலைந்து போய்விட்டது என்பதை உணர்த்தியது.

இதன் விளைவாகவே 2019 ஆம் ஆண்டு தேர்தல் மஹிந்த ராஜபக்ஷவினதும் அவரது குடும்ப அரசியலில் மீது மக்களின் எதிர்பார்ப்பும் மீண்டும் ஒரு அதீத எதிர்பார்ப்புடன் மக்களைத் தூண்டியது. ஜனாதிபதி கோத்தபாய அவர்களுக்கான பெரும்பான்மை மக்களின் அபரிமிதமான ஆதரவை வெறும் சிறுபான்மையிருக்கு எதிரான ஒரு வாக்களிப்பாக மட்டும் பார்க்காமல் பொருளாதார அபிவிருத்தி, ஸ்திரமான அரசு ஒன்றின் தேவையை உணர்த்தியதான ஒரு விடயமாகவே பார்க்கப்பட வேண்டும். தேர்தலுக்குப் பிந்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் சிறுபான்மை சமூகத்தின் எதிர்பார்ப்பும் பெரும்பான்மை சமூகத்தின் எதிர்பார்ப்பும் இந்தப் புள்ளியில்தான் சந்திக்கின்றது.

எனவே மீண்டும் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் உருவாகி இருக்கும் இந்த அரசின் செயற்பாடுகள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் அரசின் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்துமாக இருந்தால் இந்த அரசாங்கத்திற்குக் கிடைத்த மிகப் பெரும் அங்கீகாரமாக அது காணப்படும்.

பொதுவாகவே நாட்டு மக்கள் எல்லோரினதும் எதிர்பார்ப்பு என்னவென்றால், எமது நாடு கடன் சுமையற்ற வெளிநாட்டு அரசுகளின் ஆதிக்கத்திற்கு உட்படாத வளர்ச்சியடைந்த ஒரு நாடாக, குறிப்பாக சிங்கப்பூர் போன்ற ஒரு வளர்ச்சியடைந்த நாடாக வர வேண்டும் என்பதாகும். இந்த எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்ய வேண்டிய ஒரு கடமைப்பாடு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்களுக்கு உண்டு.

நாட்டைக் கட்டியெழுப்பத் தேவையான உறுதியான ஒரு தலைவர், பல்லின மக்களினதும் கலாச்சாரங்களையும் உரிமைகளையும் புரிந்து செயற்படக் கூடிய அரசாங்கங்கள், நாட்டின் கடன் சுமையை விட்டும் பாதுகாக்கக் கூடிய பாரிய வேலைத்திட்டம் என்பவற்றை உள்ளடக்கியதாக தற்போதுள்ள அரசாங்கம் செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இந்தத் தேவையையும் வாய்ப்பையும் ஜனாதிபதியினதும் இடைக்கால அரசினதும் நடவடிக்கைகள் சாதகமாகக் கையாளுமாக இருந்தால் அபிவிருத்தி அடைந்த இலங்கை என்பது ஒரு கனவல்ல, அது நிஜமாக மாறும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# கலைந்து போகும் இலங்கையின் சிங்கப்பூர் கனவு

இலங்கையைச் சிங்கப்பூராக்குவதாகக் கூறும் மாயாஜால வாக்குறுதி இலங்கையின் எந்த அரசியல் தலைவர்களையும் விட்டு வைக்கவில்லை. நாட்டு மக்கள் கூட ஒரு குட்டி சிங்கப்பூரை இந்து சமுத்திரத்தின் முத்தில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இனியும் அது கனவாகவே தான் இருக்கப் போகிறதா என்ற ஆதங்கம் தற்பொழுது மக்கள் மனதில் அப்பத் துவங்கியிருக்கிறது.

சிங்கப்பூரின் நடப்பு ஜனாதிபதியாக ஹலீமா யாகூப் எனும் முஸ்லிம் பெண்மணி கடமையாற்றுகிறார். சிங்கப்பூர் அரசியல் யாப்பு இதற்கு இடமளித்திருக்கிறது. பிரதமர் ஆட்சி நடைபெறும் சிங்கப்பூரில் சிறுபான்மைச் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஜனாதிபதிப் பதவி வழங்கப்படுகிறது. இந்த வகையில் 1999- 2011 காலப்பிரிவில் தமிழரான எஸ்.ஆர். நாதன் ஜனாதிபதிப் பதவியை வகித்தார். தற்போது சிங்கப்பூரில் 13 வீதமாகவுள்ள மலே சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஹலிமாவுக்கு ஜனாதிபதிப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

மறுபுறத்தில் தற்போதைய இலங்கை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் முஸ்லிம்களுக்கு இராஜாங்க அமைச்சர் பதவி கூட வழங்கப்படாமல் மறுக்கப்பட்டிருக்கிறது. ஈஸ்டர் தாக்குதலில் தொடர்புபட்டவர்கள் முஸ்லிம்கள் என்பதனாலேயே பெரும்பாலும் இந்த நியமனங்கள் வழங்கப்படாதிருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஒரு சில முஸ்லிம்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்காக நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலை தாக்குதலில் சம்பந்தப்பட்டு கொல்லப்பட்டவர்களைத் தவிர முஸ்லிம் சமூகத்தின் எவருமே ஆதரிக்கவில்லை. இந்த நிலையில் ஒரு சமூகத்தையே பழி வாங்குவதற்கு இந்தத் தாக்குலைப் பயன்படுத்துவதனால் நாட்டின் சனத்தொகையில் கிட்டத்தட்ட 10 வீதத்தினர் நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் இருந்து ஓரங்கட்டப்படும் நிலை உருவாக முடியும்.

அமெரிக்க ஊடகவியலாளர் தோமஸ் கோர்டன் பிளேட் உடன் 2011 இல் நடத்தப்பட்ட உரையாடலொன்றில் சிங்கப்பூரின் சிற்பி லீ குவான் யூ இலங்கையைப் பற்றிக் குறிப்பிடும் போது, அது ஒரு சந்தோஷமில்லாத, ஒற்றுமையில்லாத நாடு. அவர்கள் (சிங்களப் பெரும்பான்மை அரசு) இம்முறை தமிழ்ப் புலிகளைத் தோற்கடித்திருக்கிறார்கள். ஆற்றல் அதிகமுள்ள தமிழர்களை அவர்கள் (சிங்களவர்கள்) கீழே வீழ்த்தியிருக்கிறார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

முன்னேறிய நாடுகள் எல்லாமே தமது நாட்டு மக்களின் ஆற்றலை அபிவிருத்திக்குப் பயன்படுத்தியதால் வெற்றி கண்டிருக்கின்றன. ஆற்றலைப் பயன்படுத்துவதில் அவை இன, மத கண்ணோட்டத்தில் மக்களைப் பார்த்ததில்லை. இந்த வகையில் இலங்கையின் அபிவிருத்தியில் நாட்டு மக்கள் அனைவரினதும் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளும் சவால் ஜனாதிபதி கோத்தபாயவின் கைகளில் இருக்கின்றது. அதனை அவர் வெற்றிகரமாகக் கையாள்வதிலேயே நாட்டின் உண்மையான வெற்றி தங்கி இருக்கிறது.

நாட்டில் நடக்கின்ற அசம்பாவிதங்களின் போதெல்லாம் அதனை நடத்தியவர்களின் இனத்தை ஒதுக்கப் போனால் இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான எந்த இனத்தையும் நாட்டிலே காண முடியாது. இரண்டு கிளர்ச்சிகளை நடத்திய ஜேவிபி பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகித்து ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டிருக்கிறது.

தமிழரின் விடுதலைக்காக முப்பது வருட கால யுத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் போராடிய பொழுதுகளிலும் அரசாங்கத் தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் அற்றுப் போகவில்லை. இந்த நிலையில் மன்னர்கள் ஆட்சி செய்த காலத்திலிருந்து வழங்கப்பட்டு வந்த முஸ்லிம் பிரதிநிதித்துவம் இந்த ஆட்சியில் மறுக்கப்பட்டிருப்பதானது சிங்கப்பூராக்கும் இலங்கையின் கனவுக்கு முற்றுப் புள்ளி வைப்பதாகவே அமைந்துள்ளது.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011 5353635
பெக்ஸ் : 011 5335500
ஈமெயில் : pcclsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# புதிய ஜனாதிபதியின் பொருளாதாரக் கொள்கையும் சீனாவின் புதிய பட்டுப்பாதை திட்டமும்

• ரஞ்ஜித் ஹேவாஜ ஒலிகே


இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு 99 ஆண்டு கால குத்தகைக்கு கொடுத்திருக்கும் ஒப்பந்தம் குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென, இலங்கையின் புதிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்த கருத்து, உலகளாவிய விவாதப் பொருளாகியிருக்கிறது. சீன ஆதரவு ராஜபக்ஷ சகோதரர்கள், சீனாவுக்குப் பிடிக்காத செயல்களில் ஈடுபடவே மாட்டார்கள் என்ற எதிர்பார்ப்பு இருந்த நிலையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ இந்திய ஊடகத்துக்கு அளித்த பேட்டியின் போது தெரிவித்த இந்தக் கருத்து, சீனாவின் புதிய பட்டுப்பாதை திட்டத்துக்கு எழுந்துள்ள மற்றோர் இடையூறாகப் பார்க்கப்படுகிறது.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் கோத்தாபய அளித்த பேட்டியில், இந்தியாவின் நலன்களுக்கு எதிரான எந்த நடவடிக்கையிலும் இலங்கை ஒருபோதும் ஈடுபடாது என்று அளித்த உறுதியைத் தொடர்ந்து, ஹம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்த விஷயத்தைப் பற்றிய தனது நிலைப்பாட்டை அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

### எதிர்ப்பும் மாற்றமும்

சீனாவிலிருந்து ஐரோப்பா வரையிலான சாலைகள், துறைமுகங்களை இணைக்கும் வகையிலான புதிய பட்டுப் பாதை திட்டத்தைச் செயல்படுத்தி வரும் சீனாவுக்கு ஹம்பாந்தோட்டை துறைமுகம் கிடைத்தது பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. ஆனால், இந்தியப் பெருங் கடலை நோக்கிய படி உள்ள இத்துறைமுகத்தை கடற்படைத் தளமாக சீனா பயன்படுத்தக் கூடும் என இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் கவலை தெரிவித்தன. ஆனால், அதற்கு அனுமதி அளிக்க மாட்டோம் என இலங்கையும், முற்றிலும் வணிக நோக்கத்துக்காகத்தான் இந்த ஒப்பந்தம் என சீனாவும் உறுதியளித்தாலும் அதை சந்தேகக் கண் கொண்டுதான் பார்க்க வேண்டியிருக்கிறது.

''ஏழை நாடுகளை கடன் வலையில் சிக்க வைக்கும் ராஜதந்திரம்'' என சீனாவின் நடவடிக்கையை உலக நாடுகள் விமர்சிக்கத் தொடங்கின. இந்த ஒப்பந்தத்துக்கு மகிந்த ராஜபக்ஷவின் கட்சியான பொதுஜன பெரமுனவும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. பிரதேச மக்களும் பெரும் போராட்டத்தில் இறங்கவே, ஒப்பந்தத்தில் பங்கு விகிதமானது 70-30 என



மாற்றி அமைக்கப்பட்டது. ஆனாலும், துறைமுகத்தின் முழுமையான கட்டுப்பாடு சீன நிறுவனங்களின் கையில் சென்றுவிட்டது.

### இந்தியாவும் சீனாவும்

ஹம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்த விவகாரத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ எழுப்பக் கூடும் என சீனா முன்னரே எதிர்பார்த்திருந்தது. அதனால்தான், கோத்தாபய ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதும் அவருக்கு வாழ்த்துச் சொல்ல இலங்கைக்கான சீன தூதுவர் அவசரப்படவில்லை. 2018-இல் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக தன்னைத் தானே அறிவித்துக் கொண்ட போது முதல் நாடாக அவருக்கு வாழ்த்துச் சொல்லியது சீனாதான். அப்போது மகிந்தவின் 'பிரதமர்' அறிவிப்பை ஜனநாயகத்துக்கு முரணானது என இந்தியா ஏற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இப்போது கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் அவருக்கு முதலில் வாழ்த்துத் தெரிவித்தவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. அது மட்டுமல்லாமல், ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வெளியானதும் கோத்தாபய ராஜபக்ஷவை நேரில் சந்தித்துப் பேச வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை உடனடியாக இலங்கைக்கு அனுப்பி வைத்தார் மோடி. ஜனாதிபதியானதும் மோடியின் அழைப்பை ஏற்று, கோத்தாபய முதலில் வெளிநாட்டுப் பயணமாக வருகை தந்ததும் இந்தியாவுக்குத்தான். இதன் மூலம் இலங்கையுடனான நட்புறவில் இந்தியாவின் ராஜதந்திரம் சீனாவை பின்னுக்குத் தள்ளியிருப்பதாகக் கருத முடியும்.

### மலேசியா, மியன்மார், பாகிஸ்தான் வரிசையில்...

சீனாவின் புதிய பட்டுப் பாதைத் திட்டத்தில் மலேசியா இணைந்துள்ளது. இத்திட்டத்தின் ஒப்பந்தப்படி சீன நிறுவனம் பணிகளைச் செய்யாத நிலையிலும், அந்நிறுவனத்துக்கு முந்தைய மலேசியா அரசால் பணம் வழங்கப்பட்டிருந்தது. மலேசியாவின் புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மஹாதிர் முகம்மத் தலை



மையிலான அரசு இதைக் கண்டறிந்து, சீனாவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த இரு திட்டங்களை ரத்துச் செய்து, அதற்கு ஈடாக சீன நிறுவனத்தின் வங்கிக் கணக்கிலிருந்து 240 மில்லியன் டொலரை பறிமுதல் செய்தது.

பாகிஸ்தானில் கராச்சியிலிருந்து பெஷாவர் வரையிலான ரயில் பாதையை மேம்படுத்த அந்நாட்டுக்கு 8 பில்லியன் டொலர் கடன் கொடுக்க நவாஸ் ஷரீப் ஆட்சியின் போது சீனா முன்வந்தது. ஆனால், நீண்டகாலமாக வெளிநாட்டுக் கடன்களைத் திரும்பச் செலுத்த போராடி வரும் நிலையில், இம்ரான் கான் தலைமையிலான புதிய அரசு, ரயில் பாதை மேம்பாட்டுச் செலவை பாதியாகக் குறைக்க வேண்டும் என சீனாவுக்கு கோரிக்கை வைத்துள்ளது.

புதிய பட்டுப் பாதைத் திட்டத்தின் கீழ் மியன்மாரில் துறைமுகம் ஒன்றை கட்டமைக்க சீனாவுடன் 7.5 பில்லியன் டொலர் மதிப்பீட்டில் ஓர் ஒப்பந்தத்தில் முந்தைய இராணுவ ஆட்சியாளர்கள் கையெழுத்திட்டிருந்தனர். இப்போது அங்கு மக்களாட்சி மலர்ந்துள்ள நிலையில், சீனாவுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி அத்தொகையை 1.3 பில்லியன் டொலராக மியன்மார் அரசு குறைத்துள்ளது.

புதிய பட்டுப் பாதைத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே போடப்பட்டுள்ள ஒப்பந்தங்களை மாற்றி அமைத்துள்ள, மாற்றியமைக்கக் கோரும் நாடுகள் வரிசையில் இப்போது இலங்கையும் சேர்ந்திருக்கிறது.

### ஹம்பந்தோட்டை துறைமுகம்

இலங்கையின் பிரதான துறைமுகமான கொழும்பு துறைமுகம் சரக்குக் கப்பல்களின் கொள்கலன்களைக் கையாளும் திறன்களை மட்டுமே கொண்டிருக்கும் நிலையில், கப்பல் கட்டுமானம், கப்பல்களுக்கான எரிபொருள் நிரப்புதல், தளபாடக் கொள்முதல் உள்ளிட்ட வசதிகளுடன் புதிய துறைமுகம் ஒன்றை கட்டமைக்க வேண்டும் என இலங்கை முடிவு செய்து தேர்ந்தெடுத்தது தான் ஹம்பாந்தோட்டை துறைமுகம். ஆசியா - ஐரோப்பாவை இணைக்கும் முக்கியமான கடல்வழிப் பாதையில் அமைந்துள்ளது ஹம்பாந்தோட்டை.

ஆண்டுக்கு 30 ஆயிரம் கப்பல்கள் இந்தக் கடல்வழிப் பாதையைப் பயன்படுத்தி வருகின்றன. சீன அரசின் நிதியுதவியுடன் ஹம்பாந்தோட்டை துறைமுகக் கட்டுமானப் பணிகளை 2008இல் இலங்கை அரசு தொடங்கியது. கட்டுமானப் பணியிலும் முற்றிலும் சீன நிறுவனங்களே ஈடுபட்டன. முதல் கட்டப் பணிக்கு 360 மில்லியன் டொலர் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டது. இதில் 85 சதவீதத்தை சீனாவும், 15 சதவீதத்தை இலங்கையும் வழங்கின. 2010, நவம்பர் 18-ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தனது பெயரில் அமைத்த இத்துறைமுகத்தைத் திறந்து வைத்தார்.

### சீனாவுடன் ஒப்பந்தம்

2016 ஆம் ஆண்டு 11.81 மில்லியன் டொலர் வருவாயை இத்துறைமுகம் ஈட்டியது. ஆனால், நிர்வாகச் செலவு 10 மில்லியன் டொலர் என்பதால், 1.81 மில்லியன் டொலர் லாபமாக இலங்கை துறைமுக பொறுப்புக் கழகத்துக்கு கிடைத்தது. ஆனால், தொடர்ந்து எதிர்பார்த்தபடி இத்துறைமுகம் லாபத்தை ஈட்ட இயலாததால், சீனாவிடம் வாங்கியிருந்த கடனை கட்ட முடியாத அளவுக்கு இலங்கை துறைமுகப் பொறுப்புக் கழகத்துக்கு சுமை அதிகரித்தது.

இதைத் தொடர்ந்து, 2017ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்ஹ சீனாவுக்குச் சென்றபோது, கடனுக்கு ஈடாக ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்குக் குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இந்த ஒப்பந்தப்படி 1.4 பில்லியன் டொலரை இலங்கைக்கு சீனா வழங்கியது. இந்தத் தொகையிலிருந்து சீனாவுக்கு வழங்க வேண்டிய கடனை திரும்பச் செலுத்த வேண்டும். 99 ஆண்டு கால ஒப்பந்தத்தில் துறைமுகத்தின் 80 சதவீத பங்கு சீன அரசுக்குச் சொந்தமான சீனா மேர்ச்சன்ட்ஸ் நிறுவனத்துக்கும், மீதி இலங்கை துறைமுகப் பொறுப்புக் கழகத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது.

### கோத்தாபய ராஜபக்ஷவின் நிலைப்பாடு

தற்போது கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வெற்றி பெற்றுள்ளார். தேர்தல் அறிக்கையிலேயே இந்த ஒப்பந்தம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என அவரது கட்சி வலியுறுத்தியிருந்தது. ஆனால், அது வெறும் தேர்தல் வாக்குறுதியாகத்தான் இருக்கும் என அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்திருந்த நிலையில், அதை உண்மையிலேயே செயல்படுத்துவதற்கான நடவடிக்கையை கோத்தாபய தொடங்கியிருக்கிறார்.

''இலங்கையின் மூல உபாய, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த துறை முகத்தை சீனாவின் கட்டுப்பாட்டில் விட்டிருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. எனது சகோதரர் மகிந்த ராஜபக்ஷ காலத்தில் சீனாவின் உதவியுடன் முழுக்க வணிக நோக்கத்துக்காகத்தான் இத் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டது. ஆனால், துறைமுகத்தின் கட்டுப்பாட்டை சீனாவிடம் வழங்கியிருக்கக் கூடாது. இலங்கையின் எதிர்கால முன்னேற்றத்துக்கு சீனாவின் உதவி தேவை என்றாலும் கூட, இதைச் சொல்வதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. இலங்கை மக்களுக்கு இந்த ஒப்பந்தத்தில் விருப்பம் இல்லை. இது இலங்கையின் சொத்து. சீனாவின் கடனை குறிப்பிட்ட காலத்தில் திரும்பச் செலுத்துவோம்'' என தனது நிலைப்பாட்டை தெளிவுபடக் கூறியுள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ.

### சீனா ஏற்குமா?

ஏற்கனவே இருமுறை பேச்சுவார்த்தை நடத்தி கையெழுத்தான இந்த ஒப்பந்தத்தின் காலத்தைக் குறைப்பது அல்லது ரத்துச் செய்வது தொடர்பாக மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்கிற இலங்கையின் கோரிக்கையை சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் ஏற்பாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆனால், புதிய பட்டுப் பாதைத் திட்டத்தின் மூலம் தன்னலமற்ற உலக மேம்பாட்டாளராக தன்னைக் காட்டிக்கொள்ள முனையும் சீனாவின் முயற்சிக்கு ஹம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்த விவகாரம் ஒரு தடைக் கல்லாக அமைந்துள்ளது. இலங்கையின் கோரிக்கையை ஏற்று ஒப்பந்தத்தில் மாற்றம் செய்துகொண்டால், தன் மீதான மரியாதையை உலக நாடுகள் மத்தியில் உயர்த்திக்கொள்ளலாம் என்பதால் ஒப்பந்த மாற்றத்துக்கு சீனா சம்மதிக்கும் என்றே தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றம்: நாம் எதிர்நோக்கும் மிகப் பெரும் சவால்

(முன்னாள் நீதியரசர் ஸலீம் மர்சூப் கடந்த வாரம் கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் சட்டக் கலாநிதி (Doctor of Law LL.D)ப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். நீதியரசர்களான சீ.ஜீ.வீரமந்திரி (1983), ஏ.ஆர்.பி. அமரசிங்க (1998), எம்.டி.எச். (மார்க்) பெர்ணான்டோ (2001) ஆகிய மூவர் மாத்திரமே இலங்கையில் இது வரை இந்த கௌரவத்தைப் பெற்றுள்ளனர். கலாநிதி ஸலீம் மர்சூபின் பட்டமளிப்பு உரையிலிருந்து...)

மாற்றம் என்பது நமது காலத்தின் மிகப்பெரிய சவால். செப்டம்பர் 1968 இல் நான் கொழும்பின் இலங்கை பல்கலைக்கழகத்தின் மாணவராக ஆனதிலிருந்து, வாழ்க்கையின் அப்பட்டமான உண்மைகளை உணரத் தொடங்கினேன். 1971 ஆம் ஆண்டு கிளர்ச்சி வெடித்தது சட்டப் பீடத்தில் நான் பயின்றபோது தான். எங்கள் ஆய்வுத் திட்டங்களில் சில இடையூறுகள் இருந்த போதிலும், எங்கள் இறுதித் தேர்வுகள் ஒத்திவைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த அனுபவத்திலிருந்து நான் கற்றுக் கொள்ள நிறைய இருந்தது.

1971 ஆம் ஆண்டு கிளர்ச்சியைப் பற்றி அதிகம் எழுதப்பட்டுள்ளது. ஆனால் எம்.எஸ்.எம். அய்யூபின் 1971 ஆம் ஆண்டின் பின்னோக்கிய எழுச்சி என்ற தலைப்பிலான ஒரு சிறு கட்டுரையில் விளக்குவது போல, தோல்வியுற்ற கிளர்ச்சி இலங்கையின் அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில், சமூக சமத்துவத்திற்கான கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்காக தீவிர நிலச் சீர்திருத்தச் சட்டம் உட்பட பல நலன்புரி நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் அதனால் நிர்ப்பந்திக்கப்பட்டது.

அரசியலைப் பொறுத்தவரையில், கிளர்ச்சியின் பின்னணியில் இருந்த ஜனதா விமுக்தி பெரமுனாவினால் (ஜே.வி.பி), பிரிட்டிஷ் இறையாண்மையிலிருந்து சட்டபூர்வமாக பிரிந்து செல்வதற்கான ஒரு இயக்கத்தை முன்னெடுக்க முடிந்தது. இதன் விளைவாக பிரீவி கவுன்சிலில் முறையீடுகள் செய்வது ரத்து செய்யப்பட்டது மட்டுமல்லாமல், சுதந்திரம் பெற்ற இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு பல வழிகளில் தேசியவாதத்தின் அடையாளமாகக் கூறப்பட்ட 1972 ஆம் ஆண்டு குடியரசுக் கட்சி அரசியலமைப்பு பிரகடனத்துக்கும் இது காரணமாகியது. பிற்பட்ட காலங்களிலும், ஜே.வி.பியினால் நாட்டின் வரலாற்றுப் போக்கை மாற்ற முடிந்தது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கீழ் அமைக்கப்பட்ட பிரபலம் வாய்ந்த பரிவாச ஆண்டுவவின் (தகுதி காண் அரசாங்கத்தின்) அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தத்தை அமல்படுத்துவதில் 2001 ஆம் ஆண்டில் ஜே.வி.பி தான் கருவியாக இருந்தது. அரசியலமைப்புப் பேரவையும் சுயாதீன கமிஷன்களும் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்கள் கணிசமாகக் குறைக்கப்பட்டன. 1971 நிகழ்வுகள், ஒரு சக்தி அல்லது தொடர்ச்சியான சிவில் சமூகப் போராட்டத்தின் மூலம் அரசியல் விருப்பத்தில் தேவையான மாற்றத்தை எவ்வாறு கொண்டு வர முடியும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

நாம் அனைவரும் அறிந்தபடி, சேபியன்களில் மிகவும் முன்னேறிய மனித குலம், நீண்ட கால உருமாற்றத்தின் பின்னர், தற்போது நாங்கள் அடைந்துள்ள முன்னேற்றமான, நவீன, அதிநவீன மற்றும் மிகவும் புத்திசாலித்தனமான மனிதர்கள் என்ற நிலையை அடைந்திருக்கிறது. அதே வளர்ச்சி சகிப்புத் தன்மை, இரக்கம், அக்கறை மற்றும் அன்பு போன்ற அவர்களின் சில மனித குணங்களை குறைத்துவிட்டது என்றே தெரிகிறது.

அது மட்டுமல்லாமல், இணையம், ஸ்மார்ட் போன்கள் மற்றும் மனிதத் தொடர்பு மற்றும் செயல்பாட்டின் பிற நவீன வடிவங்களின் வளர்ச்சி குடும்ப வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் சீர்குலைத்துவிட்டது. யுவல் நோவா ஹராரி தனது புத்தகமான சேபியன்ஸ் மனித குலத்தின் ஒரு சுருக்கமான வரலாற்றில் சுட்டிக்காட்டுவது போல, ''கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் சடவாத நிலைமைகளில் ஏற்பட்ட அதீத வளர்ச்சி, குடும்பம் மற்றும் சமூக வீழ்ச்சியை ஈடுசெய்தது. உலகம் பண்டைய காலங்களிலிருந்து போர்களால் பேரழிவிற்கு உட்பட்டது. அது எதிர்கொண்ட இரண்டு உலகப் போர்களும் மனித குலத்தை போர்களால் சோர்வடையச் செய்தன. மில்லேனியத்தின் தொடக்கத்தில், 2000 ஆம் ஆண்டில், போர்களால் 310,000 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரும் மீதான அதன் தாக்கம் 'ஒரு உலகம் அழிக்கப்பட்டது, ஒரு குடும்பம் பாழடைந்தது, நண்பர்களும் உறவினர்களும் காயப்படுத்தப்பட்டார்கள்'' என்ற நிலையைத் தோற்றுவித்தது. ஹராரி இந்த போர்களால் பாதிக்கப்பட்டவர்களையும் (310,000), 2000 ஆம் ஆண்டில் வன்முறைகளால் கொல்லப்பட்ட 520,000 பேரையும் 'மேக்ரோ வரலாற்று முன்



னோக்கில்' (Macro Historic Perspective) இல் சேர்க்கிறார். பாதிக்கப்பட்ட இந்த 830,000 பேரும் 2000 ஆம் ஆண்டில் இறந்த 56 மில்லியன் மக்களில் 1.5 சதவிகிதத்தினராக உள்ளனர். மரணமடைந்த 56 மில்லியனில் 1.26 மில்லியன் மக்கள் கார் விபத்துக்களிலும் 815,000 பேர் தற்கொலை செய்தும் மரணித்துள்ளனர்.

கட்டாயக் காரணிகளும் ஆத்திர மூட்டல்களும் இருந்தாலும் மூன்றாம் உலகப் போரொன்று நமக்கு உண்மையிலேயே தேவையா என்பதை இந்தக் குறிப்பான நோக்குகள் சிந்திக்க வைக்கின்றன. ஏனெனில் மூன்றாம் உலகப் போர் என்பது மனித குடும்பத்தின் கடைசி யுத்தமாக இருக்கலாம். அது மீண்டும் மீட்டப்பட முடியாது. அணு சக்தியைப் பயன்படுத்திய ஒரு உலகப் போரின் தவிர்க்க முடியாத முடிவு சுய அழிவாக மட்டுமே இருக்கக்கூடும். இதுவே அணு சக்தி தடுப்புக்கான ஒரே காரணமாகவும் இருக்கலாம்.

சமீபத்திய கிறிஸ்ட்சர்ச் பள்ளிவாசல் துப்பாக்கிச் சூடு மற்றும் இலங்கையின் ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புகளில் வெளிப்பட்ட தீவிரமயமாக்கல், வன்முறை தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதம் போன்ற நிகழ்வுகள் அனைத்தும் சமூக நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வுக்கான கடுமையான அச்சுறுத்தல்களாக மாறியுள்ளன. இது பயங்கரவாத எதிர்ப்பு உத்திகளை மறுபரிசீலனை செய்யும் நிலைக்கு சட்ட அமுலாக்க அதிகாரிகளைத் தள்ளியுள்ளது.

ஒக்டோபர் 29 இன் லண்டன் பாலம் தாக்குதல் தீவிரவாதத்தின் விஷத்தை வேரறுக்க இன்னும் பலவற்றைச் செய்ய வேண்டும் என்பதற்கான மற்றொரு எச்சரிக்கையாகும். மே 2009 இல், இலங்கை மீண்டெழுந்த மூன்று தசாப்த கால உள்நாட்டு மோதல்களின் விளைவாக இலங்கை படைகளின் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் போராளிகளுடன் சேர்த்து சுமார் 40,000 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் சிலர் பயங்கரவாத தாக்குதல்களில் கொல்லப்பட்டனர். ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்பும் அதன் பின்விளைவுகளும் இதுபோன்றதொரு உள்நாட்டு மோதல்களுக்கு திரும்பக்கூடும் என்ற அச்சத்தைத் தூண்டியுள்ளது.

என்னைப் பொறுத்தவரையில், ஆன்மீகத்தை வலுப்படுத்துதல், தியான பயிற்சி, விழுமிய மேம்பாடு, குடிமைக் கல்வி, சமூக விழிப்புணர்வை மேம்படுத்துதல் மற்றும் சிவில் சமூக செயல்பாடுகள் போன்றவற்றின் மூலம் சகிப்புத் தன்மை, இரக்கம், அக்கறை மற்றும் அன்பு ஆகிய மிகவும் மதிப்புமிக்க மனித குணாதிசயங்களை மீண்டும் பெறுவது சமகால உலகில் மனிதகுலம் எதிர் கொள்ளும் மிகப்பெரிய சவாலாகும்.

கடந்த காலங்களில் மனித சமுதாயங்கள் ஜனநாயக அரசாங்கத்தின் பல அம்சங்களுடன், சமத்துவ மதிப்பு அமைப்புகள், மனித உரிமை சாசனங்கள், சிறந்த அரசியலமைப்புகள் மற்றும் அதிநவீன சட்ட அமைப்புகளுடன் அரசியல் ரீதியாக வளர்ச்சியடைந்துள்ளன என்பது உண்மைதான். தொழில்துறை புரட்சி தகவல் புரட்சியால் முறியடிக்கப்பட்டுள்ளது. இப்போது நாம் டிஜிட்டல் அல்லது சமூகப் புரட்சியின் மத்தியில் இருக்கிறோம். உலகை மின்னல் வேகத்தில் மாற்றுகின்ற, பொருளாதார மேம்பாட்டுக்கும் மனித நலனுக்கும் சமூக உறவாடலுக்கும் வாய்ப்பளிக்கின்ற தொழில் நுட்பத்தை இது முன்னிலைப்படுத்துகிறது.

குறிப்பாக, செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்ப வாய்ப்புகளின் புதிய எல்லையை பிரதிபலிக்கிறது. மேலும் பல வளர்ந்த நாடுகள் AI ஐ யுத்த விவகாரங்கள், தேசிய பாதுகாப்பு நடவடிக்கைகள், சமூக-பொருளாதார மேம்பாடு மற்றும் கல்வி ஆகியவற்றில் உகந்த பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளன. ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அபுதாபியில் உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) மையப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகத்தை நிறுவுவதன் மூலம் AI இன் முக்கியத்துவம் தற்போது முன்னிலைப்படுத்தப்படுகிறது. இது 2020 செப்டம்பரில் அதன் முதல் மாணவர்களை உள்ளீர்க்கவுள்ளது.

ஆனால் இந்த அனைத்து முன்னேற்றங்களுடனும், இந்த உலகம் இன்னும் மிகப்பெரிய சவால்களை எதிர்கொள்கிறது. ஒரு கவலை என்னவென்றால், 2050 வாக்கில், இன்றைய உலகம் தொடர்ந்து இருந்தால், அது 9 பில்லியன் மக்களுக்கு உணவளிக்க வேண்டும். அப்போது உணவுக்கான தேவை இன்றைய நிலையை விட 60% அதிகமாக இருக்கும். குறிப்பாக புவி வெப்பமடைதல் மற்றும் தீவிர காலநிலை போன்ற சூழ்நிலைகள் - அதிகப்படியான மழை, கடுமையான வறட்சி மற்றும் எப்போதும் பொங்கி எழும் காட்டுத் தீ போன்றகாலநிலை மாற்றங்களுடன் இந்த இலக்கை எவ்வாறு விவசாய உற்பத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தி அடைந்து கொள்வது என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

உலகளாவிய மரக்கறி மற்றும் பருப்பு உற்பத்தியைப் பற்றிய சமீபத்திய ஆய்வில், பசுமை இல்ல வாயு உமிழ்வு அவற்றின் தற்போதைய பாதையில் தொடர்ந்தால், நீர் பற்றாக்குறை மற்றும் உப்புத்தன்மை காரணமாக விவசாய விளைச்சல் 2100 க்குள் 35 சதவீதம் குறையக்கூடும் என்று முடிவுசெய்துள்ளது. புவி வெப்பமயமாதலின் தாக்கம் விவசாயத்துடன் மட்டுப்படுத்தப்படவில்லை. அது கடல் உணவுகள் கிடைப்பதையும் அவற்றின் பாதுகாப்பையும் பாதிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. விவசாய உற்பத்தியின் புதிய முறைகள், செயற்கை இறைச்சி மற்றும் மரபணு மாற்றப்பட்ட உணவு ஆகியவை நடைமுறையில் வந்தாலும், அவற்றின் தாக்கங்கள் 2050 க்குள் உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. எதிர்காலம் இருண்டதாகத் தெரிகிறது.

மறுபுறத்தில், காலநிலை மாற்றமும், பாரிய அளவிலான பூகோள குளிர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய ஒரு பிராந்திய அணு சக்தி யுத்தமும் புவி வெப்பமடைதலில் தலைகீழ் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்று கூறப்படுகிறது. இது பஞ்சத்தையும் நோய்களையும் கொண்டு வரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கிடையில் நாம் தேர்ந்தெடுப்பதற்கு மிகக் குறைவாகவே கிடைக்கும் என்று தெரிகிறது.

### உலகின் ஏற்றத்தாழ்வுகள்: செல்வம் மற்றும் பாலின சமத்துவமின்மை

இது உலகின் பல ஏற்றத்தாழ்வுகளுக்கு என்னை அழைத்துச் செல்கிறது. உலகின் மிக முக்கியமான இரண்டு ஏற்றத்தாழ்வுகளை நான் இங்கு குறிப்பிட நினைக்கிறேன். முதலாவது செல்வம் மற்றும் வருமானத்தின் சமமற்ற விநியோகம். இரண்டாவது பெண்களுக்கு சமத்துவம் வழங்கப்படாமை.

ஏற்கனவே குறிப்பிட்டுள்ள படி, இலங்கையின் சில பகுதிகள் உட்பட உலகின் வளர்ந்த மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட சில பகுதிகளில் பெரிய அளவிலான வறுமை உள்ளது என்பதில் சந்தேகமில்லை. வளர்ந்த சில நாடுகளில் உணவும் ஏனைய வசதிகளும் தாராளமாக இருப்பதாக தெரிகிறது. சமீபத்திய ஒக்ஸ்பாம் புள்ளிவிவர வெளிப்பாடுகளின்படி, எட்டு சூப்பர் செல்வந்தர்கள், அவர்களில் ஆறு பேர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள், உலக மக்கள் தொகையில் பாதிக்குச் சமமான மக்களின் செல்வத்தை வைத்திருப்பது முரண்பாடாக இருக்கிறது. வருமான இடைவெளி தொடர்ந்தும் அதிகரித்து வருவது தெரிகிறது. இது கவனிக்கப்படாவிட்டால் சமத்துவமின்மை வளர்ச்சி அடைந்து சமூகங்களைப் பிரித்து விடும் என ஒக்ஸ்பாம் அறிக்கையில் எச்சரித்துள்ளது. பிரெக்சிட், டொனால்ட் டிரம்ப்பின் பிரச்சாரம் மற்றும் ''இனவெறியின் கவலைக்குரிய உயர்வு மற்றும் பிரதான அரசியலில் பரவலான ஏமாற்றம்'' ஆகியவற்றை அது உதாரணமாக எடுத்துக் காட்டுகிறது.

உலகெங்கிலும் தினசரி அடிப்படையில் 795 மில்லியன் மக்கள் பசியையும், இரண்டு பில்லியன் மக்கள் ஊட்டச் சத்துக் குறைபாட்டையும் அனுபவித்து வருகிறார்கள் என்பதும் முரண்பாடாக இருக்கிறது. உலகளவில் இப்போது அதிக எடையுடன் அல்லது உடல் எடையை விட உடல் பருமனாக இருப்பவர்கள் உள்ளனர். இவர்கள் உலக மக்கள் தொகையில் பாதியளவில் இருப்பார்கள் எனக் கணிக்கப்படுகிறது. இந்தச் சூழலில், ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா மற்றும் பாக்கிஸ்தானில் 2001 ஆம் ஆண்டு தொடங்கியதிலிருந்து யுத்தங்களுக்காக அமெரிக்கா 6.4 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை செலவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இது உலகின் பசியிலுள்ள மக்கள் அனைவருக்கும் உணவளிக்கப் போதுமானது. இந்த ஒற்றை காரணிதான், வாரன் பபெட் மற்றும் பில் கேட்ஸ் போன்ற நியாயமான எண்ணிக்கையிலான பரோபகாரர்களை தங்கள் அரசாங்கத்தால் செய்யப்படும் சேதத்தைத் தவிர்ப்பதற்குத் தூண்டியது.

பாரிய சமத்துவமின்மையில் அடுத்ததாக பாலின சமத்துவமின்மை காணப்படுகிறது. இது ஆணாதிக்கத்திலிருந்து எழும் ஒரு வற்றாத பிரச்சினையாகும். இது மனித குடும்பத்தில் ஆழமாக இயங்குவதாகத் தெரிகிறது. ஹராரி இந்த பிரச்சினையையும் அதன் தீர்வையும் சுருக்கமாகக் கூறினார். ''ஆணாதிக்க சமூகங்கள் ஆண்களை ஆண்களின்பால் சிந்திக்கவும் செயல்படவும் கற்பிக்கின்றன. பெண்களை பெண்ணிய வழியில் சிந்திக்கவும் செயல்படவும் செய்கின்றன. இந்த எல்லைகளைக் கடக்கத் துணிந்த எவரையும் தண்டிக்கின்றன. இணங்கிச் செல்வோருக்குக் கூட சமனான ஊதியம் அளிக்கப்படுவதில்லை. ஒரே வேலைக்கு சமமற்ற ஊதியம் வழங்குவது என்பது அதிகம் எழுதப்பட்டுள்ளது என்றாலும் மிகக் குறைவாகவே அடையப்பட்டுள்ளது.

இலங்கையில், இலங்கை முஸ்லிம்களுக்கு, குறிப்பாக முஸ்லிம் பெண்களுக்கு, காதி நீதிமன்ற முறை மூலம் வழங்கப்பட்ட நீதியின் தரத்தை மேம்படுத்துவதில் நான் சில ஆண்டுகளாக ஈடுபட்டுள்ளேன். போராட்டம் இன்னும் நடந்து கொண்டுதானிருக்கிறது. அது மேலும் உக்கிரமடைந்துள்ளது. புரிந்து கொள்ள முடியாத சில உலமாக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் நடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு சற்று முன்னதாக, அமைச்சரவை அமைச்சர்கள், 'ஆண்' என்ற வார்த்தையை, முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் 12 (1) மற்றும் 14 (1) பிரிவுகளிலிருந்து நீக்குவதற்கான முன்மொழிவை அனுப்பியது. நீதி அமைச்சரும் முஸ்லிம் விவகார அமைச்சரும் கையெழுத்திட்ட கூட்டு குறிப்பின் கட்டமைப்பால் இரண்டு இணைப்புகளுடன் கூடிய அறிக்கையில் இந்த முடிவை எட்ட முடியுமாக இருந்தது என்பது நன்றியுடன் குறிப்பிடத்தக்கது.

முதலாவது இந்தச் சட்டம் சில முற்போக்கான மற்றும் மிகவும் தேவையான திருத்தங்களைக் கொண்டுள்ளது. பின்னர் சட்டத்தை திருத்துவதற்காக சட்ட வரைஞருக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் கொடூரமான விஷயம் என்னவென்றால், காதி நீதிமன்றங்களை முழுநேர மற்றும் தகுதி வாய்ந்த காதிகளை நியமிப்பதன் மூலம் மேம்படுத்தவும், பெண்கள் காதிகளாக நியமிக்கப்படுவதற்கு இருக்கும் சட்ட ரீதியான தகுதியீனத்தை நீக்கவும் குழு முன்வைத்த பரிந்துரை, நீதி மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர்களால் முன்மொழியப்பட்டு பிரதம நீதியரசர் மற்றும் நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்புவதற்குத் தீர்மானித்துள்ள, கூட்டு அமைச்சரவை அறிக்கையின் இரண்டாவது இணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டத்தின் 12 (1) மற்றும் 14 (1) பிரிவுகளை முதலில் திருத்தாமல் பெண் காதிகளை நியமிக்க நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என்பதை இரு அமைச்சர்களுக்கும் அமைச்சரவைக்கும் நன்கு தெரியும் என்று நான் நம்புகிறேன். உலகின் பிற பகுதிகளைப் போலவே ஆணாதிக்கமும் இலங்கையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தெரிகிறது.

(பக்.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல சமூகம் வாழும் ஒரு நாட்டில் சிறுபான்மை சமூகம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?



- ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி -

நாம் வாழும் போது எமது சமூக சூழ்நிலையை (Context) ஆராய்ந்து பார்க்க வேண்டும். நாம் நூறு வீதம் முஸ்லிம்களுடன் வாழ்கின்றோமா? அல்லது பல்லின மக்கள் சமுதாயத்தில் வாழ்கின்றோமா? அல்லது ஜனநாயகம் மிகவும் உயர்நிலையில் காணப்படுகின்ற இடத்தில் வாழ்கின்றோமா? அல்லது சமய உணர்வுகள் அதிகம் உள்ள இடத்தில் வாழ்கின்றோமா? என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அவ்வகையில் நாம் இலங்கையை நோக்குகின்ற போது (Contextualized) இலங்கைச் சமுதாய சூழ்நிலைக்கு ஏற்றவாறு வாழ வேண்டும்.

நாம் இஸ்லாமிய வரலாற்றை ஆராய்ந்து பார்ப்போம். மூஸா (அலை) அவர்கள் எத்தகைய சமுதாயத்தில் வாழ்ந்தார்களோ அந்தச் சமுதாயத்திலிருந்தே அவர் நபியாகவும் தெரிவுசெய்யப் பட்டார். அவர் திடீரென வானிலிருந்து இறக்கப்படவில்லை. மூஸா (அலை) அவர்கள் எந்த மொழியைப் பேசினார்கள்? அந்த சமுதாயம் எந்த மொழியைப் பேசியதோ அதே மொழியைத்தான் மூஸா (அலை) அவர்களும் பேசினார்கள். மூஸா நபி வாழ்ந்த சமுதாயத்தில் மாய வித்தைகளை செய்யும் கலை மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தது. மூஸா (அலை) அவர்களுக்கும் அதே செல்வாக்குத்தான் கொடுக்கப்பட்டது.

இது போன்றுதான் தாவூத் (அலை) அவர்களுக்கும் சபூர் வேதம் யூனானி மொழியில் அருளப்பட்டது. அந்த சமுதாய மக்கள் யூனானி மொழியை அதிகம் பேசியதாலேயே அந்த சமுதாயத்திலிருந்து தாவூத் (அலை) தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கும் அதே சமுதாய மொழியிலான வேதம் அருளப்பட்டது. நபி (ஸல்) அவர்களுக்குக் கூட அறபு மொழியிலேயே அல்குர்ஆன் அருளப் பட்டது. காரணம், அவர் வாழ்ந்த சமுதாயத்தில் அறபுமொழி பேசுபவர்களே அதிகம் காணப்பட்டனர். அம்மக்களுக்கு அறபு மொழியில் அல்குர்ஆனை விளங்கப்படுத்தும் போதே அவர்கள் அதனைப் புரிந்துகொள்வார்கள்.

இதுபோன்று நாம் வரலாற்று ரீதியாகப் பார்த்தால், நாம் எந்த சமுதாயத்தில் வாழ்கின்றோமோ அந்த சமுதாயத்தினது சூழல் அமைவுக்கேற்றவாறே வாழ வேண்டும். நாம் இலங்கைச் சூழலையும் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கை ஆழமான மதப்பற்றுள்ள (Deeply Religious Society) தேசமாகும். இந்நாட்டில் வாழும் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் அவர்களது பௌத்த சமயத்தின் மீது அதிக பற்றுக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். ஹிந்துக்களும் அவர்களது சமயத்தின் மீது பற்றுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். முஸ்லிம்களும் இஸ்லாத்தின் மீது பற்றுள்ளவர்களாக உள்ளனர். கிறிஸ்தவர்களும் அப்படித்தான்.

இவ்வாறான நிலையில் நாம் இந்த சமுதாயத்தில் வாழும்போது இங்குள்ள சூழமைவு (Context) பற்றிச் சிந்திக்க வேண்டும். இலங்கை பல்லின மக்களைக் கொண்டதொரு நாடு. பௌத்தர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடு. இங்கு சிங்கள மக்களின் கலாசாரம் உள்ளது, எமது கலாசாரமும் உள்ளது. எனவே நாம் எல்லா மக்களுடனும் சேர்ந்து நடப்பதே சிறந்தது. இதன் அர்த்தம் எமது சமய, கலாசார விடயங்களை விட்டுக் கொடுப்பது என்பதல்ல. 'முஸ்லிம்கள் இங்கு வந்து முழு நாட்டையும் பிடிக்கப் பார்க்கின்றார்கள், ஆதிக்கம் செலுத்தப் பார்க்கின்றார்கள்' என்கின்ற யோசனையை நாம் அடுத்தவர்களுக்கு வழங்கக் கூடாது. எனவே நாம் வாழும் சூழலைப் பற்றி சிந்தித்து, இங்கு வாழும் மாற்று மதத்தவர்களோடு எப்படி நெருக்கமாகப் பழக வேண்டும் என்பதை பற்றிச் சிந்திக்க வேண்டும்.

இவ்விடயத்தில் நாம் உண்மையிலேயே இலங்கையின் கலாசாரத்தைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும். இங்கு பேசப்படுகின்ற மொழிகளை அறிந்து பேச வேண்டும். இங்குள்ள மக்களோடு சேர்ந்து நடந்துகொள்ள வேண்டும் என்பதே முதல் விடயமாகும். இதனை எமக்கு அரசியல் ரீதியாகச் செய்ய முடியும். கல்வி ரீதியாகச் செய்ய முடியும். எமது அயலவர்களுடனும் செய்ய முடியும். இப்படித்தான் இவ்விடயம் உலகம் முழுவதும் நடந்துள்ளது.

நாம் எங்கு வாழ்கின்றோமா அந்தச் சூழலின் பின்னணி குறித்து அறிந்தி ருக்க வேண்டும். அந்தச் சூழலின் வரலாற்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். இதற்கு ஆங்கிலத்தில் Contextualized Living என்பார்கள். ஆங்கிலத்தில் 'If you are in Rome, act like a Rome' என்பார்கள். அதாவது 'நீங்கள் ரோம் நாட்டிற்குச் சென்றால் ஒரு ரோமன் எப்படி வாழ்கின்றானோ அப்படி வாழுங்கள்' என்பதாகும். அதுபோன்று நாம் இலங்கையில் வாழும் போதும் இந்நாட்டின் சூழல் அமைப்பை நன்றாகப் புரிந்துகொண்டு இந்நாட்டிற்கு ஏற்றவாறு வாழ்ந்தால் எல்லோருக்கும் நலமாக வாழ முடியும்.



# நெருக்கடிகளின் அத்திவாரம்

• விக்டர் ஐவன்

தமிழில்: ராஃபி சரிப்தீன்

இந்த ஜனாதிபதித் தேர்தலில் உண்மையாக போட்டியிட்ட வேட்பாளர்கள் அனைவருமே கவர்ச்சியான தேர்தல் பிரகடனங்களை முன் வைத்திருந்தனர். எனினும் நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கின்ற அடிப்படையிலான தேர்தல் பிரகடனங்கள் எதையுமே காண முடியவில்லை. கடன் பிரச்சினை என்பது மாத்திரம் இலங்கையில் தீர்க்கப்பட வேண்டிய ஒரேயொரு பிரச்சினையல்ல என்ற போதிலும் வெளிநாட்டுக் கடன் சுமையைக் குறைப்பது தொடர்பான சிறந்த யோசனைகள் ஜனாதிபதி வேட்பாளர் ரொஹான் பல்லேவத்த என்பவரால் மாத்திரம் முன்வைக்கப்பட்டிருந் ததைக் காண முடிந்தது.







அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் தன்னிடம் பொறுப்பளிக்குமாறு கோரியது சாதாரண அளவிலேனும் ஆரோக்கியமான நிலையில் இருக்கின்ற நாட்டையல்ல. மாறாக அனைத்துத் துறைகளிலும் வீழ்ச்சி கண்ட நிலையிலுள்ள நாட்டையே அவர்கள் தங்களிடம் பொறுப்பளிக்குமாறு கோரியிருந்தனர். வீழ்ச்சியடைந்த நிலையிலிருந்து நாட்டை கட்டியெழுப்புவதற்கான சிறந்த நோக்கினை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட எந்த அபேட்சகரிடமும் காண முடியவில்லை.

## நாட்டின் நெருக்கடி

ஒரு நாடு என்ற அடிப்படையில் இலங்கை அடைந்திருக்கின்ற பாதகமான நிலை குறித்து கீழ்வருமாறு குறிப்பிடலாம்

1. சமூகக் கட்டமைப்பானது சமூக முறையில் இருக்க வேண்டிய ஐக்கியத்தை இழந்து இன, மத ரீதியாக பிரிந்து எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சண்டைகள் ஏற்படலாம் என்ற நிலையிலே காணப்படுகின்றது.

2. அரசாங்கத்தின் பிரதான தூண்களாகக் கருதப்படுகின்ற அரசியலமைப்பு, நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம் போன்ற துறைகளுக்கிடையே இருக்க வேண்டிய கட்டுப்பாடுகளையும் சீரான நிலையினையும் இழந்திருப்பதுடன் அரச நிறுவனங்களும் செயற்திறன் அற்ற நிலையில் காணப்படுகின்றன.

3. அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்தும் நாட்டின் பிரஜைகளுக்கிடையே இருக்க வேண்டிய தொடர்புகள் குறித்தும் குறிப்பிட வேண்டி நிலையில் இருக்க வேண்டிய அரசியல் யாப்பானது தொடராக பல திருத்தங்களுக்கு உட்பட்டு அரசியல் யாப்பொன்றில் இருக்க வேண்டிய நேர்த்தியையும் ஒருமைப்பாட்டினையும் இழந்து குழப்ப நிலையில் இருக்கின்றது.

4. சட்டத்தை இயக்குதல் மற்றும் சட்ட அமுலாக்கல் என்பவற்றுக்கான நிறுவன முறைகள் வலுவிழந்து ஊழலால் பாதிக்கப்பட்டு சிக்கலான நிலைக்குள்ளாகியிருக்கின்றது.

5. அரச ஊழியர்களின் தொகை 15 இலட்சம் என்ற அளவுக்கு விசாலமாக இருப்பதுடன் அரச ஊழியர்களின் வினைத்திறன் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கான செலவுகள் அரசினால் சுமக்க முடியாத சுமைகளாக மாறியிருக்கின்றது.

6. வெளிநாட்டுக் கடன்படு நிலை உச்ச மட்டத்தில் காணப்படுவதுடன் கடன் தவணை மற்றும் கடன் மீதான வட்டித் தவணைகள் என்பவற்றைச் செலுத்துவதற்காக வருடாந்தம் 4000 மில்லியன் டொலர்கள் தேவைப்படுகின்றன. இது நாட்டின் வருமான எல்லையை விட அதிகரித்ததாக காணப்படுகின்றது.

7. பொருளாதாரத்தின் அனைத்துப் பகுதிகளும் வீழ்ந்துவிடும் நிலையிலேயே காணப்படுகின்றன. கிராமிய விவசாயமும் வாணிப விவசாயமும் அதில் பிரதான இடத்தினை கின்றன.

8. இலங்கையின் கிராமிய மக்கள் மாத்திரமன்றி நகர்ப் புறங்களில் வாழ்கின்ற நடுத்தர வருமானம் பெறுகின்றவர்களும் கடன் சுமையில் நசுங்கிய நிலையிலேயே காணப்படுகின்றனர்.

## நெருக்கடியின் போக்கு

லான நெருக்கடியினை எவ்வாறு வெற்றி கொள்வது என்பது புதிய ஜனாதிபதியின் முன்னால் இருக்கின்ற சவாலாகக் குறிப்பிடலாம். 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை சிறந்த நிலையிலே காணப்பட்டது.

சுதந்திரம் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் ஆசிய நாடுகளின் வரிசையில் தனிநபர் வருமானம் கூடிய நாடாக முதலாம் இடத்தை ஜப்பான் பிடித்திருந்த நிலையில் இரண்டாம் இடத்தில் இலங்கை காணப்பட்டது. உட்கட்டமைப்பு வசதிகளில் கூட ஆசிய நாடுகள் மத்தியில் இலங்கை சிறந்த நிலையிலேயே காணப்பட்டது. சுதந்திரம் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் இலங்கையில் 1000 கி.மீ. அளவான புகையிரதப் பாதைகள் காணப்பட்டதுடன் 1900 ஆம் ஆண்டுகளில் மொத்த வருமானத்தில் 30 வீத வருமானம் புகையிரதங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ளும் அளவுக்கு புகையிரதங்களினால் பெற்றுக் கொண்ட வருமானங்கள் விசாலமானதாகக் காணப்பட்டது.

சுதந்திரம் கிடைக்கும் பொழுது ஆசியாவில் காணப்பட்ட துறைமுகங்களில் முதலாம் இடத்தை கொழும்புத் துறைமுகம் பெற்றிருந்தது. வருடம் ஒன்றில் கொழும்புத் துறைமுகத்திற்கு வருகின்ற கப்பல்களின் எண்ணிக்கை 4400 ஆகும். சுதந்திரம் கிடைத்து 70 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் அதே அளவிலான கப்பல்களே இன்றளவிலும் கொழும்புத் துறைமுகத்திற்கு வருகின்றன.

இலங்கையில் ஏற்றுமதியினை நோக்காகக் கொண்ட கைத்தொழில் பொருட்களை உற்பத்தி செய்கின்ற துறையொன்று இல்லாதிருந்த போதிலும் தேயிலை, தென்னை, இறப்பர், வாசனைத் திரவியங்கள் என்பன அடங்கிய சக்திவாய்ந்த ஏற்றுமதி வியாபார முறை ஒன்று இலங்கைக்கு இருந்தது. சிலோன் டீ என அடையாளப்படுத்தப்பட்ட இலங்கையின் தேயிலை உலகிலேயே மிகச் சிறந்த தேயிலையாகக் கருதப்பட்டது. இலங்கையின் அதிக செலவிலான நலன்புரி நடவடிக்கைகள் இந்த வருமானத்தின் மூலமாகவே செயற்படுத்தப்பட்டு வந்தன.

அந்தக் காலப்பகுதியில் இன்று இருப்பதனை விட எளிமையான அரசியல் முறை ஒன்றே காணப்பட்டது. அத்துடன் சுயாதீனமான நீதிக் கட்டமைப்பொன்றும் நாட்டில் இருந்து வந்தது. அந்த காலப்பகுதியில் ஆளுனர் என்பவர் இன்றைய ஜனாதிபதி போன்றே அதிகாரங்களைப் பெற்றிருந்த போதிலும், ஏதேனும் ஒரு தவறு அவர் மூலமாக நிகழும் சந்தர்ப்பங்களில் ஆளுனருக்கு எதிராகவேனும் தீர்ப்பு வழங்குவதற்கு அன்றைய நீதித் துறை பின்வாங்கவில்லை. பிரித்தானியர்கள் இலங்கையை விட்டுச் செல்லும் போது ஊழலான ஆட்சி முறை காணப்படவில்லை. பிரித்தானியா இலங்கையை விட்டுச் செல்லும் போது 1200 மில்லியன் ரூபா அந்நியச் செலாவணியை விட்டுச் சென்றிருந்தது.

## நிலைமை மறு பக்கம் திருப்புதல்

அதுவரையிலான காலப்பகுதியில் நடைபெற்று வந்த நல்லாட்சி நிலை மாற்றமடைந்தது வெள்ளையர்களாலல்ல. வெள்ளையருக்குப் பின்னர் ஆட்சியைக் கையிலெடுத்த எமது சுய நலவாதிகள் மூலமாகவாகும்.

இன பேதங்கள் தொடர்பில் இருக்கின்ற அங்கீகாரங்கள் நீக்கப்பட்டு சிறந்த விதத்தில் காணப்பட்ட இன மத ஒருமைப்பாடுகள் வலுப்பெறும் அமைப்பில் இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேவையை சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர்.

பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் வெளிநாட்டவர்களே பதவிகளை வகித்து வந்தனர். அவர்களது சம்பள அளவுகள் தீர்மானிக்கப்பட்டது அவர்கள் சொந்த நாட்டிலிருந்து இங்கு வந்திருப்பவர்கள் என்ற விடயம் கருத்தில் கொள்ளப்பட்ட நிலையிலாகும். சுதந்திரம் கிடைத்ததன் பின்னர் உள்நாட்டவர்கள் அந்தப் பதவிகளுக்காக நியமிக்கப்பட்டனர். எனினும் அவர்களுக்கான சம்பளங்கள் நாட்டின் வருமானத்துடன் ஒப்பிடும்போது விசாலமான தொகைகளாகக் காணப்பட்ட போதிலும் அந்த சம்பளங்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

சுதந்திரத்தின் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட மானியங்கள் வழங்கும் நடைமுறையானது வாக்குகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. ஏழை-பணக்காரன் என்ற பாகுபாடின்றி வழங்கிய அரிசிமானிய முறையானது கல்வி, சுகாதாரம் போன்ற முக்கியமான துறைகளுக்கு செலவிடும் நிதியிலும் பார்க்க கூடிய நிதி செலவிடப்படுவதாக இருந்தது. ஜன சத்துவ என்ற திட்டமானது வாணிப பயிர்த் தோட்டங்களுக்கு பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தியது.

வெளிநாட்டுக் கம்பனிகள் வசமிருந்த காணிகள் சுவீகரிக்கப்பட்டன. அவற்றைப் பராமரிப்பதற்கான இயலுமை அற்ற நிலையிலேயே அவை சுவீகரிக்கப்பட்டன. தேயிலையின் தரத்தினைப் பாதுகாத்துக் கொள்வதில் தோல்வி கண்டதன் காரணமாக இலங்கைத் தேயிலைக்கு இருந்து வந்த உலக அங்கீகாரம் வீழ்ச்சி கண்டது.

சிங்கள மொழிக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கும் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட மொழிக் கொள்கையானது தமிழ் மக்களை தீவிரவாதிகள் என்ற நிலைக்கு தள்ளிவிட்டது மாத்திரமன்றி நாட்டு மக்களுக்கு மும்மொழிகளையும் கற்றுக் கொள்வதற்கிருந்த சந்தர்ப்பத்தையும் இல்லாமல் செய்தது.

நாட்டின் இன மதம் சார்ந்த கிளர்ச்சிகளை எமது தலைவர்களால் முகாமைப் படுத்திக் கொள்ள முடியாமல் போனமையை நாடு பாதாளத்தில் விழுவதற்கான முக்கிய காரணமாகக் கருதலாம். எமது நவீன காலத் தலைவர்கள் நாட்டை கட்டியெழுப்பத் தவறினார்கள் என்பது மாத்திரமன்றி வாக்குகளைப் பெறுவதற்காக இன, மத ரீதியான கிளர்ச்சிகளை ஊக்குவிக்கும் நடைமுறையையும் பின்பற்றி வந்தனர். 30 வருடங்களாக நாட்டில் இரத்த ஆறு ஓட்டப்படுவதற்கும் இதுவே காரணமாக அமைந்திருக்கின்றது.

அந்த நீண்டகால நெறிபிறழ்ந்த காலப் பகுதியில் இடம்பெற்ற உயிரிழப்புக்களும் பொருளிழப்புக்களும் மட்டிட முடியாத அளவு விசாலமானவை. கலவரங்கள் காரணமாக கணிசமான தொகையினர் மரணித்த போதிலும் சாகாமல் வாழ்வதற்கு சிலருக்கு அதிஷ்டம் கிட்டியது. எனினும் பின்னர் அவர்கள் மனதளவில் கொல்லப்பட்டனர். இந்த ஒழுக்கமில்லாத செயற்பாடுகள் காரணமாக சமூகம் மாத்திரமன்றி அரசியல், மதம், கலை என்ற அனைத்துமே விகாரமாகிவிட்டது. பொதுச் சொத்துக்களைக் கொள்ளையிடுவது ஆட்சியாளர்களின் ஒரு முக்கியமான பண்பாக மாறியதும் பாரிய அளவுகளில் ஊழல்கள் இடம்பெற்றதும் நீண்டகாலமாக நாட்டில் வரையறையற்ற சூழல் காணப்பட்ட காலப் பகுதியிலாகும். யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் நாட்டை மீளக் கட்டமைக்காததன் விளைவாக இன்று நாடு பல் பிரச்சினைகளை எதிர்கொண்டிருக்கின்றது எனலாம்.

## தேசிய ஒருமைப்பாடு

இனம், மதம், சாதி; போன்ற வேறுபாடுகள் காரணமாக ஏற்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் கலவரங்கள் நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பாரிய தடையாகக் காணப்படுகின்றது. அவ்வப்போது இன மத சாதி அடிப்படையிலாக ஏற்பட்ட கலவரங்களை அடக்குவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை மீண்டும் ஏற்படாமலிருப்பதற்கான நிலையில் நவீன இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கான தீர்வு கள் காணப்படாமல் நாட்டில் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்த முடியாது. இவ்வாறான நிலையில் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா என்பன வெவ்வேறு அடிப்படைகளில் தீர்வுகளைக் கண்டுள்ளன. ஆனால் மேற்படி நிலையின் பாதகமான தன்மைகளைக் புரிந்துகொள்ள முடியுமான நிலையை இலங்கை இன்னும் அடையவில்லை.

கலவரங்கள் மற்றும் சொத்து அழிவுகளுக்கு இடம்கொடுக்காத அடிப்படையிலான சூழல் அமையும் போது மாத்திரமே ஒரு நாட்டின் பொருளாதாரம் சிறந்த நிலையில் காணப்படும். பாதுகாப்பு தொடர்பில் அச்சத்தில் இருக்கும் ஒரு சமூகத்தில் பயத்துடன் இருப்பவர்கள் வியாபாரங்களுக்காக முதலீடுகள் மேற்கொள்ள மாட்டார்கள். சமாதானமான சூழலும் அரசியல் ஸ்திரத் தன்மையுமுள்ள நாடுகளுக்கு மாத்திரமே வெளிநாட்டவர்கள் தமது முதலீடுகளை மேற்கொள்வர். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையை ஆபத்தான நாடாகவே கருதுகின்றனர்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

# “நான் அரசியலில் இருக்கும் வரை ஒருபோதும் முஸ்லிம்களின் கலாசாரம், தனியார் சட்டங்களில் கைவைப்பதற்கு இடமளிக்கப்போவதில்லை”

## பாராளுமன்ற உறுப்பினர் பைசர் முஸ்தபா



• **ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் என்ற வகையில் நீங்கள் இம்முறை தேர்தல் பெறுபேற்றை எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

நாம் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ அவர்களுக்கு ஆதரவு வழங்கினோம். அவர் சிறப்பானதொரு வெற்றியைப் பதிவுசெய்தார். ஆனால் இதையும் விட முஸ்லிம் சமூகம் இந்த வெற்றியின் பங்காளர்களாக இருந்திருக்க வேண்டும் என்ற கருத்தில் நாம் இருந்தோம். ஆனால் எமது முஸ்லிம் தலைவர்கள் இருவரும் முஸ்லிம் சமூகத்திற்குள் பகைமையையும் குரோதத்தையும் விதைத்து கோட்டாபய ராஜபக்ஷவை முஸ்லிம் சமூகத்தை விட்டும் தூரமாக்குவதற்கு பாரிய முயற்சிகளை மேற்கொண்டனர். அதுபோன்று அவர்களுக்கு 19 பாராளுமன்ற உறுப்பினர்களும் காணப்பட்டனர். ஆனால் எமது கட்சியில் நாம் இருவர் மாத்திரமே இருந்தோம். நான் தொடர்ந்தேர்ச்சியாக கூறி வந்த விடயம்தான் முஸ்லிம் சமூகம் பெரும்பான்மை மக்களுடன் பெரும்பான்மையுள்ள இடத்தில் இருக்க வேண்டும் என்கின்ற விடயம்.

ஆனால் பெரும்பான்மை மக்களுள் சிறு பகுதியினராலும் சிறுபான்மை மக்களுள் பெரும் பகுதியினராலும் தெரிவுசெய்யப்படுகின்ற ஜனாதிபதியே இவர்களது எதிர்பார்ப்பாகவும் சூத்திரமாகவும் காணப்பட்டது. இந்தச் சூத்திரம் சரிப்படுவதில்லை. அதுபோன்று எப்பொழுதும் இனவாதத்தை விதைத்து ஜனாதிபதிகளை உருவாக்கி தங்களுக்கு ஆட்சியில் இருக்க முடியும் என்றே தமிழ் முஸ்லிம் கட்சிகள் நினைத்தன. இவர்கள் இப்படி நினைக்கும் போது சிங்கள மக்களும் நீங்கள் ஆட்சியில் இருக்கப் பார்க்கின்றீர்கள் என்றால் நாங்களும் ஒன்றுபட்டு தலைவர் ஒருவரை உருவாக்குவோம் என்ற சிந்தனையிலேயே இம்முறை சிங்களப் பெரும்பான்மை சக்திகள் கோட்டாபய ராஜபக்ஷ அவர்களை சிறப்பான வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள்.

• **சிங்கள வாக்குகளால் ஜனாதிபதித்தேர்தல் ஒன்று வெற்றிகொள்ளப்பட்டுள்ளது என்கின்ற கருத்து முன்வைக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் நீங்கள் குறிப்பிட விரும்புவதென்ன?**

ஆம், மூன்றரை லட்சம் முஸ்லிம் வாக்குகள் கிடைத்தன. தமிழ் மக்களிடமிருந்து ஓரளவு வாக்குகளும் கிடைத்தன. ஆனால் சிங்களப் பெரும்பான்மை மக்களது வாக்குகளாலேயே கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் வெற்றியீட்டியுள்ளார். இதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் சிறப்பான வெற்றியை பதிவுசெய்தது சிறுபான்மை மக்களது வாக்குகளினால் அல்ல, சிங்களப் பெரும்பான்மை மக்களது வாக்குகளே அவரது சிறப்பான வெற்றிக்குக் காரணமாகும்.

• **இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம்கள் அவர்களது பாதுகாப்பை முன்னிறுத்தியே வாக்களித்தனர். தற்பொழுது அவர்களது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனக் கருதுகிறார்கள். புதிய அரசாங்கத்தின் கீழ் இவ்விடயம் எவ்வாறு அமையும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

முஸ்லிம் சமூகத்திற்குள் பகைமையையும் குரோதத்தையும் பரப்பிய குழுவினர் அரசியல் இலாபம் தேட மீண்டும் முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றும் விடயமே இது.

• **ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்கியதன் காரணத்தினால் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் என்ற வகையில் உங்களுக்கும் அமைச்சுப் பதவியொன்று கிடைக்கும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அது நிகழவில்லை. இவ்வாட்சியின் கீழ் முஸ்லிம்களது அரசியல் கேள்விக்குறியாக இருப்பதை நீங்கள் கருதவில்லையா?**

பொதுஜன பெரமுனவில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இல்லை என்பதால் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிக்கு ஒரு முஸ்லிமை பெயரிடுமாறு நாம் வேண்டுகோள் விடுத்தோம். ஆனால் அவர்கள் அதனைச் செய்யவில்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு இரண்டு கபினட் அமைச்சுப் பொறுப்புக்களே கிடைத்தன. அமைச்சரவையில் முஸ்லிம் ஒருவரை பெயரிட்டிருக்க வேண்டிய பொறுப்பு சுதந்திரக் கட்சிக்கு இருந்தது. ஆனால் அதில் குறைபாடு நிகழ்ந்திருப்பதை காண முடிகிறது.

ஆனால் ஒருவகையிலும் ஜனாதிபதிக்கோ பிரதமருக்கோ விரல் நீட்ட முடியாது. இது அவர்களது பிழையல்ல. சுதந்திரக் கட்சி எடுத்திருக்க வேண்டியதொரு தீர்மானம். நாட்டிற்காக வேண்டியும் சுதந்திரத்திற்கு பின்னர் தொட்டு அமைச்சரவையில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் காணப்பட்டு வந்துள்ளது என்பதற்காக வேண்டியும் குறிப்பாக அவ்வுரிமை வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்ற காரணத்தின் அடிப்படையிலாவது சுதந்திரக் கட்சி அம்முடிவை எடுத்திருக்க வேண்டும்.

இராஜாங்க அமைச்சுப் பதவிக்கு எனது பெயர் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. ஆனால் நான் இருமுறை கபினட் அமைச்சுப் பதவியை வகித்தவன் என்ற வகையில் ஏனைய சிரேஷ்ட உறுப்பினர்கள் இராஜாங்க அமைச்சுப் பதவியை பொறுப்பேற்ற வேளையிலும் கூட நான் எனது மனச்சாட்சிப்படி அப்பதவியை பொறுப்பேற்கவில்லை. நான் கொள்கை அரசியல் செய்பவன் என்ற வகையில் வரலாற்றில் ஒரு சம்பிரதாயம் இருக்கிறது கபினட் அமைச்சராக பதவி வகித்ததன் பின்னர் ராஜாங்க அமைச்சையோ, பிரதியமைச்சுப் பதவியையோ பொறுப்பேற்பதில்லை.

ஆனால் இலங்கை அரசியலில் கபினட் அமைச்சர்கள் பிரதியமைச்சுப் பதவிகளையும் பொறுப்பேற்கிறார்கள். அத்துடன், தமிழ், சிங்களப் பிரதிநிதித்துவம் அமைச்சரவையில் காணப்படுகின்றபோது நான் இராஜாங்க அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றிருப்பின் எமது சமூகத்தை மாற்றாந்தாய் பிள்ளை போல் கவனிப்பதற்கு நான் உடந்தையளித்தவன் போல் ஆகிவிடுவேன்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் இளம் துடிப்புள்ள உறுப்பினர்களின் பங்களிப்பையும் தமது ஆட்சிக்கு பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கிலேயே இராஜாங்க அமைச்சுப் பதவிகளை வழங்குவதாகத் தெரிவித்திருந்தார். இதனால் நான் ஜனாதிபதியின் கருத்துக்குக் கட்டுப்பட்டு இளையோருக்கு வாய்ப்பைக் கொடுத்தேன்.

• **எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் எண்ணம் இருக்கிறதா?**

ஆம், நான் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெறும் நம்பிக்கையில் உள்ளேன். நான் ஒருபோதும் சமூகத்தை விற்று அரசியல் செய்பவனல்ல. நான் நேர்மை யான அரசியலில் ஈடுபடும் ஒருவன். நான் எப் பொழுதும் மக்களுக்காக வேண்டி குரல் கொடுத்தி ருக்கின்றேன். சேவையாற்றியிருக்கின்றேன். எனவே மக்கள் அதற்கான வரத்தை எனக்கு தொடர்ந்தும் தருவார்கள் என்ற நம்பிக்கை என்னிடம் உள்ளது.

• **தேர்தல் பெறுபேறுகளைத் தொடர்ந்து முஸ்லிம்களுக்குச் சொந்தமான சில வர்த்தக நிலையங்கள் தாக்குதல்களுக்கு உள்ளாகின. கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டதை அடுத்து நாட்டு மக்களுக்கு ஆற்றிய விஷேட உரையில் தெரிவித்த விடயங்கள் மற்றும் முஸ்லிம் எம்பிக்கள் எவருக்குமே அமைச்சுப் பதவிகளை வழங்காத விடயம் என்பவற்றிலிருந்து முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்கின்ற விடயம் புலப்படுகிறதல்லவா?**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் ஒருபோதும் முஸ்லிம்களுக்கு எதிரானவரல்ல. அவர் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதுமில்லை. இந்நாட்டில் சகல இன மக்களுக்கும் ஒற்றுமையாக வாழக் கூடிய சூழலை உருவாக்குவதே அவரது ஒரே எதிர்பார்ப்பு. ஒரு சில குழுக்கள் இன்னும் அவரை அரசியல் ரீதியாக முஸ்லிம் சமூகத்தை விட்டும் தூரமாக்குவதற்கு முயற்சிக்கும் நடவடிக்கைகளே இவை.

தேர்தல் பெறுபேறுகள் வெளியானதை அடுத்து முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் தாக்கப்பட்டதாக மக்கள் மத்தியில் பீதியை உண்டாக்குவதற்கு ஒரு சிலர் கூறியிருப்பார்கள். ஆனால் அவ்வாறு இடம்பெற்றதாக நான் நம்புவதில்லை. இது முற்றிலும் பொய்யானது. தேர்தல் காலத்தில் முஸ்லிம் சமூகத்தின் மீது ஏற்படுத்திய பீதியே இன்னும் முன்னகர்த்தப்படுகிறது. இது கோட்டாபய ராஜபக்ஷ அவர்களுக்கு எதிரான சேறுபூசும் நடவடிக்கைகள். இனவாதத்தை விதைப்பதற்கு மாத்திரமே இவர்கள் பழக்கப்பட்டுள்ளனர். தற்பொழுது இவர்களுக்கு [illegible] வதற்கு நேரிட்டுள்ளது. ஆளும் அதிகாரமின்றி அரசியல் செய்த பழக்கம் இவர்களிடம் இல்லை.

• **முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால அரசியல் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

முஸ்லிம் சமூகத்திலுள்ள இனவாதக் கட்சிகளை முற்றாக இடைநிறுத்தி, தேசிய அரசியலில் பிரவேசிக்காவிட்டால், முஸ்லிம் என்கின்ற லேபலில் அரசியல் செய்ய முற்பட்டால் இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கு பாரிய சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியேற்படும். குறிப்பாக 60 வீதமான முஸ்லிம்கள் சிங்களக் கிராமங்களைச் சார்ந்தே வாழ்கிறார்கள். இதனால் இனத்துவ அடையாள பதாதைகளை விற்றுச் செய்கின்ற அரசியலை நாம் உடனடியாக நிறுத்திவிட வேண்டும். நாம் இலங்கையர்களாக தேசிய அரசியலில் பிரவேசித்து எமது அரசியல் பயணத்தை தொடர வேண்டும்.

• **மீண்டும் 2015 இற்கு முற்பட்ட காலத்தை நோக்கி ராஜபக்ஷாக்கள் பயணிக்க மாட்டார்கள் என்பதற்கு நீங்கள் வழங்கும் உத்தரவாதம் என்ன?**

நீங்கள் 2015 இற்கு முற்பட்ட காலத்தைப் பற்றிப் பேசுகின்றீர்கள். ஆனால் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கிந்தோட்ட, அம்பாறை, திகன, என்று ஆரம்பித்து ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் முஸ்லிம் சமூகத்திற்கு வரலாற்றில் ஒருபோதும் ஏற்பட்டிருக்காத மிகப்பெரும் சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியேற்பட்டது. அதனைத் தொடர்ந்து குருநாகல் மாவட்டத்தின் ஹெட்டிபொல உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் முஸ்லிம்கள் பல்வேறு சோதனைகளைச் சந்தித்தார்கள். எனவே 2015ஆம் ஆண்டுக்கு பின்னர் முஸ்லிம்களுக்கு பொற்காலம் உதயமாகவில்லை.

21/4 தாக்குதலுக்குப் பின்னர் வரலாற்றில் என்றும் இல்லாத அளவுக்கு எமது முஸ்லிம் இளைஞர்கள் பல்வேறு நெருக்குவாரங்களுக்கு உட்பட்டார்கள். சுமார் 2300 முஸ்லிம் இளைஞர்கள் எவ்வித குற்றச்சாட்டுக்களும் இன்றியே ஆறேழு மாத காலமாக சிறையில் அடைக்கப்பட்டார்கள். எமது முஸ்லிம் பெண்களுக்கு ஹிஜாப் அணிந்து கொண்டு பாதையில் செல்ல முடியாத நிலை காணப்பட்டது. தாடியை வைத்துக்கொண்டு நடமாட முடியாத நிலை இருந்தது. இதனால் தேசிய பாதுகாப்பை வழங்க முடியாமல் போன கடந்த அரசாங்கம் முஸ்லிம்களுக்கு அழகிய இனவாதக் கருத்துக்களை விதைத்தமையினாலேயே முஸ்லிம்களுக்கு இவ்வாட்சியில் பங்காளர்களர்களாக மாற முடியாமல் போயிருக்கிறது.

• **பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப் படுத்தும் சில உறுப்பினர்கள் ஒரேநாடு ஒரே சட்டம் தொடர்பில் கூடுதலாக கதைத்து வருகிறார்கள். எதிர்காலத்தில் முஸ்லிம் தனியார் சட்டத் திருத்த விடயங்களில் இது எந்தளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

(பக்.14)




அபூ ஷாமில்

# மயிர் பிளக்கும் ஆராய்ச்சி

தேர்தல் முடிவுகள் முஸ்லிம் சமூகத்தைப் பலவாறாகவும் சிந்திக்க வைத்திருக்கிறது. தொடர்ந்து வரும் சூழமைவுகள் வித்தியாசமானதொரு களத்தை தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் இவை பற்றிய எந்தப் பிரக்ஞையும் இல்லாமல் சமூகம் மயிர் பிடுங்கிக் கொண்டிருப்பது ஆச்சரியமாகத் தான் இருக்கிறது.

இந்தக் களேபரத்துக்குள்ளால் தான் உத்தம நபி உதித்த மீலாத் நிகழ்வுகளுக்குள்ளால் நபிகளாரின் முபாரக்கான திருமுடி தரிசனமும் நடந்தேறியது. புத்தரின் முடி, பல் காட்சிப்படுத்தப்படுவது போல ஊடகங்களில் இது விளம்பரப்படுத்தப்படாவிட்டாலும் சமூகப் பரப்பில் இது ஒரு அலையை ஏற்படுத்தியதை மறுக்க முடியாது. பக்தர்கள் புடை சூழ, தலைமை ஷெய்கினால் சிரமேற் கொண்டு கொண்டு வரப்பட்ட திருமுடியைத் தரிசிப்பதற்கு பக்தர்கள் கியூவில் நின்ற காட்சிகளையும் கண்ணாரக் காண முடியுமாகவிருந்தது. குறிப்பாக பெண்கள் பக்தி பூர்வமாக திருமுடியின் பக்கம் ஈர்க்கப்பட்டிருந்தார்கள்.

இதற்கிடையில் வழமையான மயிர் பிளக்கும் ஆராய்ச்சிகளும் தொடரப்படாமல் இல்லை. இந்த முடியை ஏன் மதீனாப் பட்டணத்தில் ரஸூலுல்லாஹ்வின் திருப்பள்ளியில் வைத்துக் காட்டப்படுவதில்லை என்றொரு கேள்வி. இது குட்டையாக இருக்கிறதே, இது ரஸூலுல்லாஹ்வின் எந்தப் பகுதியிலிருந்து எடுத்த முடி என்று மற்றுமொரு கேள்வி. ரஸூலுல்லாஹ் இரண்டு தடவைகள் மொட்டையடித்ததாக வரலாற்றில் சொல்லப்படுகிறது. இது ஹஜ்ஜில் மொட்டை அடித்த முடியா, ஹுதைபியாவில் மொட்டை அடித்ததா என்றுமொரு கேள்வி. இது ஹஜ்ஜுப் பெருநாளைக்கு வெட்டியதா, நோன்புப் பெருநாளைக்கு வெட்டியதா, சங்கையான ரமழானில் வெட்டப்பட்டதா, நபிகள் பிறந்த புனித மாதத்தில் வெட்டப்பட்டதா... எனப் பலப் பல கேள்விகள். இப்படிப் பல்வேறு கோணங்களில் மயிர் பிளக்கும் ஆராய்ச்சிகள் இந்தச் சமூகத்துக்கு இந்தத் தலைமுடி விவகாரத்தில்.

இந்தச் சமூகத்தின் இருப்புக்கே அச்சுறுத்தலாகி இருக்கின்ற விடயங்களில் இவ்வாறான ஆய்வுகளும் ஆராய்ச்சிகளும் நடக்கின்றதா? தலைமுடி விவகாரத்தில் சர்ச்சைப்பட்டுக் கொண்டிருக்கும் சமூகம் தலைமூடி பரீட்சை எழுத முடியாமல் தடுக்கப்பட்ட மாணவிகள் விவகாரத்தில் என்ன வகையான ஆராய்ச்சிகளை நடத்தியிருக்கிறது?

இது போன்ற ஆராயப்பட வேண்டிய விவகாரங்கள் எக்கச்சக்கமாக இருக்கும் நிலையில் அவை பற்றி சமூகத்தின் கவனத்தைத் திருப்ப வேண்டியது முக்கியமாகும். முன்பொரு காலத்தில் தொப்பிக்கும் விரலசைவுக்கும் சண்டை பிடிக்கின்ற சமூகமாக முஸ்லிம் சமூகம் அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. புதிய தலைமுறை இப்போது இவைகளுக்கெல்லாம் சண்டை போடுவதை விட்டு விட்டிருக்கிறது. இந்த நிலையில் மீண்டும் மயிர் பிளக்கும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு காலத்தை வீணாக்குவதை விட ஆரோக்கியமான விடயங்களின் பால் கவனத்தைச் செலுத்துவதில் முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

தேர்தலுக்குப் பின்னரான நிலைமைகள் இலங்கையில் முஸ்லிம்களின் வாழ்வொழுங்கு பற்றிய பல தீர்மானங்களை நோக்கிச் செல்ல வேண்டிய சூழலை உருவாக்கியிருக்கின்றன. குறிப்பாக முஸ்லிம் பெண்களின் ஆடை விவகாரம் கேள்விக்குள்ளாக்கப்படும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இந்த நிலையில் முஸ்லிம் சமூகம் செய்ய வேண்டிய ஆராய்ச்சிகளில் முஸ்லிம் பெண்களின் ஆடை ஒழுங்கு என்பது கலாச்சாரமா அல்லது அதனையும் தாண்டிய ஒன்றா என்பது முக்கிய இடம் பிடிக்க வேண்டும். அவ்ரத்தை மறைப்பதற்கு அபாயாவும் ஹிஜாபும் தான் சாதனங்களா, இலங்கைக்கு ஏற்றமான வேறு ஏதேனும் வடிவங்களை அறிமுகப்படுத்த முடியுமா, அல்லது பழைய சல்வாருக்கே மீண்டு செல்வதா என்பன போன்ற ஆராய்ச்சிகள் இனியாவது துவங்கப்பட வேண்டும்.

சம்பிரதாய முஸ்லிம்களுக்கு இருக்கும் அங்கீகாரம் அவர்கள் அணியும் ஆடைக்கு வழங்கப்படுவதில்லை என்றால் பிரச்சினை எங்கே இருக்கிறது என்பது தொடர்பில் ஆராய வேண்டும். பாரம்பரிய முஸ்லிம்கள் முன்னர் அணிந்த சேலை போலத் தான் அணிய வேண்டும் என்றிருந்தால் பாரம்பரிய சிங்களப் பெண்கள் மேலாடை இன்றி ஆடை அணிந்தது போல அணிவதற்கு ஏன் இப்போது நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் இல்லை என்பது தொடர்பில் ஆராய்ச்சி நடத்த வேண்டும். தலைமுடியையும் தனது உடலையும் மறைப்பது பெண்களுக்கு உள்ள உரிமை என்றிருக்கும் போது பெண்களின் ஆடையைக் களையச் சொல்வதற்கு யாருக்கு என்ன உரிமை இருக்கிறது என்பது தொடர்பில் கேள்வி எழுப்ப வேண்டும்.

இவைகளைப் பற்றி ஆராயத் தொடங்கினால் தலைமுடியைப் பிய்த்துக் கொள்ள வேண்டிய அளவுக்கு பிரச்சினைகள் முஸ்லிம் சமூகத்துக்கு இருக்கின்றன. இவை தொடர்பில் சமூகம் தனது ஆராய்ச்சிகளைத் துவங்க வேண்டும். மார்க்கத்தில் இன்னும் என்னென்னவெல்லாம் சேர்த்துக் கொண்டால் நல்லது என்பது பற்றிய ஆராய்ச்சியை விட இருக்கின்ற மார்க்கத்தைப் பாதுகாத்துக் கொள்வதில் சமூகத்தின் கவனம் குவிய வேண்டும். தலைமுடியை மறைக்கும் விவகாரத்தில் பாடசாலை மாணவிகளுக்காக குரல் கொடுப்பதற்கு ஒரு முஸ்லிம் அமைச்சரும் இல்லாத நிலை பற்றிய பேச்சும் அடிபடுகிறது. மறுபுறத்தில் இவர்கள் இருந்தால் மட்டும் என்ன பேசிக் கிழிக்கப் போகிறார்கள் என்ற கருத்தும் இழுத்துப் போடப்படுகிறது. அப்படியானால் எமக்கு அமைச்சர்கள் தேவையா இல்லையா என்ற அடிப்படைப் பிரச்சினையில் இருந்து ஆராய்ச்சியைத் தொடங்க வேண்டியிருக்கிறது.

இந்த நிலையில் மயிர் பிளக்கும் ஆராய்ச்சிகள் என்ன வேண்டிக் கிடக்கிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் 19 இல் கோலாலம்பூர் மாநாடு



ஐந்து நாடுகள் கலந்து கொள்ளும் உச்சிமாநாடு எதிர்வரும் 19 ஆம் திகதி மலேசியாவில் இடம்பெறுகிறது. இம் மாநாட்டில் மலேசியா, பாகிஸ்தான், துருக்கி, இந்தோனேசியா மற்றும் கட்டார் என்பன கலந்து கொள்கின்றன. இஸ்லாமிய நாடுகளின் பரந்த இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான ஆரம்ப வித்தாக இம்மாநாடு அமையும் எனக் கருதப்படுகிறது.

இஸ்லாமிய நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி, பாதுகாப்பு, தலைமைத்துவம், கலாச்சாரம், சுதந்திரம், நீதி மற்றும் நவீன தொழிநுட்பம் போன்ற துறைகளில் இம்மாநாடு ஆர்வம் காட்டுகிறது.

இஸ்லாமிய உலகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான புதிய மூலோபாயங்களை ஆராய்வதே கோலாலம்பூர் மாநாட்டின் நோக்கமாகும் என இம்மாநாடு குறித்து மலேசியப் பிரதமர் மஹாதிர் முஹம்மத் தெரிவித்துள்ளார். பலஸ்தீன மக்கள் மீது தொடர்ந்து மேற்கொள்ளப்படும் இஸ்ரேலிய அத்துமீறல்களை கட்டுப்படுத்த முடியாத நிலை இஸ்லாமிய உலகை பலவீனப்படுத்தியுள்ளது. துருக்கி, பாகிஸ்தான், மலேசியா இணைந்து இஸ்லாமிய எழுச்சியை மீள கொண்டு வர முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எமது அறிவு, ஆற்றல்களை ஒருமைப்படுத்தி ஒருகாலத்தில் காணப்பட்ட இஸ்லாமிய நாகரீகத்தை எம்மால் மீளவும் புதிதாய் ஏற்படுத்த முடியும். இஸ்லாமிய நாடுகள் அனைத்தும் முன்னேற்றமடைய வேண்டும். ஒவ்வொரு நாடும் தன்னை முன்னேற்ற உழைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# டொனால்ட் ட்ரம்பை பதவி நீக்குதவற்கான முஸ்தீபு



அமெரிக்க செனட் சபையின் சட்டப் பிரிவு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு எதிரான இரண்டு குற்றச் சாட்டுக்களை சுமத்தியுள்ளது. இக்குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அமெரிக்க ஜனாதிபதி பதவியிலிருந்து டொனால்ட் ட்ரம்ப் நீக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தமை, காங்கிரஸின் செயற்பாடுகளுக்கு தடையேற்படுத்தியமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்கள் அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி உக்ரேனிய ஜனாதிபதி விளாடிமிர் சிலேன்ஸ்கி இற்கு அழுத்தம் கொடுத்த முயற்சியின் மூலம் அமெரிக்க தேசிய பாதுகாப்பை ஆபத்துக்குட்படுத்தியுள்ளதாக ட்ரம்ப் மீது குற்றம் சுமத்தியுள்ளார். ட்ரம்ப் நாட்டு நலனை விட தன்னுடையை நலனை முற்படுத்துகிறார். பதவியேற்பின் போது செய்த சத்தியப் பிரமாணத்தை முறித்த தலைவர்களுக்குரிய ஒரே மருந்து பதவி நீக்கம் செய்வதுதான் எனவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

# சர்வதேசப் பார்வை

# ரோஹிங்யா படுகொலைகளை மியான்மார் தலைவி ஏற்றுக்கொண்டார்



மியான்மார் இராணுவத்தினால் ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது பொருத்தமற்ற பலப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மியான்மார் தலைவி ஆங் சாங் சூகி ஏற்றுக் கொண்டுள்ளார்.

மியான்மார் அரசாங்கத்தினால் சிறுபான்மை ரோஹிங்யாக்கள் மீது கூட்டுப் படுகொலை நிகழ்த்தப்பட்டுள்ளதாக சர்வதேச நீதிமன்றில் காம்பியா முன்வைத்த முறையீடுகள் மீதான விசாரணை ஆரம்பிக்கப்பட்டு ஒரு நாளின் பின்னரே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதனைக் கூட்டுப் படுகொலை என்பதை ஏற்க மறுத்த ஆங்சாங் சூகி, அங்கு நிலவுகின்ற நெருக்கடிக்கு அரக்கான் ஆயுததாரிகளே காரணம், மியான்மார் அல்ல. பலப்பிரயோகம் செய்ததை நான் பொருத்தமாகக் காணவில்லை. ஆனால் அதுவொரு கூட்டுப் படுகொலை என்ற அளவில் இடம்பெறவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். மியான்மார் மீது குற்றம் சுமத்தியுள்ள காம்பியாவை விமர்ச்சித்த சூகி, இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் (OIC) தூண்டுதலின் பேரிலேயே காம்பியா இக்குற்றச் சாட்டை முன்வைத்திருக்கிறது எனக் கூறினார்.

கூட்டுப் படுகொலைகளைத் தடுப்பதிலும் அதற்கான தண்டனைகளை வழங்குவதிலும் 1948 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட சர்வதேச உடன்படிக்கையை மியன்மார் மீறியுள்ளதாக ஹேக்கில் அமைந்துள்ள சர்வதேச நீதி மன்றத்தில் காம்பியா முறையிட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது இராணுவத்தினரும் பௌத்த தீவிரவாதிகளும் கட்டவிழ்த்து விட்ட கொலைவெறித் தாக்குதல்களினால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள்



கொல்லப்பட்டதுடன் பத்து இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் அண்டை நாடான பங்களாதேஷில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கூட்டுப் படுகொலைகள், பாலியல் வன்முறைகள், வீடுகள், கிராமங்கள் மீதான தீ வைப்புக்கள் என்பன கூட்டுப் படுகொலை எண்ணத்தில் மியான்மார் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டவை என சர்வசே கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்துக்களின் எதிர்ப்பால் முஸ்லிம் பேராசிரியர் ராஜினாமா

பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருத அறிவியல் மற்றும் மதத்துறையில் உதவிப் பேராசிரியராக ஃப்ரோஸ் கான் நியமிக்கப்பட்டதை எதிர்த்து பல்கலைக் கழகத்தின் இந்து மாணவர்கள் ஒரு மாதமாக நடத்திய போராட்டத்தைத் தொடர்ந்து தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

ஃபரோஸ் கானின் நியமனத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்திய மாணவர்களிடம் அவரது பதவி விலகல் குறித்து சமஸ்கிருத அறிவியல் மற்றும் மதத்துறைத் தலைவர் பேராசிரியர் கௌஷ்லேந்திர பாண்டே தெரிவித்தார்.

பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில், கலைத் துறை, ஆயுர்வேதம், சமஸ்கிருத அறிவியல் மற்றும் மதத்துறை என மூன்று துறைகளில் சமஸ்கிருத மொழி கற்பிக்கப்படுகிறது. தர்ம சாஸ்திரத்தை கற்பிக்கும் சமஸ்கிருத அறிவியல் மற்றும் மதத்துறையில்தான் முனைவர் ஃப்ரோஸ் கான் நியமிக்கப் பட்டார். ஒரு முஸ்லிம் நபர் இந்து மதத்தைப் பற்றி எவ்வாறு கற்பிக்க முடியும் என்று மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். கேள்வி எழுப்பிய மாணவர்கள் இந்த நியமனத்திற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஃப்ரோஸ் கான் ராஜினாமா செய்த பின்னர், மாணவர்களின் தர்ணாவும் முடிவுக்கு வந்துள்ளது.

ஃபரோஸ் கான் கானின் நியமனம் விதிமுறைகளின் படியே இருந்தது எனவும், அவரது நியமனம் எந்தவொரு காரணத்திற்காகவும் ரத்து செய்யப்படாது என்றும் பல்கலைக் கழக நிர்வாகம் முன்னதாக தெளிவாகக் கூறியிருந்தது. ஆனால், மாணவர்களின் தொடர்ச்சியான எதிர்ப்பினால், வேறு வழியின்றி பல்கலைக்கழக நிர்வாகம், பின்வாங்க வேண்டியிருந்தது.

# ஈராக் பிரதமர் இராஜினாமா



ஈராக்கின் தெற்கு நகரங்களில் இடம்பெற்று வருகின்ற மக்கள் ஆர்ப்பாட்டங்களில் நிகழ்த்தப்பட்ட வன்முறைகளைத் தொடர்ந்து அந்நாட்டு பிரதமர் ஆதில் அப்துல் மஹ்தி பதவி விலகியிருக்கிறார். அரசியல் ஊழல்களுக்கு எதிராக அந்நாட்டு மக்கள் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் பாரிய ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் டிசம்பர் முதலாம் திகதியன்று கூடிய பாராளு மன்றத்தில் பிரதமரின் இராஜினாமா ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த ராஜினாமா மேலும் நிலைமையை சிக்கலாக்குவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# உலகில் எந்தவொரு ஏழையையும் காண மாட்மோம்- அர்துகான்



செல்வந்த இஸ்லாமிய நாட்டின் வருமானத்துக்கும் ஏழை இஸ்லாமிய நாட்டின் வருமானத்துக்கும் இடையிலான வித்தியாசம் 200 மடங்காகும் என துருக்கியப் பிரதமர் ரஜப் தய்யிப் அர்துகான் தெரிவித்துள்ளார். முஸ்லிம்கள் தமது ஸகாத் கடமையை சரிவர நிறைவேற்றினால் இஸ்லாமிய உலகில் எந்தவொரு ஏழையையும் காணக் கிடைக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவற்றை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரி வித்ததாவது.

இஸ்லாமிய உலகில் எமது பலத்தை ஒருமைப்படுத்துவது எமக்கு மிகவும் முக்கியமானது. இந்த ஒருமைப்பாட்டை அடைந்து கொள்வதற்காக தனது அனுபவங்களைப் பகிர துருக்கி தயாராக உள்ளது. எமது அடிப்படை பணி உலகம் பூராக உள்ள எமது சொந்தங்களின் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதாகும்.

இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் நாடுகளில் சுமார் 350 மில்லியன் மக்கள் மிகுந்த வறுமைக்கு மத்தியில் வாழ்வை பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். நிதி சூழ்நிலைகளும் வரலாற்றுச் சூழ்நிலைகளும் இஸ்லாமிய நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை அடைந்துகொள்வதற்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் தடையாகக் காணப் படுகிறது.

# இஸ்ரேலிய பிரதமரின் பிரத்தானியா விஜயத்திற்கு மறுப்பு



நேட்டோ நாடுகளின் தலைவர்களின் சந்திப்பைத் தொடர்ந்து பிரித்தானியாவுக்கு மேற்கொள்ளவிருந்த இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாஹுவின் விஜயத்திற்கு பிரித்தானியா மறுப்புத் தெரிவித்துள்ளது.

இவ்விஜயத்தில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மைக் போம்பியோ, ஜேர்மன் அதிபர் அன்ஜலா மேர்கல், பிரித்தானிய பிரதம மந்திரி போரிஸ் ஜோன்ஸன், பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோன் போன்றோரை சந்திக்கவிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

போதுமான பாதுகாப்பு வசதிகளை வழங்க முடியாத சூழ்நிலையே விஜயம் மறுக்கப்பட்டமைக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை நெதன்யாஹு மீது உள்நாட்டில் ஊழல், சதி, மோசடிக் குற்றச்சாட்டுகள் போன்ற மூன்று பாரிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூ ஹாமிதீன்

நாம் அனைவரும் எவற்றைப் புனிதம் என்று கருதுகின்றோமோ அவற்றை நேசிக்கிறோம். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுக்கு நாமும் அவதானத்தைக் கொடுப்போம். அவற்றைப் பாதுகாப்போம். புனிதமும், வரலாறும் ஒன்றாக இணையும்போது அவற்றை நாம் மறந்துவிடவோ இவ்விடயத்தில் அசிரத்தையாக இருக்கவோ முடியுமா?

எமது முதல் கிப்லாவும், மூன்றாவது புனிதஸ்தலமுமான மஸ்ஜிதுல் அக்ஸா அமைந்துள்ள அருள்பாலிக்கப்பட்ட பூமி தான் குத்ஸ் (ஜெரூஸலம்) நகரமாகும். அது இன்று ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அங்கு ஆக்கிரமிப்பாளர்களே செல்வாக்குச் செலுத்துகிறார்கள். அதனை இஸ்ரேலின் தலைநகராகவும் பிரகடனப்படுத்திவிட்டார்கள். ஆக்கிரமிப்புக்கு ஆதரவான சில நாடுகள் அதனை அங்கீகரித்துமுள்ளது. இதன் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதனையே இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

மாக எல்லா விடயங்களும் அதன் சகட ஓட்டத்தில் நல்லபடி முடிவடைந்து விடும் என்று கருதுவதுடன் அதற்காக எவ்வித முயற்சிகளையும் முன்னெடுக்காமல் காரியங்கள் வெற்றிபெறுவதற்கான தியாகங்கள் எதனையும் செய்ய முன்வராமல் கனவுலகில் வாழ்வதாகும். இத்தகைய எண்ணங்களை அரசியல், பொருளாதாரம், சமூகம், கல்வி போன்ற பல மட்டங்களில் நாம் காண்கின்றோம். சியோனிச அரசியல் சார்ந்தவர்கள் இப்படி சிந்திப்பது மிகவும் குறைவாகும்.

### 4. அமெரிக்க நிலைப்பாடுகள்

பலஸ்தீன களத்திலிருந்து எகிப்து வெளியேறியது முதல் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த றொனால்ட் ரேகனின் காலத்திலிருந்து (1981 - 1989) அமெரிக்க நிலைப்பாடுகளில் பல அபாயகரமான மாற்றங்கள் ஏற்பட்டன. இதில் பல ஏற்ற இறக்கங்கள் காணப்படுகின்றன. இறுதியாக 'டொனால்ட் ட்ரம்ப்' அவர்களது தீர்மானம் கூட ஒரு திடீர் நிகழ்வன்று என்பதனை நாம் புரிந்து வைத்துள்ளோம். இத்தகைய சில தீர்மானங்களை நோக்குவோம்.

தலைநகராக குத்ஸ் இருக்க வேண்டும்'' என்பதாகும்.

7. டொனால்ட் ட்ரம்ப் காலத்தில் தூதுவராலயம் மாற்றப்பட்டுவிட்டது.

இது நாம் ஏற்கனவே விளக்கிய தொடரின் இறுதி அடையும் சக்தி மூலங்களை நிர்வகித்த முறைமையின் விளைவுமாகும். இக்கால கட்டங்களிலே இஸ்ரேலின் நலன்களை மையப்படுத்திய பல குழப்பநிலைகள் அரங்கேற்றப்பட்டன. 2011 முதல் இன்றுவரை அரபுலகில் இதனை நாம் காண்கிறோம்.

குறிப்பாக இக்கால கட்டத்தில் பலஸ்தீன தரப்புக்கு எத்தகைய அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன என்பதனை நாம் நோக்க வேண்டும். காஸா மீது சர்வதேசமும் அரபு நாடுகளும் நெருக்கீடுகளை முன்னெடுத்தது. பலஸ்தீனர்களுக்கான உதவிகளை வரையறுத்துக் கொண்டது. உதவி நிறுவனங்களுக்கும் தடைபோட்டது. பலஸ்தீன போராட்ட குழுக்களை பயங்கரவாதிகளாகப் பிரகடனப்படுத்துமாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

- குத்ஸ் நகரிலும் அதன் எல்லைப் புறங்களிலும் பாதுகாப்புக்கான முன்னெடுப்புகளை மேற்கொள்வதில் காணப்படும் சவால்கள்.

### 6. இஸ்ரேலிய தரப்புக்கு சாதகமற்ற குறிகாட்டிகள்

1. குடிமக்கள் தொகை: 2019 ஆம் ஆண்டு கணிப்பீட்டின்படி வரலாற்று ரீதியான பலஸ்தீனில் பலஸ்தீனர்களின் தொகை 6.4 மில்லியன்களாக இருக்க

4. இஸ்ரேல் அரசு அல்லாதவர்களிடம் காணப்படுகின்ற அதி நவீன தொழில்நுட்ப சாதனங்கள். இதன் காரணமாக எதிர்காலத்தில் ''இலகுவாக ஆக்கிரமித்தல்'' என்பது அசாத்தியமான ஒன்றாக மாறியுள்ளது.

5. இஸ்ரேலின் நிலையைப் பார்த்து பரிதாபப்படும் நிலையில் படிப்படியான பாரிய வீழ்ச்சியொன்று காணப்படுகின்றமை. நீண்ட காலத்தில் அபாயகரமான ஒன்றாக இதனை இஸ்ரேல் கருதுகிறது.

| ஸினாரியோ | ஒரு நாடு / இரு நாடுகள் | ஒரு மாநகர சபை / இரு மாநகர சபைகள் | சாத்தியப்பாடு % |
|---|---|---|---|
| 1. இரு நாடுகள் | இரு தலைநகரங்கள் | இரண்டு மாநகர சபைகள் | 11 |
| 2. இரு நாடுகள் | ஒரு தலைநகரம் | இரண்டாக பிரிக்கப்பட்ட ஒரு மாநகர சபை | 15 |
| 3. ஒரு நாடு | ஒரு தலைநகரம் | இரு வேறுபட்ட மாநகர சபைகள் | 22 |
| 4. ஒரு நாடு | ஒரு தலைநகரம் | இரண்டாக பிரிக்கப்பட்ட ஒரு மாநகர சபை | 26 |
| 5. ஒரு நாடு | ஒரு தலைநகரம் | ஒரு மாநகர சபை | 26 |

அட்டவணை 01

# குத்ஸ் (ஜெரூஸலம்) நகரின் எதிர்காலம் எதிர்கொள்ளும் அபாயங்களும்

## புரியப்படவேண்டிய உண்மைகளும்



இன்று இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற நிகழ்வுகள் நாளைய பாரதூரமான விளைவுகளை குறிகாட்டி நிற்கிறது என்ற வகையில் இதற்குப் பொறுப்புக் கூறுவது யார்? குத்ஸ் நகரைப் பாதுகாப்பதற்காக ஒன்றிணைவது எம்மனைவரதும் பொறுப்பு இல்லையா? நாம் என்ன செய்ய வேண்டும் என்று சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

எதிர்காலவியல் நோக்கில் பார்க்கும்போது சில விடயங்கள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

### 1. நிகழ்வுகளில் (Events) கவனத்தைக் குவிக்காது போக்குகளில் (Trends) கவனம் செலுத்துவது.

பலஸ்தீனில் இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்குவதை ஆரம்பமாக ஏற்றுக்கொள்ளவில்லை, அதன் பின்னர் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தார்கள், உடன்படிக்கையை செய்தார்கள், பின்னர் இஸ்ரேல் என்ற நாட்டை ஏற்றுக்கொண்டார்கள், தொடர்ந்து படிப்படியாக 'அரபிகள்' என்ற தரப்பை தூரமாக்கினார்கள், அதன் தொடராக அகதிகள், எல்லைகள், தண்ணீர், எதிர்ப்பதற்கான உரிமை... போன்றவற்றை விட்டுவிட்டார்கள். அரபு நாடுகளே இஸ்ரேலின் தலைநகராக குத்ஸ் நகரை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லாத நிலைதான் இன்று காணப்படுகிறது.

### 2. 'சக்தி மூலங்கள்' என்று நோக்கும் போது மூன்று விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

சட ரீதியாக ஏற்படக் கூடிய மாற்றங்கள், கருத்து ரீதியாக ஏற்படக்கூடிய மாற்றங்கள், இந்த மாற்றங்களை முகாமை செய்வதற்கான பொறிமுறைகள் என்பவையே அவையாகும். ஒப்பீட்டு ரீதியாக நோக்கும்போது முதல் விடயம் முஸ்லிம்களுக்கு சார்பாகவும் இரண்டாவது விடயம் இரு பக்க சமநிலையாகவும் காணப்படுகிறது. ஆக்கிரமிப்பு தரப்பில் அவர்களது வளர்ச்சி, உள்ளார்ந்த கட்டமைப்பு, தொழில்நுட்பங்கள் அவர்களிடம் கருத்து ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதுடன் இழப்புகளைத் தாங்கிக்கொள்கின்ற ஆற்றல், தொடர்ந்தேர்ச்சையான கஷ்டங்கள் ஏற்படுத்திய உளமாற்றங்கள் பலஸ்தீன தரப்புக்குச் சார்பாக உள்ளது. சக்தி மூலங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்களை முகாமை செய்து, தீர்மானங்கள் எடுக்கக் கூடிய இடங்களில் செல்வாக்குச் செலுத்தி அவற்றைத் தமக்குச் சார்பாக மாற்றிக் கொள்வதற்கான உபாயங்களை ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய மூன்றாவது விடயத்தில் நாம் பலவீனப்பட்டுள்ளோம்.

### 3. ''அனைத்தும் நல்லபடி நடந்து முடியும்'' (Wishful Thinking) என்ற ஆசை கலந்த சிந்தனைகளை தவிர்ந்துகொள்வது.

இது அனைவராலும் தூண்டப்படுகின்ற Positive Thinking அல்ல. மாற்ற

1. 1980 களில் இஸ்ரேலின் தலைநகராக குத்ஸ் நகரை பிரகடனம் செய்வதை அமெரிக்கா மறுத்தமை

2. ரேகனுடைய காலம் முதல் தந்தை புஷ் அவர்களின் காலம் வரை அமெரிக்க வெளிவிவகார அறிக்கைகளில் குத்ஸ் நகரை இஸ்ரேலிய நகரம் என்று தரப்படுத்தியமை

3. அமெரிக்க தூதரகத்தை குத்ஸ் நகரில் கட்டுவதற்காக அரபு நிலங்களை கொள்வனவு செய்வதற்கு உடன்பட்டமை

4. 1982 ஆம் ஆண்டு அமெரிக்க தூதரகத்தை டெல் அவிவிலிருந்து குத்ஸ் நகருக்கு மாற்றுமாறு தான் பரிந்துரைத்ததாக டெல் அவிவுக்கான அமெரிக்க தூதராக 90களில் செயல்பட்ட மார்டின் என்டீக் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

5. 1995 ஆம் ஆண்டு அமெரிக்க காங்கிரஸ், குத்ஸ் தூதுவராலயம் தொடர்பான ஒரு சட்டத்தை வெளியிட்டது. அந்த சட்டத்தில் ''குத்ஸ் நகரை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரிக்க வேண்டும்'' ''குறித்த தினத்திலிருந்து ஐந்து வருடங்களுக்குள்ளால் அமெரிக்கா தனது தூதுவராலயத்தை குத்ஸ் நகருக்கு மாற்ற வேண்டும்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பதவிக்கு வந்த ஒவ்வொரு அமெரிக்க ஜனாதிபதியும் இதனைப் பிற்போட்டு வந்தார்கள்.

6. பில் கிளின்டனின் காலத்தில் ''அமெரிக்கத் தூதுவராலயத்தை டெல் அவிவிலிருந்து குத்ஸ் நகருக்கு மாற்றுவதில்லை'' என்ற நிலைப்பாடு முன்வைக்கப்பட்டது. எனினும் தற்போது அவரது நிலைப்பாடு ''இ[illegible]

தூதுவராலயம் மாற்றப்படும் நிகழ்வில் கருத்து தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி ''குத்ஸின் எல்லைகள் இரு தரப்புகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்மானிக்கப்படும்'' என்று குறிப்பிட்டார். எதிர்காலத்தில் சக்தி மூலங்களுக்கு இடையிலான சிக்கல்கள் மேலும் அதிகரிக்கும். எதிர்காலப் பேச்சுவார்த்தைகளின் விளைவு இஸ்ரேலுக்குச் சாதகமாகவே அமையும். பேச்சுவார்த்தைகளின் முடிவு வாதங்களிலோ, பிரதிவாதங்களிலோ தங்கியிருப்பதில்லை, அது சக்தி மூலங்களின் விருப்புக்கு ஏற்பவே நடைபெறப் போகிறது என்பதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

### 5. இஸ்ரேலிய பொது சன அபிப்பிராயம்

டெல் அவீவ் பல்கலைகழகத்தின் தேசிய பாதுகாப்புக்கான ஆய்வு மையம் நடாத்திய ஆய்வின்படி இஸ்ரேலிய அரசியல் எதிர்கொள்ளும் சவால்களாக கீழ்வரும் விடயங்களை அடையாளப் படுத்துகின்றார்கள். இதுதான் பொதுசன அபிப்பிராயங்களை தீர்மானிக்கின்ற சில முக்கிய குறிகாட்டிகளுமாகும்.

- கிழக்கு குத்ஸ் பிரதேசத்தை சர்வதேச சமூகம் ஆக்கிரமிக்கப்பட்ட பூமியாகவே கருதுகின்றமை.
- யூதர்களதும் முஸ்லிம்களதும் மத நம்பிக்கைகள் காரணமாக அடிக்கடி ஏற்படக்கூடிய பதட்டநிலையும் உணர்வுக் கொந்தளிப்புகளும் குண்டுகள் வெடிக்கலாம் என்ற பய உணர்வை ஏற்படுத்துகின்றமை
- கிழக்கு குத்ஸ் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் இஸ்திரமற்ற நிலை

யூதர்களின் தொகை 6.3 மில்லியன்களாக காணப்படுகிறது. இதன் பிரகாரம் 2030 க்கும் 2035 க்கும் இடைப்பட்ட காலத்தில் 54% பலஸ்தீனர்களும் 46% யூதர்களும் காணப்படுவார்கள். இது இஸ்ரேலுக்கு பெரும் தலையிடியாகும். இங்கு மூன்றுவித எடுகோள்களுக்கு வரலாம்.

ஒன்று: மேற்குக் கரையிலிருந்து மொத்தமாகப் பின்வாங்குவது. இந்த உபாயம் யூத நாட்டுக்கு அபாயகரமானதாகும்

இரண்டு: பின்வாங்காதிருப்பது. இது தான் நெதன்யாஹுவின் திட்டமாகும்.

மூன்றாவது : காஸாவைப் போன்று சிறிய நிலத்தில் பெருவாரியான பலஸ்தீனர்களை விட்டு விட்டுப் பின்வாங்குவது என்று குறிப்பிடலாம்.

2. அமெரிக்காவின் உபாயங்கள் மத்திய கிழக்கிலிருந்து பசுபிக் சமுத்திரத்தை நோக்கி மாறிக்கொண்டிருக்கின்றமை. வேகமாக வளர்ந்து வரும் சீனா என்ற அபாயத்தை எதிர்கொள்ளல், பொருளாதார பிரச்சினைகள், வருமானங்களில் காணப்படும் வீழ்ச்சி, குற்றச் செயல்களின் வளர்ச்சியோடு ஒப்பிடும்போது மத்திய கிழக்கில் உபாய அடிப்படையில் அமெரிக்க நலன்கள் குறைவானதாகக் கருதப்படுகின்றமை.

3. அமெரிக்கா அல்லது ஏனைய பிராந்திய சக்தி மூலங்களை ஈரானுடன் இராணுவ ரீதியாக மோதச் செய்வதில் இன்று வரை தோல்வியை தழுவியுள்ளமை. இவ்வாறு மோதச் செய்வது பிராந்திய சக்தி மூலங்ளை சிதறடித்து முரண்பாடுகளை ஆழப்படுத்துவதற்கான உபாயமாக இருந்தபோதும்கூட இவ்விடயம் சாத்தியப்படவில்லை.

6. இஸ்ரேலிய சமூகக் கட்டமைப்பில் தோன்றியுள்ள ஆழமான பிளவுகள். உதாரணமாக ரஷ்ய யூதர்கள் தமக்கு மாத்திரமே உரிய அரசியல் கட்சியை தோற்றுவித்தமை.

7. அரபுப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற நிலை இஸ்ரேலின் நலன்களுக்குப் பாதகமாக அமைந்துவிடுமோ என்ற அச்சம்.

### 7. குத்ஸ் நகரின் எதிர்காலம்

கிடைக்கின்ற தகவல்களை பகுப்பாய்வுக்கு உட்படுத்தும்போது குத்ஸ் நகரத்தைச் சூழவுள்ள அபாயங்கள் தெளிவாகத் தெரிகின்றது. (அட்டவணை 01)

எதிர்காலத்தில் இரு நாடுகள் காணப்படும் என்று 26% மும் ஒரு நாடு காணப்படும் என்று 76% மும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்காலத்தில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு, குத்ஸ் நகரம் யூத மயப்படுத்தப்படல், அதன் தனித்துவம் மாற்றியமைக்கப்படல் போன்றவை எப்படியிருக்கும் என்பதனை இது சுட்டி நிற்கிறது.

### 8. இஸ்ரேலின் போக்கு

இது தொடர்பான சில கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

- மனாஹீம் புரூமன்: ஒரு மாநகர சபையில் கிறிஸ்தவர்களுக்கு ஒரு வட்டாரமும் முஸ்லிம்களுக்கு ஒரு வட்டாரமும் அமைத்தல்
- ரூத் லெபிடொட் (Ruth Lapidot) (சர்வதேச சட்டம் தொடர்பான பேராசிரியர்): குத்ஸ் நகரை மதங்களுக்கு ஏற்ப பிரிக்க வேண்டும். அதன் தலைமையை 30 வருடங்களுக்குப் பிற்போட வேண்டும்.
- ஸாமுவேல் பெர்கோவிட்ஸ் (Samuel Bercovitz) சட்டத்துறை பேராசிரியர்: முஸ்லிம்களின் புனித பிரதேசங்களை பலஸ்தீன இராஜதந்திரிகள் தீர்மானிப்பார்கள். அந்த வட்டத்துக்கான தலைமையை அவர்களுக்கே வழங்கலாம்.

### 9. சுருக்கம்

குத்ஸ் நகரின் எதிர்காலத்தை சக்தி மூலங்கள்தான் தீர்மானிக்கும். உள்நாட்டு (பலஸ்தீன்), பிராந்திய, சர்வதேச சக்தி மூலங்கள் பலஸ்தீனுக்குச் சார்பாக இல்லை. இஸ்ரேல் இவற்றை பாரிய அளவுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்று எதிர்பார்க்க முடியும். குத்ஸ் நகரின் சனத்தொகைக் கட்டமைப்பை மாற்றவும் அங்குள்ள மக்களை வெளியேற்றவும் முடியும்.

இதன் அபாயத்தை புரிந்துகொள்வதும் புரியவைப்பதும் குத்ஸ் நகரை பாதுகாக்க நாம் என்ன செய்யலாம் என்பதனை சிந்திப்பதும் இன்றியமையாத ஒரு விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UGC அங்கீகரித்தும் தொழில்வாய்ப்புக்களின்போது மறுக்கப்படும் சமூக பணி இளமாணிப் (Bsw) பட்டம்

• ஹெட்டி ரம்ஸி

### பீடிகை

சமூகப் பணி (Social Work) என்னும் போது பெரும்பாலானவர்கள் நினைப்பது சமூக சேவை (Social service) என்பதாகும். ஆனால் உண்மையில் சமூகப் பணிக்கும் சமூக சேவைக்கும் இடையில் பாரிய வித்தியாசம் காணப்படுகின்றது. காரணம் சமூக சேவையானது மக்களுக்கு ஏதேனும் பிரச்சினையோ அல்லது தேவையோ ஏற்படும் போது அவர்களுக்கு வழங்கப்படும் இலவச சேவைகள் மற்றும் உதவிகளை குறிக்கும். உதாரணமாக ஒருவர் பசியுடன் உணவின்றி இருக்கும் பொழுது அவருக்கு உணவளித்து பசியை ஆற்றுவது ஒரு சமூக சேவையாகும். சமூக சேவையை யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் செய்யலாம். என் எமது இலங்கை அரசாங்கமும் இலவச மருத்துவம் இலவச கல்வி என்று வழங்குவது கூட ஒரு சமூக சேவைதான்.

ஆனால் சமூகப் பணி என்பது தொழில்முறை சார்ந்த ஒரு துறையாகும் அதற்கென்று தனிப்பட்ட கொள்கைகள் நெறிமுறைகள் காணப்படுகின்றன. சமூகப் பணியை தொழில்முறை சார்ந்து பயிற்றுவிக்கப்பட்ட சமூகப் பணியாளர்கள் மட்டுமே செய்யலாம். பிரச்சினையில் இருக்கும் ஒரு மனிதனை அவனது பிரச்சினைக்கான சமூக பொருளாதார சமய கலாச்சார குடும்ப உள ரீதியான காரணிகளை கண்டறிந்து அவனது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, பிரச்சினைகளின் போது பிறரை சார்ந்து இருக்காமல் சுயமாக மீள வழிவகைகளை செய்து தருவதே சமூகப் பணியாகும்.

அவ்வாறான பெறுமதி மிக்க இக்கற்கை நெறியினை இலங்கையில் நடாத்திவரும் நிறுவனமான தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் கல்வி பயிலும் சமூகப் பணி மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள போராட்டத்தை பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

### தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஆரம்பம்

ஐ.நா.வின் யுனெஸ்கோ (UNESCO) அமைப்பின் கல்வி செயற்திட்டத்தின் கீழ் இலங்கை வந்த டொரதி மோசஸ் என்பவருடன் இலங்கையில் அப்போது இருந்த சமூக சேவையாளர்கள் பலரின் பங்களிப்பின் விளைவாக 1952 ஆம் ஆண்டில் இலங்கை சமூகப் பணி நிறுவனம் நிறுவப்பட்டது. பின்னர் இது இலங்கை சமூகப் பணி கல்லூரி என மறுபெயரிடப்பட்டு 1964 இல் சமூகப் பணி டிப்ளோமா (Diploma in Social Work) தொடங்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் வேண்டுகோளின் பேரில், சுயாதீன நிறுவனமாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தை நிறுவுவதற்கான அமைச்சரவை பத்திரம் 1989 இல் அங்கீகரிக்கப்பட்டது. அதன்படி, 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தால் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமாக (NISD-National institute of social Development) நிறுவப்பட்டது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 25 வது பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஆணையால் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் இளமானி பட்டம் (Bachelors Degree) வழங்கும் நிறுவனமாக அறிவிக்கப்பட்டது. இந்தப் பட்டங்களைப் பெறுவதற்கு நிறுவனத்தின் மாணவர்கள் ஒரு ஒருங்கிணைந்த முயற்சியை மேற்கொண்டனர். இதன் விளைவாக, 2005ஆம் ஆண்டு டிசம்பரில், சமூக பணி இளமானி (Bachelor of Social Work) பாட நெறியும், 2008 இல் முதுமானி (Master's Degree) பாடநெறியும் ஆரம்பிக்கப்பட்டது.

### தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் வழங்கிய பட்டம் செல்லுபடியற்றது என அறிவிப்பு

இவ்வாறு, 2015 ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தில் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் உள்ளூர் பல்கலைக்கழகத்துடன் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தை இணைக்கும் போராட்டத்தைத் தொடங்கினர். இருப்பினும், அந்த நேரத்தில் நிறுவன உயர் அதிகாரிகள் நிறுவன மாணவர்கள் சிலரை வைத்து போராட்டத்தை தோல்வியடைய வைத்தனர்.

2016 ஆம் ஆண்டின் சமூக அபிவிருத்தி அலுவலர் (Development Officer) பதவிக்கு நிறுவனத்தில் பட்டம் பெற்ற மாணவர்கள் விண்ணப்பித்தனர், ஆனால் இந்த பதவிக்கு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் வழங்கிய பட்டம் செல்லுபடியாகாது என அறிவிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, 2019 ஆம் ஆண்டில் சமூக அபிவிருத்தி அலுவலர் பதவிக்கு 15 மாணவர்கள் விண்ணப்பித்தனர். எனினும் போதிய அங்கீகாரம் இல்லாததால் அவர்களின் சேவைகள் நிறுத்தப்பட்டன.





தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனம் (NISD) மாணவர்கள் தங்கள் பட்டத்திற்கான உரிய மதிப்பைப் பெறுவதற்காக 2019 செப்டம்பர் 24 ஆம் திகதி முதல் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD) முன் அமைதியான ஆர்ப்பாட்டத்தை நடாத்தி வருகின்றனர்.

### மாணவர் சமூக சேவையாளர்களின் போராட்டத்தின் சில அடிப்படை நோக்கங்கள்

1) அங்கீகரிக்கப்பட்ட அரச பல்கலைக்கழகத்துடன் இணைத்தல் (தற்போது கல்வியில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கும் இந்த சலுகை வழங்கப்பட வேண்டும்)

2) அரச நிறுவனத்தில் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகுதியாக சமூகப் பணி பட்டத்தை அங்கீகரித்தல். (அமைச்சின் பல்வேறு பதவிகளில் ஆட்சேர்ப்புக்கு இதுவரை முன்னுரிமை அளிக்கவில்லை என்பதால் சிறப்பு கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.)

3) அமைச்சு மட்டத்தில் அமைச்சில் சமூகப் பணி தொடர்பான பட்டப்படிப்பின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

### தொடரும் மாணவர் போராட்டம்

இந்த நோக்கத்தை மனதில் கொண்டு, சமூக பணி மாணவர் சங்கத்தின் முதல் கட்ட முயற்சியாக ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம், பல்கலைக்கழக மானிய ஆணையம், உயர்கல்வி அமைச்சகம், சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் வெலிக்கடை பொலிஸ் நிலையம் ஆகியவற்றுக்கு தபால் மற்றும் தொலைநகல் மூலம் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

கடிதங்களுக்கு அவர்கள் பதிலளிக்காத [illegible] தவிர அனைத்து நிறுவனங்களுக்கும் நேரில் சென்று கடிதங்களை ஒப்படைத்தனர். மாணவர்களின் நோக்கங்களுடன் இந்த நிறுவனத்தை இணைக்க ஏற்பாடுகள் செய்யுமாறு பிரதமர் அலுவலகம் நிறுவனத்தின் செயல் இயக்குநருக்கு கடிதம் எழுதியுள்ளது.

நிறுவனத்தின் சமூகப் பணி பட்டத்தை தொடரும் மாணவர்களின் பெற்றோரின் கூட்டம் 2019-10-02ஆம் திகதி நிறுவனத்தின் மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. கடந்த காலத்திலிருந்து இன்று வரை இந்த நிறுவனத்தை ஒரு அரச பல்கலைக்கழகத்துடன் இணைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டதுடன், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் தோல்வி குறித்தும் விவாதிக்கப்பட்டது. அதன்பின் பெற்றோர்களுக்கான ஒரு சங்கம் உருவாக்கப்பட்டது.

பெற்றோர் சங்கத்தின் பிரதிநிதிகள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் இந்த நிறுவனத்தின் செயல் இயக்குநர் மற்றும் சமூக சேவைகள் பள்ளி இயக்குனருடன் கலந்துரையாடினர். விரிவுரையாளர்கள் பெற்றோர்களும் மாணவர்களும் ஒன்றிணைவதற்கான சாத்தியமான நடவடிக்கைகள் குறித்து விவாதித்தனர். அன்றைய தினம் பங்கேற்பாளர்கள் அனைவரையும் ஒன்று சேர்க்க ஒரு குழு அமைக்கப்பட்டது. முதல் கட்டமாக சமூக வலுவூட்டல் அமைச்சர் தயா கமகேவை அதே நாளில் சந்திக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அமைச்சருடனான கலந்துரையாடலின் ஆரம்பத்தில், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தை இன்னொரு அரச பல்கலைக்கழகத்துடன் இணைக்க விருப்பம் தெரிவிக்கவில்லை. இருப்பினும், சமூகப் பணி பட்டத்தின் மதிப்பு தொடர்ந்து குறைந்து வருவதாலும், மேலும் பல பல்கலைக்கழகங்களில் சமூகப் பணி பட்டப் படிப்புக்கள் தொடங்குவதாலும், பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் பட்டச் சான்றிதழ்கள் செல்லுபடியாகி, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தால் வழங்கப்படும் பட்டச் சான்றிதழ்கள் நிராகரிக்கப்படுவதாலும் நிறுவனத்தின் எதிர்கால அபாய நிலைமை குறித்து அமைச்சர் தயா கமகேவிற்கு தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, ஒரு சுயாதீன பல்கலைக்கழகமாக இந்நிறுவனத்தை மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அவர்கள் நிறுவன இயக்குநருக்கு அறிவுறுத்தியுள்ளார். இருப்பினும், சுயாதீன பல்கலைக்கழகமாக மாற்ற அதிக காலம் எடுப்பதாலும் அதுவரை மாணவர்களுக்கு ஏற்படும் வேலைவாய்ப்பு பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தற்போதுள்ள வழிமுறையாக களனி பல்கலைக்கழகத்துடன் இணைத்து அதன் பின்னர் சுயாதீன பல்கலைக்கழகமாக மாற்ற நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதன்படி, சமூக சேவைகள் கல்லூரி இயக்குநர் திரு. K.M.Y கருணாரத்னவுக்கு, அவருக்குத் தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்டு ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் நியமனம் கடிதம் வழங்கினார். மேலும், கடிதத்தின் படி 2019-10-09 க்குள் இந்த நடவடிக்கைகளுக்கான செயல் திட்டத்தை சமர்ப்பிக்குமாறு கௌரவ அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

எனினும் மாணவர்கள் 2019-10-09 இணைப்புக்கான (Affiliation) செயல் திட்டத்துடன் அமைச்சரை மீண்டும் சந்தித்த போது அது நிராகரிக்கப்பட்டது. காரணம் அவருக்கு தனது அமைச்சில் இருந்து ஒரு கல்வி நிறுவனத்தை உயர் கல்வி அமைச்சுக்குக் கொடுப்பதற்கு துளியும் விருப்பமில்லை. அதேபோல் தனது நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கும் பதவி மற்றும் இதர வரப்பிரசாதங்கள் அற்றுப்போகும் காரணத்தால் மாணவர்களிடம் ஒரு முகத்தையும் அமைச்சர் மற்றும் அவரின் செயலாளரிடம் இன்னொரு முகத்தையும் காட்டிக் கொண்டிருந்தார்.

மாணவர்களுக்கும் அமைச்சின் செயலாளருக்கும் இடையில் பலகட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போதும் மாணவர்களது பேச்சுக்கு துளியும் செவி கொடுக்காததால் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்தன. மேலும் இப்போராட்டத்தை சிதைக்கும் முகமாக பணிப்பாளரின் தூண்டுதலின் ஊடாக அமைச்சின் செயலாளரினால் 2019-11-04 ஆம் திகதி அனைத்து மாணவர்களுக்கும் தேர்தலை காரணம் காட்டி காலவரையின்றி கட்டாய விடுமுறை வழங்கப்பட்டு அனுப்பப்பட்டனர். எனினும் மாணவர்கள் தமது போராட்டத்தை கைவிடவில்லை. அக்காலப்பகுதியில் பிறிதொரு இடத்தில் மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் ஒன்றுகூடி சந்தித்து சில முடிவுகளை எடுத்தனர்.

அதன்படி 2019-12-03 ஆம் திகதி சீதுவையில் கட்டப்பட்டுள்ள புதிய வளாகத்தில் முதலாம் தர மாணவர்களுக்கு மட்டும் ஒரு சிறு துளி கவலையின்றி கல்வி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க முடிவெடுத்தபோது அங்கு அனைத்து மாணவர்களும் பெற்றோர்களும் சென்று, குறிப்பிட்ட பிரச்சினை தொடர்பாக அங்கு வருகை தந்திருந்த நிறுவனப் பணிப்பாளருடன் விவாதித்து, கலந்தாலோசித்து, 2019-12-04 ஆம் திகதி அமைச்சின் புதிய செயலாளரை மாணவர்கள், பெற்றோர்கள், விரிவுரையாளர்களின் பிரதிநிதிகளுடன் மற்றும் சமூகப் பணி கல்லூரியின் பணிப்பாளரும் (School Of Social Work), தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளரும் (Director General) சந்தித்து தற்போதுள்ள நிலைமையை தெளிவுபடுத்தி ஒரு கடிதத்தை சமர்ப்பித்து வந்துள்ளனர். புதிய செயலாளரும் இது தொடர்பாக புதிய அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி உடன் கலந்தாலோசிப்பதாக தெரிவித்தார். மேலும் இப்பிரச்சினை சம்பந்தமாக ஜனாதிபதி பிரதமர் உயர் கல்வி அமைச்சர் உள்ளிட்ட தரப்பினருக்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

இப்போராட்டம் ஆரம்பித்து இன்றுடன் (2019-12-10) 75 நாட்கள் ஆகின்றன. இது வரை மாணவர்கள் அனைவரும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடாமல் முகப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இப்போராட்டம் இவ்வளவு நாட்கள் தொடர்வதற்கு காரணம் அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர், நிறுவன பணிப்பாளர் ஆகியோரின் பொறுப்பற்ற தன்மையும், பணம் பதவி மீதுள்ள ஆசையுமாகும்.

## "நேர்முகப் பரீட்சைகளை நடாத்தும் சிலருக்கு இது அங்கீகரிக்கப்பட்ட பட்டச்சான்றிதழ் என்பது விளங்குவதில்லை"



**எம்.எஸ்.எம். அஸ்மியாஸ்** - பணிப்பாளர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்துடன் இணைய வேண்டும் என்பதே மாணவர்களினதும் நிர்வாகக் குழுவினரதும் எதிர்பார்ப்பாகும். அண்மையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்ட போது எமது நிறுவனத்தில் கல்வி பயின்ற சில மாணவர்களுக்கு சில பகுதிகளில் அவர்களது பட்டச்சான்றிதழ் நிராகரிக்கப்பட்டுள்ளது. இது நேர்முகப் பரீட்சை மேற்கொண்டவர்களது தவறாகும். அவர்கள் இதனை பட்டச்சான்றிதழாக கருதவில்லை. 2005 ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனம் பட்டம் வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இருக்கின்ற போது இம்மாணவர்களது பட்டச்சான்றிதழ் தொழில்வாய்ப்புக்களுக்கான நேர்முகப் பரீட்சைகளின் போது நிராகரிக்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் இந்நிறுவகத்தை அரச பல்கலைக்கழகத்துடன் உடனடியாக இணைக்க வேண்டும் என்ற போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இவ்விடயம் உடனடியாக மேற்கொள்ளப்படும் செயற்பாடு அல்ல. இதில் பல்வேறு செயற்பாடுகள் உள்ளன. எமது அமைச்சு (சமூக வலுவூட்டல் அமைச்சு) இதனை விரும்ப வேண்டும். இணைத்துக்கொள்ளும் பல்கலைக்கழகம் விரும்ப வேண்டும். உயர் கல்வி அமைச்சுக்கு செல்ல வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இதை விரும்ப வேண்டும்.

எல்லோருக்கும் நன்மையான விடயம் என்ற வகையில் எமது நிர்வாகமும் இதனை விரும்புகிறது. இற்றைக்கு 4 வருடங்களுக்கு முன்பும் இப்பிரச்சினை வந்தது. அப்போது நாம் அரச நிர்வாக அமைச்சுக்கு கடிதம் மூலம் இது அங்கீகரிக்கப்பட்ட பட்டச்சான்றிதழ் என்பதை அறிவித்தோம். ஆனாலும் நேர்முகப் பரீட்சைகளை நடாத்துகின்ற ஒரு சிலருக்கு இது அங்கீகரிக்கப்பட்ட பட்டச்சான்றிதழ் என்பது விளங்குவதில்லை. இதற்கு முன்னர் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு இறுதியில் முன்னாள் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க இதில் கைச்சாத்திடவில்லை.

இரண்டாவது தடவை முன்னாள் சமூக சேவைகள் அமைச்சர் தயா கமகேயும் எமது நிறுவனத்தை இணைப்பதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை. அதனைத் தொடர்ந்தே மாணவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். அரச பல்கலைக்கழகத்துடன் இணைப்பது தொடர்பான அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டால் தாம் கல்வி நடவடிக்கையில் ஈடுபடுவதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர். இன்னும் ஒரு மாத காலத்தில் இதற்கான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளதென நாம் நம்புகிறோம்.

## "எமது நிறுவனம் அரச பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட வேண்டும்"

இஜாஸ் முபாரக்

தற்போதைய நிலவரப்படி நிலையான பணிப்பாளருக்கு எம்முடன் சேர்ந்து தீர்வொன்று கிடைக்கும் வரை பயணிப்பதைத் தவிர வழியில்லை. மேலும் தற்போது அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அவர்களையும் சந்திக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் சமூகப் பணி பாடநெறியானது தற்போது பேராதனை மற்றும் ஜயவர்தனபுர பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் நாம் களனி பல்கலைக்கழகத்துடன் இணைவது மிக முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. இல்லாவிடில் அரச பல்கலைக்கழகத்துடன் ஒப்பிடும் பொழுது எமக்கான வாய்ப்புகள் அரச வேலை வாய்ப்புகளில் அற்றுப் போக வாய்ப்புள்ளது. ஆகவே நாம் தற்போது முழு வீச்சுடன் முயற்சிப்பது எமது நிறுவனத்தை அரச பல்கலைக்கழகத்துடன் (களனி) இணைப்பதற்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதுதான் ஒரேயொரு சிறிய ஆறுதல்

• வை.எல்.எஸ். ஹமீட்

ஜனாதிபதித் தேர்தல் ஐ.தே.கட்சியையும் பௌத்த வாக்குகளைப் பெறும் உத்திகளை நோக்கித் தள்ளியிருக்கின்றது. கடந்த தேர்தலில் ஐ.தே.க வேட்பாளர் பெற்ற பௌத்த வாக்குகளை விட சிறுபான்மை வாக்குகளே அதிகம்.

இந்த உத்தியின் ஓர் அங்கமாக அடுத்த பொதுத் தேர்தலில் சிறுபான்மைக் கட்சிகளுடன் கூட்டுச் சேராமல் ஐ.தே.க. தனித்துப் போட்டியிடுவதை ரணில் விக்ரமசிங்க விரும்புவதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் அடிபடுகின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சியாளர் ஒரு சிங்கள பௌத்தராக இருக்கட்டும். அவரை பெரும்பான்மையும் சிறுபான்மையும் இணைந்து தீர்மானிப்போம் என்று சிறுபான்மை கூறியது. அவரைத் தீர்மானிப்பதும் நாமே என்று பெரும்பான்மை கூறியது. அதை நோக்கியே பிரச்சாரங்களும் அமைந்தன. அதில் அண்ணளவாக வெற்றியும் பெற்றார்கள்.

இந்நிலையில் இன்று ஐ.தே.கட்சியும் சிறுபான்மையை சற்று தள்ளிவைக்கின்ற தோற்றப்பாட்டை பெரும்பான்மைக்குக் கொடுக்க முனைவதுபோல் தெரிகிறது.

சுருங்கக் கூறின் இயற்கையாகவோ, செயற்கையாகவோ சிறுபான்மை விரோதப் போக்கை பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவதற்கான உத்தியாக இரு கட்சிகளும் கைக்கொள்ளப் போவது தெரிகிறது.

1956 ஆம் ஆண்டுத் தேர்தலில் பண்டாரநாயக்க தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வருவது தொடர்பாக பிரச்சாரம் செய்த போது ஐ.தே.கட்சியும் அதே பிரச்சாரத்தைச் செய்தது. ஆனாலும் அது எடுபடவில்லை என்பது வேறு விடயம். ஆனால் இனவாதம்தான் தேர்தலுக்கான முதலீடு என்பதை ஒரு கட்சி நிறுவினால் அடுத்த கட்சியும் அதே பாதையைப் பின்தொடர தள்ளப்படுவது என்பது இந்த நாட்டின் ஒரு நியதியாகும்.

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இனவாதத்தைச் சந்தைப்படுத்தும் போட்டியில் இரையாவது சிறுபான்மைதான். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் எனது பல ஆக்கங்களில் இந்த நிலை வரக் கூடிய சாத்தியம் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன்.

இவ்வாறான ஒரு சூழ்நிலை வரலாம் என்பதனால்தான் ''ஜனாதிபதி ஆட்சிமுறை சிறுபான்மைகளுக்கு சாதகமானது'' என்ற கருத்து சரியா? என்பது தொடர்பாக சுமார் 2 வருடங்களுக்கு முன் ஒரு தொடர் ஆக்கத்தை வெளியிட்டேன். அப்பொழுது பெரிதாக அதனை யாரும் கண்டுகொள்ளவில்லை.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலுக்கு சுமார் மூன்று மாதங்களுக்கு முன் அன்றைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்தார்.

அதற்கு அன்றைய ஜனாதிபதியும் மொட்டுத் தரப்பு பிரதானிகளும் ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாக செய்திகள் அடிபட்டன. ஆனால் நம்மவர்கள்தான் சஜித்தை ஜனாதிபதியாக்கலாம் என்ற நம்பிக்கையில் அமைச்சரவையில் மிகவும் ஆக்ரோஷமாக அதனை எதிர்த்ததோடு ரணிலையும் கடுமையாக விமர்சித்து அந்த முயற்சியை தவிடுபொடியாக்கினார்கள்.

அப்பொழுது மீண்டும் ஜனாதிபதிப் பதவியொழிப்பு தொடர்பாக எழுதினேன். அந்த மூன்று மாத கால எல்லைக்குள் அப்பதவியை ஒழிப்பது சாத்தியம் என்பதற்குரிய சட்ட நியாயங்களை முன்வைத்திருந்தேன்.

துரதிஷ்டவசமாக நம் தலைமைகள் என்பவர்கள் சமூகத்தைப் பாதிக்கும் முக்கிய விடயங்களிலாவது பரந்துபட்ட ஆலோசனைகளைச் செய்வதில்லை. எல்லாம் அவர்களே என்ற நிலை.

சிறுபான்மையைப் பொறுத்தவரை ஜனாதிபதித் தேர்தல் எவ்வளவு முக்கியமோ அதை விடவும் பல மடங்கு பொதுத் தேர்தல் முக்கியமானது.

கடந்த காலங்களில் ஜனாதிபதி முறைமை ஒழிப்புத் தொடர்பாக பேசப்பட்ட போதெல்லாம் ஒரு தனிக்கட்சி அறுதிப் பெரும்பான்மை பெறும் வகையில் பொதுத் தேர்தல் முறைமையும் மாற்றப்பட வேண்டும் என்றே பேசப்பட்டு வந்தது. அது சிறுபான்மைக்கு மிகவும் பாதிப்பானது. இது தொடர்பாகவும் நிறைய எழுதியிருக்கின்றேன்.

பொதுத் தேர்தல் முறையில் கைவைக்காமல் ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான பொன்னான சந்தர்ப்பம் இம்முறை ரணிலின் அமைச்சரவை பத்திரம் மூலம் கிடைத்தது. அது ஒழிக்கப்பட்டிருந்தால் சமூகங்கள் இவ்வளவுதூரம் துருவப்படுத்தப் பட்டிருக்கமாட்டாது. ஏனெனில் ஜனாதிபதித் தேர்தல் போன்று பொதுத் தேர்தல் இருமுனைப் போட்டியல்ல. மாறாக பல்முனைப்போட்டி.

ஒரு தனிக்கட்சி அறுதிப் பெரும்பான்மை பெறுவது கூட தற்போதைய தேர்தல் முறையின் கீழ் சிரமமாக இருந்திருக்கும். ஆட்சிக்கு வரும் அரசாங்கம் சிறுபான்மைக் கட்சிகளில் தங்க வேண்டியேற்பட்டிருக்கும். அந்நிலையில் சிறுபான்மைக்கு பாதிப்பான தேர்தல் முறை கொண்டு வருவது சிரமமாக இருந்திருக்கும். அரசில் சிறுபான்மைகளின் பலமும் உறுதியாக இருந்திருக்கும்.

துரதிஷ்டவசமாக நமது தலைவர்களின் அரசியல் தூரதிருஷ்டியின்மை காரணமாக அந்த சந்தர்ப்பை அவர்களே உதறித் தள்ளி விட்டார்கள்.

### எதிர்வரும் பொதுத் தேர்தல்

கடந்த ஜனாதிபதித் தேர்தல்முடிவின் படி மொட்டுத் தரப்பு பொதுத் தேர்தலில் 2/3 பங்கினைப் பெறமுடியாத போதும் அறுதிப் பெரும்பான்மையை இலகுவாக பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அவ்வாறு பெற்றால் தேர்தலின்பின் 2/3ஐ மொட்டு பெற்றுக்கொள்ளாது என்று கூற முடியாது. அடுத்த கட்சிகளில் இருந்து தாராளமாக உடைத்து எடுப்பார்கள். அதில் நிறைய முஸ்லிம் பா.உ.க்களும் அள்ளுண்டு போவார்கள்.

அவ்வாறு 2/3ஐப் பெற்றால் பிரதானமாக பொதுத் தேர்தல் முறை மாற்றியமைக்கப்படலாம். அவ்வாறு நடந்தால் சிறுபான்மை சமூகம் இந்நாட்டில் அரசியல் ரீதியாக செல்லாக் காசான சமூகமாக மாறும்.

மறுபுறம் 19 நீக்கப்பட்டு அல்லது திருத்தப்பட்டு ஜனாதிபதிப் பதவிக்கு மீண்டும் பழைய பலம் வழங்கப்படும். இங்கு நாம் இரு வகையான பாதிப்பினைச் சந்திப்போம். இந்த இடத்தில்தான் நாம் தெளிவாக சிந்திக்க வேண்டும். உண்மையில் நம் சகோதரர்கள் சிலரின் சிந்தனைகளைப் பார்க்கின்றபோது மிகவும் கவலையாக இருக்கின்றது.

காது சுளகைப் போன்று இருக்கின்றது. எனவே யானையின் வடிவம் சுளகு போன்றதுதான். மாற்றுக் கருத்துக்கே இடமில்லை என்கிறார்கள். வால் தும்புத் தடி போல் இருக்கின்றது. எனவே, யானையின் வடிவம் தும்புத் தடி போன்றதுதான். மாற்றுக் கருத்துக் கூறுகின்றவர்கள், புரியாதவர்கள்; என்கிறார்கள். தயவு செய்து ஒரு விடயத்தை சகல கோணங்களில் இருந்தும் ஆராயுங்கள்.

### இருவகை ஆபத்துக்கள்

பாராளுமன்றத் தேர்தல் முறை மாற்றப்பட்டால் அதன்பின் சிறுபான்மைகளின் ஆதரவில்லாமல் சதா காலமும் ஆட்சியமைக்கும் நிலை (இந்தியாவைப் போன்று) ஏற்படலாம். அதேநேரம் சிறுபான்மைப் பிரதிநிதித்துவங்கள், குறிப்பாக முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழரின் பிரதிநிதித்துவங்கள் கணிசமாக குறையலாம்.

அடுத்ததாக 19 நீக்கப்பட்ட/ திருத்தப்பட்ட பலம் பொருந்திய ஜனாதிபதி தனிச் சிங்கள பௌத்த வாக்குகளால் தெரிவு செய்யப்படலாம். அதற்காக இனவாதத் தீ ஆட்சிக் கதிரைக்கு கனவு காணும் சகல தரப்பினராலும் மூட்டப்பட வேண்டும் என்பது நிரந்தர நியதியாகலாம். அந்நிலையில் சிறுபான்மைகளின் நிலை இக்கட்டானதாக மாறப் போகிறது.

தற்போதைய அமைச்சரவையில் ஓர் முஸ்லிம் இல்லையென்பது வெறுமனே அவ்வாறு ஓர் அமைச்சர் நியமிக்கப்பட்டாலும் கூட எதைச் சாதித்துவிடுவார்? என்ற கேள்வியின் கோணத்தில் இருந்து பார்க்கப்படுவதல்ல. கடந்தமுறை முஸ்லிம் அமைச்சர்கள் ராஜினாமா செய்தபோது மகாநாயக்க தேரர்கள்கூட கவலைப்படுமளவு பாரதூரமாக இருந்தது. ஓரின ஆட்சியை அண்ணளவாக நிறுவிய இத்தேர்தல் ஒரு சிறுபான்மை சமூகத்தை ஒட்டுமொத்தமாக புறந்தள்ளக்கூடிய மனோநிலையை ஆட்சியாளர்கட்கு கொடுத்திருக்கின்றது.

இங்கிருந்துதான் எதிர்காலத்தை சூழப் போகின்ற இருளை நாம் அடையாளம் காண வேண்டி இருக்கின்றது.

இம்முறை ஜனாதிபதிப் பதவியை ஒழிக்க ரணில் எடுத்த முயற்சியை நம்மவர்கள் முறியடிக்காமல் அது வெற்றியளிக்க இடம் கொடுக்கப்பட்டிருந்தால் இன்று இந்த இக்கட்டான நிலை தோன்றியிருக் காது.

இப்பொழுது சிறுபான்மை செய்யக் கூடியதெல்லாம் தத்தமது சொந்தக் கட்சிகளில் அதிகூடிய ஆசனங்களைப் பெற்றுக் கொள்வது மாத்திரம்தான்.

பாராளுமன்றம் கலைக்கப்பட இன்னும் சுமார் மூன்று மாதம் இருக்கையில் பொதுத் தேர்தலில் ஆளும்கட்சிக்கு இதே ஆதரவுத் தளம் இருக்குமா? அதிகரிக்குமா? குறையுமா? என்பதை தற்போது திட்டவட்டமாக கூறமுடியாது.

சிலவேளை குறைந்து சுயமாக அறுதிப் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் அப்பொழுது சிறுபான்மைக்கு கணிசமான அரசியல்பலம் கிடைக்கும். சிலவேளை அறுதிப்பெரும்பான்மை பெற்றாலும் 2/3 இற்கு சிறுபான்மை வாக்குகள் தேவைப்படும். அந்த சந்தர்ப்பத்தைப் பாவித்து தேர்தல்முறை மாற்றத்தை தடுக்கலாம் அல்லது பாதிப்பைக் குறைக்க முற்படலாம்.

இவற்றை உங்கள் தலைவர்கள் சாதிப்பார்களா? கடந்த காலங்களில் எதைச் சாதித்தார்கள்? என்ற கேள்விகளைக் கேட்க வேண்டாம். அவர்கள்தான் உங்கள் பெருந் தலைவர்கள் என்று தீர்மானித்தவர்கள் நீங்கள். அவை தொடர்பாக வேறாக எழுத வேண்டும்.

அதேநேரம் அக்கட்சிகளில் தெரிவு செய்தாலும் அந்த பா.உ.க்களில் எத்தனபேர் கட்சிகளில் இருப்பார்கள்? எத்தனை பேர் அமைச்சுப் பதவிகளுக்காக கட்சிமாறி சோரம்போவார்கள்? என்ற கேள்வியையும் கேட்க வேண்டாம். ஏனெனில் யாரைத் தெரிவுசெய்ய வேண்டும் என்பது உங்களைப் பொறுத்தது.

இங்கு புரிந்துகொள்ள வேண்டியது இன்றைய சூழ்நிலையில் நமக்கு இருக்கின்ற ஒரேயொரு சிறிய துரும்பு தனித்துவமாக அதிகூடிய பிரதிநிதிகளை நாம் பெற்றுக் கொள்வதுதான். அது சஜித்தைப் பிரதமராக்குவதற்கு என்று யாராவது கூறினால் அது அரசியல் அறியாமை.

நாம் சுயமாக அதிகூடிய ஆசனங்களைப் பெற்றதன்பின் தேசிய அரசியலில் தற்போதைய ஆட்சித் தரப்பிற்கு முட்டுக் கொடுப்பதா? எதிர்த் தரப்பில் பிரதமரை உருவாக்குவதா? என்பது தேசியக் கட்சிகளின் தேர்தல் முடிவுகள், மற்றும் தவிர்க்கப்பட வேண்டிய பாராளுமன்றத் தேர்தல் முறை மாற்றம் உட்பட நமது பாதுகாப்பு மற்றும் பிரச்சினைகள் தொடர்பான சரியான உடன்பாடுகளை அடைவதில் தங்கியிருக்கின்றது.

இன்றைய நமது தலைவர்கள் இந்த விடயங்களை எவ்வளவுதூரம் சாதிப்பார்கள்? என்பது பாரிய ஒரு கேள்விதான். ஆனாலும் நமக்கு இருக்கின்ற சிறிய ஒரு ஆறுதல் இதனை சரியாக செய்வது மாத்திரம்தான்.

## பலாலி விமான... (01 ஆம் பக்கத் தொடர்)

கடந்த அரசாங்கத்தில் அவசர அவசரமாக ஆரம்பிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட இந்த விமான நிலையம் முறையாகப் பாவிக்கக் கூடிய நிலையில் இல்லாததனால் இந்த முடிவெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்திய உதவியுடன் பயணிகள் போக்குவரத்துப் பகுதி விரிவாக்கப்படும் எனவும், பொதிகள் பிரிவும் நிர்மாணிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். ஜப்னா விமான நிலையத்தில் இருந்து புறப்படும் பயணிகளிடம் அறவிடப்படும் தொகையை குறைப்பது தொடர்பிலும் ஆராயப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## சக்திக்க...

(01 ஆம் பக்கத் தொடர்)

சர்வதேச சமவாயங்களுடன் அரசாங்கம் கொண்டுள்ள கடப்பாடுகளுக்கு முரணானது என அவை சுட்டிக் காட்டியுள்ளன.

சிறுகதை ஒன்றை எழுதியமைக்காக இலங்கை அரசாங்கம் சக்திக்க சத்குமாரவை சிறையிலடைத்திருப்பது கருத்துச் சுதந்திரத்தை மீறும் செயலாகும். ஐக்கிய நாடுகள் செயற்பாட்டுக் குழுவும் இந்த முடிவை ஏற்றுக் கொள்ளும் என நாங்கள் நம்புகிறோம் என ப்ரீடம் நௌ நிறைவேற்றுப் பணிப்பாளர் மாரான் டேனர் தெரிவித்தார்.

பல்வேறு இலக்கியப் படைப்புக்களுக்கும் சொந்தக்காரரான சக்திக்க எழுதிய சிறுகதையொன்று பௌத்த மதத்தை இழிவுபடுத்துவதாக இருப்பதாகக் கோரி பௌத்த பிக்குகள் அவர் மீது முறைப்பாடு செய்திருந்தனர்.

## தமிழில்...

(01 ஆம் பக்கத் தொடர்)

மஹாவம்சத்தின் முதலாவது அத்தியாயத்தில் இருந்து ஆறாவது அத்தியாயம் வரை தமிழிலிலும் மூன்றாவது அத்தியாயத்திலிருந்து ஆறாவது அத்தியாயம் வரை ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்படவுள்ளது. கி.மு. 600 இலிருந்து கி.பி.301 வரையான முதலாவது பாகம் மகாநாம தேரரினால் வரையப்பட்டுள்ளது. கி.பி.301 இலிருந்து 1815 வரையான இரண்டாவது பாகம் மூன்று தேரர்களினால் வரையப்பட்டுள்ளது. 1815 முதல் 1936 வரையான மூன்றாவது பாகம் யகிரால பன்னானந்த தேரரினால் வரையப்பட்டுள்ளது. நான்காம், ஐந்தாம், ஆறாம் பாகங்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்ட நூலாக்கக் குழுவினால் தொகுக்கப்பட்டுள்ளது.

## சகல பிரதேச... (01 ஆம் பக்கத் தொடர்)

தேசிய பாடசாலைகளாக மேம்படுத்துவதன் மூலம் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை ஆயிரம் வரையில் அதிகரிப்பதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. மும்மொழி கற்பிக்கப்படுவதை உறுதி செய்யும் அனைத்து வசதிகளையும் கொண்ட தேசிய பாடசாலைகளை அனைத்து மாவட்டங்கள் தோறும் ஆரம்பிப்பதற்கும் எதிர்வரும் இரண்டு வருட காலப்பகுதிக்குள் இவ்வாறான இருபது பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கும் கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. இதற்கமைவாக உத்தேச வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கல்வி அமைச்சர் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைச்சரவை கொள்கை ரீதியில் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

Z Score நடைமுறைக்கு அமைவாக அரசாங்க பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை தெரிவு செய்வதற்காக தற்பொழுது பயன்படுத்தப்படும் மாவட்ட அடிப்படைக்கு பதிலாக பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட புதிய சமூகவியல் நடைமுறை ஒன்றை அறிமுகப்படுத்தவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அனைத்து மாணவர்களுக்கும் சமமானதும் நீதியானதுமான கல்விக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பான போதிலும் தற்பொழுது மாகாண மற்றும் மாவட்டத்தைப் போன்று பாடசாலைகளுக்கு இடையிலும் கல்வி வசதி மற்றும் கல்வியின் தரத் தன்மையில் வெவ்வேறான முரண்பாடுகள் நிலவுவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த நிலைமையின் கீழ் தற்பொழுது அரசாங்க பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை தெரிவுசெய்வதற்காக மாவட்டத்தை அடிப்படையாகப் பயன்படுத்தும் Z .Score நடைமுறைக்குப் பதிலாக பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட புதிய சமூகவியல் நடைமுறை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கான சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்கான சம்பந்தப்பட்ட விடயத்துறை தொடர்பிலான நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றை நியமிப்பது தொடர்பில் கல்வி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த பரிந்துரைக்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## சமூக ஊடகங்களில்... (01 ஆம் பக்கத் தொடர்)

இலங்கைப் புலனாய்வுப் பிரிவும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களும் சைபர் தாக்குதல்களைச் சமாளிக்கத் தயாராக வேண்டும். இணையத் தளங்களிலும் சமூக ஊடகங்களிலும் தரவு சேகரிப்பதில் அவற்றுக்குப் பயிற்சி [illegible] நடத்துபவர்களின் சமூக ஊடகப் பதிவுகள் மூலம் பயங்கரவாத தாக்குதல் பற்றிய தகவல்களை புலனாய்வு அமைப்புக்கள் பெற்ற உதாரணங்கள் பல உள்ளன. இலங்கைப் புலனாய்வு அமைப்புக்களும் அதற்கேற்ற வகையில் நவீனமயப்படுத்தப்பட வேண்டும் எனவும அவர் தெரிவித்தார்.

## அதிகமாக...

(01 ஆம் பக்கத் தொடர்)

உலகம் முழுவதும் இந்த ஆண்டு 250 ஊடகவியலாளர்கள் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர் என அறிக்கை கூறுகிறது. கடந்த வருடம் இந்த எண்ணிக்கை 255 ஆகவிருந்தது. இதில் சீனாவின் பங்கு 47 ஆகவிருந்தது.

இந்த வருடத்துக்கான அறிக்கையின் படி, துருக்கியில் 47 பேரும், சவூதியிலும் எகிப்திலும் 26 பேரும், ஈரானில் 11 பேரும் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். ஊடகத்துறைக்கு மிகவும் தொந்தரவான நாடாக துருக்கியை இந்த அறிக்கை அடையாளப்படுத்தியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முஹம்மத் பகீஹுத்தீன்

# நல்ல உபசரிப்பு பாதுகாப்பின் திறவுகோல்

அமைதியான நதியில் ஓடிய ஓடம் ஏப்ரல் 21 இல் தடம் புரண்டது. அந்த சதிக்குப் பின்னால் யார் என்பது பலருக்குப் புதிராக உள்ளது. அது வல்லரசுகளின் இரும்புக் கரம் உலகில் அன்றாடம் செய்யும் கபட நாடகம் என்பது கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிய வருகிறது.

எனவே கருத்து முரண்பாடுகளை வைத்து மோதிக் கொள்வதில் அர்த்தமில்லை. எதிர்ப்பு இஸ்லாத்திற்கு எதிரானது. இஸ்லாத்தைப் பாதுகாப்பது எப்படி என்பதைத்தான் இப்போது நாம் சிந்திக்க வேண்டும். அதனை இதற்கு முன்பு அறிமுகப்படுத்தியதை விட அழகான முறையில் வசீகரமாக எப்படி முன்வைக்கலாம் என்பதையே சிந்திக்க வேண்டும்.

ஏன் நாம் உலகிற்கு ஒரு முன்மாதிரி நாடாக இருக்கக் கூடாது! ஏன் கெடுபிடிகளுக்கு மத்தியில் கூட ஒற்றுமையாக இஸ்லாத்தை முன்வைப்பதில் எமது பணிகள் அமையக் கூடாது!

இஸ்லாத்தின் உயிரோட்டத்தை எமது நடத்தையில் காட்டுவோம். உலகமே எம்மைப் பார்த்து விழித்துக் கொள்ளட்டும். எண்ணமே வாழ்வு. எமது எண்ணம் பரந்த விரிந்த இலக்கை நோக்கி சிறகடிக்கட்டும்.

### ஒரு புள்ளியில் இருந்து ஆரம்பிப்போம்

எம்மைச் சுற்றியுள்ள சின்ன வட்டத்தை கொஞ்சம் உற்றுப் பார்ப்போம். பாரிய மாற்றத்துக்கான காய்கள் அங்கே உள்ளன.

வீட்டுக்கு வரும் பால்காரன், தபால்காரன், கழிவகற்ற வரும் ஊழியன், தண்ணீர் மற்றும் மின் சாரம் பில் கொண்டு வருபவன், வீட்டு வேலைக் காரன், வீட்டுக்கு வரும் வேலைக்காரன், சேவகன், மருத்துவிச்சி, கிராம நிலதாரி, அயலவர்கள், இவர்களுடன் எமது உறவு எப்படி உள்ளது?!



அவர்களுடனான எமது தொடர்பு, உபசரிப்பு, உரையாடல், முகமலர்ச்சி, முகமன் கூறுவது, பேச்சு, வாழ்த்து என அவர்களோடு எப்படிப் பழகுகின்றோம்? எமது பழக்க வழக்கம் இஸ்லாத்தின் தூதாக அவனது உள்ளத்தை ஆளும் அல்லவா?

நாங்கள் நபிகளாரின் வாழ்வை வரலாற்றில் ஒரு ஏடாக மாத்திரம் பார்க்கக் கூடாது. இந்த அசாதாரண சூழலில் எமது உறவும் தொடர்பும் தான் பாதுகாப்பு வேலியாக வரும். எமக்கு அல்லாஹ்வின் உதவி தேவை என்றால் நாம் ஒரு சாண் முன்னே போகக் கூடாதா!

தாயிப் நகரத்தில் இருந்து வந்த நபிகளாரைக் காப்பாற்றியது ஒரு முஸ்லிம் அல்ல.

உம்மு ஸலமா (ரழி) அவர்களை மதீனாவிற்கு பாதுகாப்பாக அழைத்துச் சென்றது ஒரு முஸ்லிம் அல்ல.

அகபா சந்திப்பின்போது இறைதூதருக்கு மெய்ப் பாதுகாவலராக இருந்தவர் ஒரு முஸ்லிம் அல்ல.

ஹிஜ்ரத் பயணத்திற்கு பாதுகாப்பான வழியை காட்டியது ஒரு முஸ்லிம் அல்ல.

இஸ்லாத்தை ஏற்கவில்லையே என்பதற்காக மக்காவாசிகளின் உடமைகளை பாதுகாக்க மாட்டேன் என இறைதூதர் மறுக்கவில்லை.

அபூதாலிப் கலிமா சொல்லவில்லையே என்பதற்காக நபிகளார் அவரின் பாதுகாப்பை மறுதலிக்கவில்லை.

எனவே நல்லுறவு எத்தகைய நிலையிலும் தொடர்ந்து பேணுவது ஈமானிய மனிதர்களின் பண்பாகும். நல்லுறவு பேணுவதற்கு எந்த ஜாதியும் இல்லை. எந்த மதமும் இல்லை. இறைதூதர் மரணிக்கும் போது வயிற்றுப் பசிக்காக இரவல் வாங்கியதும் ஒரு யூதனிடமே.

எல்லாம் வல்ல இறைவன் பாதுகாப்பு, உலக நியதிகளை மீறி எல்லா நேரமும் நடைபெறாது. உலக நியதிகளின் படி பாதுகாப்பு கிடைப்பது தான் விதி. விதிவிலக்காக வரும் பாதுகாப்பை விசயம் புரியாமல் எதிர்பார்த்தால் கைசேதம்தான் மிஞ்சும்.

எனவே எம்மைச் சுற்றியுள்ள மனிதர்களுடன் நல்ல முறையில் பழகுவோம். முன்மாதிரியாக நடப்போம். எமது நடை, உடை, பாவனை, உபசா ரம், இன்முகம் அனைத்துமே இஸ்லாத்தின் தூதாக மாறும்.

கெடிபிடிகள் உள்ள காலத்தில் எமது நன்னடத்தையை விதையாய் விதைப்போம். நாளை மறுமையில் அது மரமாகி கனிதரும் நிச்சியம்.

சத்தியம் வெல்லும். அதற்கு எமது அர்ப்பணங்கள் பசளையாக அமைய வேண்டும் என்பதுதான் இறை நியதியாகும். முதுகுப் புறமாக குத்திய கத்தி வயிற்றை துளைத்து முன்பக்கம் வந்து ரத்தம் வடிந்தோடியதை பார்த்து விட்டுத்தான் 'அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் வெற்றி பெற்றுவிட்டேன்' என நபித்தோழர் கூறினார்கள்.

உழைக்காமல் பாதுகாப்பைப் பெற முடியாது. வா வா தோழா உழைப்போம் முதலில். அறுவடையை அடுத்த பரம்பரைக்கு விட்டு விடுவோம்.

---

• எம்.என். இக்ராம் (M.Ed - OUSL)

# ஹிஜாப்: ஒரு வேர் நிலைப் பார்வை



மனித வாழ்வில் அதன் போக்கிலும், அமைப்பிலும் தாக்கம் செலுத்துகின்ற பிரதான அம்சங்களாக பின்வரும் 03 அம்சங்கள் காணப்படுகின்றன. அவை:

1. மனிதனுக்கும் இறைவனுக்குமிடையிலான தொடர்பு
2. மனிதனுக்கும் பிரபஞ்சத்துக்கும் இடையிலான உறவு
3. மனிதனுக்கு தனது சக மனிதனுடன் உள்ள தொடர்பு

இதில் மானிடத் தொடர்பில் பிரதானமாக இரு விடயங்கள் முக்கியமானவை:

1. ஆண்-பெண் தொடர்பு
2. தனிமனிதனுக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்பு

இவற்றுள் நாம் பேச எடுத்த விடயம் ஆண் - பெண் தொடர்பு குறித்த பார்வையிலிருந்து எழுகின்ற ஒரு விவகாரம்.

ஹிஜாப் என்றால் என்ன? அது ஏன் அவசியம்? என்பதனை விளங்க ஆண் - பெண் தொடர்பு குறித்த இஸ்லாத்தின் பார்வையின் முக்கிய புள்ளிகளையாவது புரிந்துகொள்வது முக்கியமானது.

1. ஆணும் பெண்ணும் அடிப்படையில் சமத்துவமானவர்கள், அவர்கள் வாழ்வின் உரிமைகளிலும் கடமைகளிலும் சம பங்காளர்கள்.

''உங்களில் ஆணாயினும் பெண்ணாயினும் அவர்கள் செய்த எந்த ஒரு செயலையும் நான் வீணாக்கிட மாட்டேன் என அவர்களது றப்பு அவர்களுக்குப் பதிலளித்தான். நீங்கள் இருபாலாரும் ஒரு வரை ஒருவர் சார்ந்துள்ளீர்கள்...'' (ஆல இம்ரான்: 195)

''முஃமினான ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் பொறுப்பாளர்களாகவும் உதவியாளர்களாகவும் உள்ளனர். அவர்கள் நன்மையை ஏவுகின்றனர், தீமையைத் தடுக்கின்றனர்...'' (தௌபா:71)

2. ஆண்-பெண் இயல்பு அடிப்படையில் வாழ்வில் அவர்களது பணி, பொறுப்புக்களில் வேறுபாடு கொண்டவர்கள்.

''ஆண்கள் பெண்களைப் போன்றவர்களல்லர்'' (ஆல இம்ரான்: 36)

''ஆண்கள் பெண்களின் நிர்வாகிகளாயிருப்பர்....'' (நிஸா: 34)

''ஆண்கள் பெண்களைப் பார்க்கிலும் படிநிலை வேறுபாடு கொண்டோராவர்...'' (பகரா: 228)

3. ஆண்-பெண் இரு பாலாரும் தமக்கிடையே இயல்பான ஈர்ப்புக் கொண்டவர்கள்.

''உங்களுக்கு உங்களில் இருந்தே துணையைப் படைத்தது அவனது அத்தாட்சிகளில் உள்ளதாகும். நீங்கள் உங்கள் துணையிடம் அமைதி பெற வேண்டும் என்பதற்காகவே அவன் அவ்வாறு செய்தான். அவன் உங்களுக்கிடையே அன்பையும் இரக்கத்தையும் ஏற்படுத்தினான்.'' (ரூம்: 21)

ஆண், பெண்ணின் சமூக வகிபாகம் மற்றும் அவர்களுக்கிடையான ஈர்ப்பும் வேறுபாடும் அவர்களுக்கிடையிலான உறவு தொடர்பில் சில ஒழுங்குகளும் வரையறைகளும் ஏற்படுத்தப்பட வேண்டியமையை வலியுறுத்துகின்றது. அதிலும் குறிப்பாக இருபாலாரதும் உறவில் மானிட விருத்தி தங்கியிருப்பது இதனை இன்னும் வலியுருத்துகிறது.

இரு பால் உறவு வெறும் இன்பம் சார்ந்த தொடர்பாக மாத்திரம் முடிந்து போவதாயின், இந்தத் தேவை பல போது அவசியப்பட மாட்டாது. எனினும் இந்த வேறுபாட்டுக்கு இடையேயான பிணைப்பு மானிட வாழ்வின் அடிப்படை நோக்கம் ஒன்றைக் கொண்டிருப்பது இந்த உறவை ஒழுங்குபடுத்த வேண்டியதன் அவசியத்தை ஏற்படுத்தி விடுகிறது. அதனுடன் மாத்திரம் இது சுருங்கி விடுவதில்லை. மானிட வாழ்வின் பொருள் இந்த உறவின் ஒழுங்கில்தான் பொதிந்துள்ளது.

### ஹிஜாப் ஒரு ஆடையல்ல அது ஒரு வாழ்க்கை முறைமை

இந்தப் பின்னணியில் இருந்தே இஸ்லாம் முன்வைக்கும் ஹிஜாப் குறித்த புரியப்பட வேண்டும். அதனை ஒரு ஆடையாக மாத்திரம் புரிந்து கொள்வது, அதுவும் பெண்ணுக்கான ஆடையாக மாத்திரம் புரிவது ஹிஜாப் குறித்த இஸ்லாத்தின் சிந் தனையைப் புரிந்து கொள்வதில் விடப்படுகின்ற குறைபாடாகவே காணப்படும்.

ஹிஜாப் குறித்து ஆரம்பமாகப் பேசிய வசனங்களாகக் கருதப்படும் ஸூரா அஹ்ஸாபின் வசனங்களை நாம் பார்த்தாலும், அதற்கடுத்துப் பேசிய வசனங்களாகப் பார்க்கப்படும் ஸூரா நூரின் வசனங்களைப் பார்த்தாலும் அவை அனுமதி பெறுதல் என்ற விடயத்தில் இருந்தே ஹிஜாப் குறித்த பேச்சை ஆரம்பிப்பதை அவதானிக்கலாம்.

''ஈமான் கொண்டவர்களே! நபியினுடைய வீட்டுக்கு உங்களுக்கு அனுமதி கிடைத்தாலேயன்றி சாப்பாட்டிற்காக உள் நுழைய வேண்டாம்...'' (அஹ்ஸாப்: 53)

''ஈமான் கொண்டவர்களே! உங்களது அல்லாத பிறரது வீட்டிலே நீங்கள், உங்களது வருகையை அறிவித்து உங்களுக்கான முன்அனுமதியைப் பெற்று, அங்கு வசிப்போருக்கு ஸலாம் கூறாதவரை நுழைய வேண்டாம். அதுதான் உங்களுக்குச் சிறந்ததாகும். இதனை நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள்..., அந்த வீட்டிலே எவரும் இருப்பதைக் காணாத போதும் அனுமதி கிடைக்காத வரை அங்கே நுழைய வேண்டாம். நீங்கள் திரும்பிச் சென்று விடுங்கள் என்று கூறப்பட்டால் திரும்பிச் சென்று விடுங்கள். அது உங்களுக்கு தூய்மையானதாகும். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிபவனாக இருக்கின்றான்..., யாரும் வசிப்பிடமாகக் கொள்ளாத ஒரு வீட்டில் உங்களுக்கான ஒரு பொருள், தேவை இருப்பின் அங்கு நுழைவதில் குற்றம் கிடையாது. நீங்கள் மறைப்பவற்றையும், வெளிப்படுத்துப வற்றையும் அல்லாஹ் அறிபவனாக உள் ளான்.'' (நூர்: 27-29)

இங்கு, உடம்பிற்கு ஹிஜாப் அணிவதற்கு முன்னர் மனதுக்கு ஹிஜாப் அணிவிக்க வேண்டிய தேவை இருப்பதை விளங்குகிறோம். இதனை ஸூரா நூரின் 58, 59 ஆவது வசனங்களும் இன்னும் உறுதிப் படுத்துகின்றன.

''ஈமான் கொண்டோரே! உங்களது வலக்கரம் சொந்தமாக்கப்பட்டவர்களும், பருவமடையாத உங்களது பிள்ளைகளும் நாளின் மூன்று நேரங்களில் உங்களிடம் அனுமதி பெறட்டும். அவை பஜ்ரு தொழுகைக்கு முன்னைய பொழுது, பகல் பொழுதில் உங்களது ஆடைகளை தளர்த்தி வைக்கும் நேரம், இஷாவுக்கு பின்னைய நேரம் என்பனவாகும். இவை உங்களுக்கான மூன்று அவ்ரத்துக்களாகும். அதனைத் தவிரவுள்ள நேரங்களில் அனுமதி குறித்த விடயத்தில் உங்களுக்கோ அவர்களுக்கோ பிரச்சினை கிடையாது. அவர்கள் உங்களைச் சுற்றிச் சுற்றி வருவோர். நீங்கள் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்கிறீர்கள். அல்லாஹ் இவ்வாறுதான் உங்களுக்கு வசனங்களை விளக்குகிறான். அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனும் ஞானம் கொண்டவனாகவுமுள்ளான்...,

உங்கள் குழந்தைகள் பருவ வயதை அடைந்துவிட்டால் அவர்களை முந்திய வர்கள் அனுமதி கோரியது போல் அவர்களும் அனுமதி கோரட்டும். அல்லாஹ் இவ்வாறுதான் உங்களுக்கு அவனது வசனங்களை விளக்குகிறான். அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனும் ஞானம் கொண்டவனாகவுமுள்ளான்''(நூர்: 58,59)

இங்கு முதலில் அல்-குர்ஆன் அவ்ரத் என்பதை விரிவான பொருளில் பாவித்திருப்பதை விளங்கிக் கொள்வது அவசியம். அது உடலின் ஒரு பகுதி என்பதைத் தாண்டி மேலுள்ள வசனத்தில் குறித்த சில நேரத்தை குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறித்த சந்தர்ப்பத்தில் குறித்த சாராருக்கு மறைக்கப்பட வேண்டிய ஒரு விடயமாக நாம் அவ்ரத்தை விளங்கிக் கொள்கிறோம்.

இந்த வகையில் ஆடைக்கு முன்னர் வீடும், அறைகளும் இங்கு அவ்ரத்தாக பார்க்கப்பட வேண்டிய தேவை இருப்பதை இந்த வசனங்கள் உணர்த்துகின்றன. ஒருவருடைய வீடு, எந்த வெளித் தலையீடுகளும் இன்றி தனித்த தன்மையுடன் (Privacy) இருக்க வேண்டும். அதற்குள்ளால் நுழைதல் முன் அனுமதி இல்லாமல் தடைசெய்யப்பட்டுள்ளது. இதற்கான முக்கிய காரணம் உள்ளால் இருப்பவர் மானசீக ரீதியாகவும், உடல், ஆடை... என எல்லா வகையிலும் சுதந்திரமாக இருப்பதற்கான வாய்ப்பை வழங்குவது என்பதுடன் வெளியால் இருப்பவர் உள்ளே இருப்பவரின் அனுமதி இன்றி அவரது மறைவான விடயங்களில் தலையீடு செய்யாது இருப்பதுடன், காண்பதற்கு கூடாதவற்றை காண்பதன் ஊடாக தவறான நடத்தைகள் ஏற்படாது பாதுகாப்பதுமாகும். எனவேதான் அனுமதி மறுக்கப்படுவதற்கும் இங்கு இடம் இருக்கின்றது.

(இதுவேதான் தொலைத் தொடர்பு சாதனங்களினாலான நுழைவுக்குமுரிய ஒழுங்குமாகும். ஆனால் துரதிஷ்டவசமாக அப்படி பதில் அளிக்காவிடில் பலருக்கு காரணம் சொல்ல வேண்டிய துர்ப்பாக்கியம் இன்று நிலவுகிறது.) ஏனெனில், ஒருவர் எத்தகைய சூழலில் இருக்கிறார் என்பதை யாராலும் குறித்துக் கூற முடியாது.

அதிலும் ஒரு வீட்டிற்குள்ளும் ஒருவருடைய தனித்த அறை என்பது அவருக்கு இன்னும் சுதந்திரத்திற்குரிய இடம். அதிலும் அல்-குர்ஆன் உதாரணமாகக் குறிப்பிட்ட நேரம் போன்ற ஒருவர் மிகச் சுதந்திரமாக இருப்பதற்கான பொழுதுகள் முக்கியமானவை. இங்கு வெளியே இருப்பவரால் உள்ளிருப்பவரது சுதந்திரம் பாதிக்கப்படக் கூடாது என்ற (பக்.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களது ஒழுக்கப் பிறழ்வுக்கு காரணம் என்ன..?



• நிஸான் ஸெய்ன்

மாணவர்கள் தங்களது O/L பிரியாவிடை நேரம் மற்றவர்களை அசௌகரியப்படுத்தும் விதத்தில் நடந்து கொள்ளும் பல சம்பவங்களை நாம் வருடந்தோறும் பார்க்கிறோம். அதேபோல் சாதாரண தர பரீட்சை முடிவடைந்த பின்பு பாதைகளில் அநாகரிகமாக பலர் நடந்து செல்வதோடு சிலவேளை பொதுச் சொத்துகளுக்கும் சேதம் விளைவித்துக் கொண்டு செல்வதையும் அவதானிக்கிறோம். இதை Fun என்று அனுமதிப்பதா..? பிள்ளைகள்தானே என்று விட்டுவிடுவதா..? அல்லது எதனால் இந்த விடயங்கள் நடைபெறுகின்றன என்று சிந்தித்து செயலாற்றுவதா..?

மாணவர்களுக்கான எச்சரிக்கை என்ற ஒரு செய்தியையும் சமூக வலைத்தளங்களில் கண்ணுற்றேன். அதன் உண்மைத் தன்மையை நான் அறியவில்லை. இருப்பினும் அதனால் எழுந்த சில கருத்துக்களைப் பகிரலாம் எனக் கருதுகின்றேன.

இங்கு கல்விக் கொள்கை நியாய தர்மங்கள் பற்றி அலசி ஆராய முடியாது. சமகால கல்வி முறையால் ஏற்பட்ட உளரீதியான மாற்றங்களின் எதிர்வினையை மையப் படுத்தி மட்டுமே இங்கு சிலவற்றைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

மாணவர்களை அதிக மன அழுத்தத்துக்குள் வாழவைக்கும் கல்வி முறை, அவர்களை இயல்பாக வாழவிடவில்லை. பாடசாலையின் கல்வி முறை சம்பிரதாயங்கள், வித்தியாசமான பாடச் சுமைகள், 'படி படி' என்று வீட்டுக்குள் எதிரொலிக்கும் வன்முறைகள், டியூசன் கலாசார ஆதிக்கங்கள், பரீட்சைகள் என்ற பலி பீடங்கள் போன்றன பிள்ளைகளை அவர்களது இயல்பு நிலையில் வைக்க இடமளிக்கவில்லை. அவர்களது சந்தோஷத்தை அவை பறித்ததாகவே அவர்கள் கருதுகின்றனர்.

இவ்வாறான கல்வி முறை பொறிக்குள் அகப்பட்டுத் தவிக்கும் குழந்தைகள் பலர், தங்களது மனக் கிடக்கைகளை பெற்றோரிடமோ ஆசிரியர்களிடமோ வெளியிட முடியாமல் அவஸ்தைப்படுகின்றனர். மனம் விட்டுப் பேசும் ஒரு தளமோ களமோ அவர்களுக்கில்லை. அடக்குமுறைகளுக்குப் பயந்து, வாய் மூடி மௌனிகளாக அவர்கள் உள்ளனர். அவற்றின் தாக்கங்களை அவர்களது முரட்டுத் தனங்களிலும் வெறுப்பிலும் ஒழுங்கீனங்களிலும் நிறையவே எமக்கு காணலாம்.

இவ்வகையில் கல்வி முறை சார் அடக்குமுறையினால் ஏற்பட்ட மன அழுத்தங்களின் தாக்கத்தால் கல்விப் பொதுத்தர சாதரண தரப் பரீட்சை எட்மிஷனில் கையொப்பமிட்டதற்குப் பிறகு, பல மாணவர்கள் பாடசாலை சொத்துக்கும் தளபாடங்களுக்கும் சேதம் விளைவிக்கும் அநாகரிக சூழ்நிலைகளை பல பாடசாலைகளில் காணலாம். இதில் குறிப்பிட்ட தொகை மாணவர்கள் ஈடுபட்டாலும் ஏனைய மாணவர்கள் அதற்கு ஆதரவாக நடக்கிறார்கள்.

சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதி விண்ணப்பத்தில் கையொப்பமிட்டதன் பின்பு பாடசாலைகளிலிருந்து மாணாக்கரை விலக்க முடியாது. இந்நிலையில் எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையையும் எடுக்க முடியாமல் பாடசாலை நிருவாகம் கைகட்டி நிற்க வேண்டியுள்ளது. அதேபோன்றே பரீட்சை முடிவடைந்த பின்பும் எதனையும் பாடசாலை நிருவாகத்திகு செய்ய முடியாது. அவற்றை அவர்கள் நன்றாகவே உணர்ந்திருக்கிறார்கள்.

பாடாசாலையில் பல ஆசிரியர்களின் மாற்றாந்தாய் மனப் போக்குகளாலும் மாணவர் நலன் அக்கறையில் மாணவர்களை அணுகாததாலும் கற்பித்தலில் கவராததாலும் பல ஆசிரியர்கள் முன்மாதிரியாகச் செயற்படாததாலும் தங்களது தனிப்பட்ட சவால்களுக்கு முகம் கொடுக்க அவர்கள் உறுதுணையாக நிற்காததாலும் எதிர்பார்க்கும் அன்பும் ஆதரவும் பல ஆசிரியர்களிடமிருந்து கிடைக்காததாலும் மாணவர்கள் ஏற்கனவே மனப் பாதிப்புகளுக்கு உட்பட்டிருப்பர்.

பெற்றோர்கள் டியூசன்களுக்கு வற்புறுத்தி அனுப்புவதும் படிக்கச் சொல்லி நச்சரிப்பதும் அவர்களை நான்கு சுவருக்குள் பதுக்கல் சரக்காய் வைக்கப் பார்ப்பதும் மாணவர்களை கூடுதலாகவே மன அழுத்தங்களுக்கு உட்படுத்தி விட்டுள்ளது.

மாணாவர்களைப் புரிந்து, அவர்களை பல்வகையிலும் உற்சாகப்படுத்துகின்ற மேம்பாட்டு திட்டங்களையோ அவர்களது எழுச்சிக்கான சமூகவியல் தளங்களையோ சமூக நிறுவனங்களும் அமைத்துக் கொடுக்கவுமில்லை.

எனவே, இவ்வாறு குடும்பத்தில், பாடசாலையில், சமூகத்தில் ஏற்படும் விரக்தி நிலை, அவர்களுக்கு மன அழுத்தத்தை தந்தனால், அவ்வாறான சமூக நிறுவன கட்டமைப்பின் மீது வெறுப்பை, ஆத்திரத்தை, கோபத்தை செயல்களால் அவர்கள் உமிழ்கின்றனர். அது அவர்களில் ஒழுங்கீனத்தை, நெறிபிறழ்வை ஏற்படுவதோடு, சமூக களங்கத்தையும் தோற்றுவித்து விடுகிறது.

எனவே, குறித்த சம்பவத்தின் பின்னாலுள்ள சமூக, உளவியல் காரணிகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதே புத்திசாலித்தனமானது. மாணவர்கள் விரும்பி, ஆசையோடு கற்கும் கல்விக் கொள்கை, மனம் கவர் கற்பித்தல் முறை, உளவியல் ரீதியான வழிகாட்டல்கள் போன்றன அமையும் போது இயல்பாகவே அவர்கள் கற்றலில் ஈடுபட முனைவார்கள். அவர்களது இயல்பு நிலைக்கு முரணாக அல்லது சந்தோஷத்தைத் தராத முறைமைகளால் அவர்களை உள்வாங்க நினைப்பதாலேயே பல ஆரோக்கியமற்ற விடயங்கள் நிகழ்கின்றன.

மாணவர்களில் ஒழுங்கீனங்கள் ஏற்பட்டவுடன் பதறுவதை விட வழிகாட்டல்கள், நெறிப்படுத்தல்கள் முறையாக, உள்ளத்தை கவரும் விதத்தில், ஆரம்பம் தொட்டே மேற்கொள்ளப்படல் வேண்டும். அவர்களது மனம் கோணும் இயந்திர முறையை ஏற்படுத்திவிட்டு, அவ்வாறு அவர்கள் நடக்கக் கூடாது என்றும் அது எம்மை கவலை கொள்ளச் செய்துவிடும் என்றும் புலம்புவது முறையல்ல.

'பாடசாலைப் பிள்ளைகள் அப்படித்தான்.. அவர்களை தடுக்கக் கூடாது... பெரிதானால் கதைக்க, அது பல ஞாபகங்களை கொண்டு வந்து தரும்' என்றால், அனைத்து வாசல்களையும் அவர்களுக்கு திறந்துவிட வேண்டி வரும். ஆசிரியர்களுக்கு அடித்தல், முறைகேடான பாலியல் நடத்தைகள், மதுபானம், போதைவஸ்துப் பாவனை என்று நீளும் பட்டியலுக்கு அனுமதி சான்றிதழை அவர்களுக்கு வழங்க வேண்டி வரும். இவ்வாறான பல சுதந்திரங்களை அனுமதித்த காரணத்தினாலேயே மேற்கத்திய கலாசாரம் ஆணுறைகளை வழங்கும் இழிநிலைக்கு வந்துவிட்டது.

கல்வி என்பது தொழில்துறை இயந்திரங்களை உருவாக்கும் தொழிற்சாலையல்ல. ஆன்மிக, பண்பாட்டு, ஒழுக்க நெறிகளில் மற்றும் பொருளாதார, கலாசார, சமூக, அரசியல் துறைகளில் மேம்பாட்டை ஏற்படுத்துவது கல்வியின் முக்கிய பயன்களாகக் கொள்ளப்படுவதையும் நாம் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

## அன்னை ஆயிஷா (றழி) அவர்களின் வாழ்வியல் – 16

# மு.:.மின்களின் தாய்

### நபிகளாரிடம் சந்தேகங்களை நிவர்த்திக்கும் ஆயிஷா

ஒருமுறை பால்குடி முறையில் ஆயிஷாவிற்கு சாச்சா முறை யிலான உறவினர் ஒருவர் ஆயிஷாவின் வீட்டிற்கு வருகை தந்த போது ஆயிஷா அவருக்கு அனுமதி மறுத்தார். பின்னர் ரஸூலுல் லாஹ்விடம் கேட்டபோது, அவர் உன்னுடைய சாச்சா. நீ அவருக்கு அனுமதி வழங்கு எனப் பதிலளித்தார்.

ஆயிஷாவிற்கு ஸூறதுல் முஃமினீனின் 60ஆவது வசனம் குறித்து விளக்கம் அவசியமானபோது நபிகளாரிடம் வினவினார்கள். "எவர் தங்களுக்குச் சாத்தியமான வரையில் தானம் கொடுப்பதுடன், அவர்களுடைய உள்ளங்கள் நிச்சயம் நாம் இறைவனிடம் திரும்பிச் செல்வோம் என்று பயந்துகொண்டிருக்கிறதோ அவர்களும்" இறைதூதரே! திருடுகின்ற, விபச்சாரத்தில் ஈடுபடுகின்ற, மதுபானத்தை அருந்துகின்றவன் அல்லாஹ்வைப் பயப்படுகின்றானா எனக் கேட்டேன். அதற்கு, அபூபக்ரின் மகளே, ஸித்தீகின் மகளே, அவ்வாறில்லை. தொழுகின்ற, நோன்பு நோற்கின்ற, ஸதகா செய்கின்றவனே அல்லாஹ்வைப் பயப்படுகின்றான் எனப் பதிலளித்தார்கள்.


"யார் அல்லாஹ்வைச் சந்திக்க விரும்புகின்றாரோ அல்லாஹ்வும் அவரைச் சந்திக்க விரும்புகின்றான். யார் அல்லாஹ்வைச் சந்திப்பதை வெறுகின்றாரோ அல்லாஹ்வும் அவரைச் சந்திக்க வெறுகின்றான்" என நபிகளார் கூறியபோது, அல்லாஹ்வின் நபியே! மரணத்தை நாம் எல்லோரும் வெறுக்கின்றோமே எனக் கூறினேன். அதற்கு நபிகளார், அவ்வாறல்ல ஒரு முஃமின் அல்லாஹ்வுடைய அருள், திருப்தி, சுவர்க்கம் குறித்து சுபசோபனம் சொல்லப்பட்டால் அல்லாஹ்வை சந்திப்பதை விரும்புவான். அல்லாஹ்வும் அவனைச் சந்திப்பதற்கு விரும்புகின்றான். காபிர்களோ அல்லாஹ்வின் தண்டனையையும் அவனது கோபத்தையும் குறித்து முன்னறிவிப்புச் செய்யும் போது அல்லாஹ்வைச் சந்திப்பதை வெறுக்கின்றார்கள். அல்லாஹ்வும் அவர்களைச் சந்திப்பதை வெறுக்கின்றான்.

ஆயிஷா அவர்கள் தனக்கேற்பட்ட மார்க்க ரீதியான சந்தேகங்களை நபிகளாரிடம் வினவி, அதற்குரிய விளக்கங்களைக் கோரிய இதுபோன்ற பல உதாரணங்களை ஸஹீஹான கிரந்தங்களில் காணலாம். மார்க்கத்தின் ஒவ்வொரு விவகாரம் குறித்தும் அதன் யதார்த்த நிலையை அறிந்து கொள்வதில் ஆயிஷா காட்டிய ஆர்வத்தையே அதனூடாகப் புரிந்துகொள்ளலாம். நபிகளாரிடம் கேள்வி கேட்பதற்கு ஆயிஷா ஒருபோதும் அஞ்சியதில்லை. ஆயிஷா அல்லாத வேறு எவரேனும் கேட்பதற்கு அஞ்சக் கூடிய சூழ்நிலைகளிலும் ஆயிஷா அச்சமின்றி நபிகளாரிடம் கேள்வி கேட்பவராக இருந்தார். ஆயினும், நபிகளார் ஆயிஷாவிடம் கொண்டிருந்த அன்பினாலும் இரக்கத்தினாலும் ஆயிஷாவுக்கு இவ்வாறான கேள்விகளைக் கேட்பதில் சங்கடங்கள் இருக்கவில்லை.

எடுத்துக் காட்டாக ஒருமுறை நபிகளார், ஒரு மாத காலத்திற்கு தனது மனைவி மார்களின் வீடுகளுக்குச் செல்வதில்லை என சத்தியம் செய்து கொண்டார்கள். 29 நாட்கள் தனக்குரிய கூடாரமொன்றில் தங்கியிருந்தார்கள். இக்காலப் பகுதியில் எந்த மனைவியிடமும் செல்லவில்லை. இது உம்மஹாதுல் முஃமினீன்களிடையே பெரும் கவலையையும் வருத்தத்தையும் ஏற் படுத்தியது. 29 நாட்கள் பூரணமடைந்த பின்னர் நபிகளார் ஆயிஷாவின் வீட்டுக்குச் சென்றார்கள். இச்சந்தர்ப்பம் ஆயிஷாவைப் பொறுத்த வரை மிகவும் மகிழ்ச்சிக்கும் சந்தோசத்திற்கும் உரியது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இச்சந்தர்ப்பத்தில் ஆயிஷா மகிழ்ச்சியடைவதோடு, கடந்து போனதை மறந்திருக்க வேண்டும். நபிகளாரைக் கோபமூட்டக் கூடிய வார்த்தையை ஆயிஷா பேசியிருக்கக் கூடாது. ஆனால், ஷரீஆவை விளங்க வேண்டும் என்ற அவரது ஆர்வம் தணியவில்லை. மகிழ்ச்சியை விட தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தை நிவர்த்திப்பது அவருக்கு முக்கிய மானதாய்த் தோன்றியது. இதனால்தான், அவரிடமிருந்து நபிகளார் இந்த வார்த்தைகளைக் கேட்டார்கள். நபிகளார் ஆயிஷாவின் வீட்டில் காலடி எடுத்து வைத்தபோது, "நீங்கள் ஒரு மாதம் காலம் எமது வீடுகளுக்கு வருவதில்லை என்று சத்தியம் செய்தீர்களே. நான் எண்ணிப் பார்த்தேன். 29 நாட்களே கடந்து விட்டிருக்கின்றன? என ஆயிஷா கேட்டபோது, இந்த மாதம் 29 நாட்களுடன் முடிவடைகின்றது என நபிகளார் பதிலளித்தார்கள். உண்மையில் அம்மாதம் 29 நாட்களுடன் முடிவடைந்தது. (தொடரும்)

# இடைவிலகல் குறித்து பெற்றோர்கள்...



## கம்பஹா மாவட்ட முஸ்லிம் கல்வி – 11

**கலாநிதிப் பட்டத்திற்காக றவூப் ஸெய்ன் மேற்கொண்ட கம்பஹா மாவட்ட இடைநிலைப் பாடசாலை மாணவர் இடைவிலகல் எனும் தலைப்பிலான ஆய்வின் அறிக்கை முக்கியத்தும் கருதி இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.**

இந்த எண்ணக்கருச் சட்டகத்தில் குறிப்பிடப்பட்ட சாராமாறிகள் சார்மாறியான இடைவிலகலில் எவ்வளவு தூரம் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை அறியும் பொருட்டு பல்வேறு தரவு சேகரிப்புக் கருவிகள் மூலம் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் தரவுகள் பெறப்பட்டன. ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் பெற்றோருக்கும் வழங்கப்பட்ட வினாக்கொத்துக்களில் மாணவர் இடைவிலகலுக்கான காரணங்களைப் பரிசீலிக்கும் வகையிலான உருப்படிகள் இடம் பெறச் செய்யப்பட்டன.

அதில் மாணவர்களின் கற்றல் ஆர்வமின்மை, பெற்றோரின் கடும் வறுமை, சமவயதுக் குழுக்களின் நேர்மறைத் தாக்கம், பெற்றோரின் ஈடுபாடின்மையும் குறைந்த கல்வி மட்டமும் போதைவஸ்துக்கு அடிமையாதல், பெற்றோர் வெளிநாடு செல்லல் ஆகிய உருப்படிகளுக்கான துலங்கல்களின் இடைப் பெறுமானம் சராசரிப் பெறுமானத்தை விட அதிகமாக இருப்பதிலிருந்து இக்காரணிகள் மாணவர் இடைவிலகலில் குறிப்பிட்ட அளவு செல்வாக்குள்ளனவை என்று தெளிவாக்கப்படுகின்றது.

பெற்றோரின் கல்வி ஈடுபாட்டுடன் தொடர்பான பல உருப்படிகள் வினாக்கொத்தில் சேர்க்கப்பட்டிருந்தன. அதேபோன்று வீட்டுமையக் கற்றலில் பெற்றோரின் ஈடுபாடு தனியான பகுதியாக சேர்க்கப்பட்டு அதில் சிலதுணைக் காரணிகள் உள்ளடக்கப்பட்டன. பிள்ளைகளுடனான பெற்றோரின் உறவும் தனிக் காரணியாக சேர்க்கப்பட்டு அதிலும் பல துணைக் காரணிகள் உள்ளடக்கப்பட்டன.

பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் நாளாந்த ஈடுபாடு குறித்த உருப்படிகளில் பின்வருவன சேர்க்கப்[illegible]தன. காலையில் பிள்ளையைப் பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு அனுப்புவதற்கு இரவிலேயே முன்னாயத்தம் செய்தல், காலையில் நேர காலத்துடன் எழல், காலை உணவை வீட்டிலேயே தயாரித்து வழங்கல், மகிழ்ச்சியான மனோநிலையுடன் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவைத்தல், பாடசாலை பெற்றோர் கூட்டங்களுக்கு செல்லல், பாடசாலை ஆசிரியர்கள் அதிபருடன் தனிப்பட்ட உறவு, பாடசாலை வகுப்பறைச் சுத்தம் மற்றும் சிரமதானங்களில் ஈடுபடல், பாடசாலை பௌதீக வளங்களை மேம்படுத்தப் பங்களிதல், ஒவ்வொரு நாளும் பாடசாலைக்குப் பிள்ளையை அனுப்புதல், பிள்ளைகளின் குறிப்புப் புத்தகங்களைப் பார்வையிடல்.

மேற்படி உருப்படிகளுக்கான துலங்களின் இடைப்பெறுமானம் சராசரிப் பெறுமானங்களை விட குறைவானதாக இருப்பதிலிருந்து பெற்றோரின் ஈடுபாடு பிள்ளைகளில் போதுமானளவு இல்லை என்பது தெளிவாக்கப்படுகின்றது. அதேபோன்று வீட்டுமையக கற்றலில் பெற்றோரின் ஈடுபாடு என்ற வினாக்கொத்துப் பகுதியில் பல உருப்படிகள் சேர்க்கப்பட்டிருந்தன. அவற்றுள் நாளாந்தம் பிள்ளைகளின் பாடமீட்டலைக் கண்காணித்தல், பாடங்களில் வழங்கப்படும் வீட்டு வேலைகளை (Home work) பிள்ளை செய்கிறதா என்பதைக் கவனித்தல், வீட்டில் பிள்ளைக்குக் கற்பித்தல், டியூஸன் வகுப்புகளுக்குப் பிள்ளைகளை கிரமமாக அனுப்புதல், வீட்டில் தவணைப் பரீட்சைக்குப் பிள்ளையைத் தயார்செய்தல், வீட்டில் அமைதியான இடத்தில் கற்பதற்கு இங்கிதமான சூழலொன்றை உருவாக்குதல், போதிய கற்றல் சாதனங்களை வழங்கல் போன்றன முக்கியமானவை. இவற்றுக்கான துலங்கலின் இடைப்பெறுமானம் சராசரிப் பெறுமானங் களை விடக் குறைவானதாக இருப்பதிலிருந்து வீட்டுமையக் கற்றிலில் பெற்றோரின் ஈடுபாடு திருப்திகரமானதாய் இல்லை என்பது வெளிப்படுத்தப்படுகின்றது.

பெற்றோர் - பிள்ளைகளுக்கிடையிலான உறவுகளும் தொடர்புகளும் இடைவினைகளும் கூட ஒரு பிள்ளையின் கற்றல் ஆர்வம், பாடசாலைக்கான தொடர்வருகை, உயர் பெறுபேறுகள் என்பவற்றின் மீது தாக்கம் கொண்டவை என்பது தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய குடியுரிமைச்... (01 ஆம் பக்கத் தொடர்)

இந்த அரசு தனது ஹிந்துத்துவா கொள்கையை அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்லவே இந்த மசோதாவை விரைந்து நிறைவேற்ற முயல்கிறது. இந்த சட்டம் செயலிழந்து போகும் என்பதில் நான் தெளிவாக இருக்கிறேன். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் வங்கதேசத்தை மட்டும் எடுத்துக் கொண்டு பிற அண்டை நாடுகள் எதன் அடிப்படையில் விலக்கப்பட்டது? எதன் அடிப்படையில் இந்த ஆறு மதங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன? அகமதியர்கள் மற்றும் ரோஹிஞ்சாக்களை எந்த அடிப்பையில் விலக்கினார்கள்? கிறித்துவ மதத்தைச் சேர்த்துக் கொண்டு யூதம் மற்றும் முஸ்லிம் மதத்தை விலக்குவதற்கான காரணங்கள் என்ன? இலங்கை தமிழர்களையும், பூட்டானின் கிறித்துவர்களையும் ஏன் இதில் சேர்க்கவில்லை? என்று ப. சிதம்பரம் கேள்வி எழுப்பினார்.

குடியுரிமை சட்டத் திருத்த மசோதா குறித்து பேசிய மார்க்ஸிட் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த டி.கே. ரங்கராஜன், "இது சட்டமாக்கப்பட்டால், சிறுபான்மையினர் ஒடுக்கப்பட்டால் அதற்கு யார் பொறுப்பு? எனவே தான் எனது கட்சி இதை எதிர்க்கிறது. இந்த நாட்டை பாழாக்காதீர்கள், அரசமைப்பை பாழாக்காதீர்கள். அதுதான் எனது கோரிக்கை" என்று கூறினார்.

இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டால் அது நமது நாட்டின் மதச்சார்பின்மைக்கு பெருத்த அடியாக இருக்கும் என திமுக எம்.பி திருச்சி சிவா பேசினார்.

குடியுரிமை சட்டத் திருத்த மசோதா குறித்து மைதிமுக பொது செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ பேசுகையில், 'இந்த அருவருக்கத்தக்க, ஜனநாயகமற்ற, நியாயமில்லாத, அரசமைப்புக்கு எதிரான சட்டம் நிறைவேற்றப்பட்டால் அது மாநிலங்களவை வரலாற்றில் கறுப்புப் பக்கமாக அமையும்' எனத் தெரிவித்தார்.

இந்திய லோக்சபாவில் திங்கட்கிழமை நிறைவேற்றப்பட்ட இந்தக் குடியுரிமைச் சட்டத்தில் இந்தியாவுக்குப் பக்கத்திலுள்ள முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் நாடுகளில் மதத் துன்புறுத்தல்களுக்குள்ளாகி 2014 டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் இந்தியாவுக்குள் நுழைந்த இந்து, சீக்கிய, பௌத்த, ஜைன, பார்சிய, கிறிஸ்தவ சமூகங்களைச் சேர்ந்தவர்கள் சட்டவிரோதக் குடிகளாகக் கருதப்பட மாட்டார்கள்.

## MCC இனால்... (01 ஆம் பக்கத் தொடர்)

தேர்தலுக்கு முன்னர் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதாக வெளியான செய்திகளை வைத்து கடந்த அரசாங்கத்தை, நாட்டைத் தாரைவார்த்தவர்கள் எனக் கூறிய ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தற்பொழுது இந்த ஒப்பந்தத்தை ஆதரித்து வருகிறார். அதேநேரம் அமைச்சர் விமல் வீரவன்ச இது பற்றிக் குறிப்பிடும் போது, இந்த அரசாங்கத்தில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு ஒரு போதும் இடமளிக்க மாட்டேன் எனத் தெரிவித்திருந்தார்.

இந்த ஒப்பந்தம் தொடர்பில் கருத்து வெளியிட்ட ராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, நாங்கள் அதிலே கைச்சாத்திட மாட்டோம். அரசின் சுயாதிபத்துக்குப் பாதகமான எந்த சர்வதேச ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடப் போவதில்லை என ஜனாதிபதியின் வேலைத் திட்டங்களில் அவர் சொல்லியிருக்கிறார்.

இந்த நாட்டின் வளங்கள், நிலம், நாட்டின் அதிகாரம் எதனையும் நாங்கள் எப்படி விட்டுக் கொடுக்க முடியும்? அப்படி ஒரு நிலை வந்தால் நான் இந்த அரசாங்கத்தில் இருக்க மாட்டேன் என்று தெரிவித்தார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் அரசாங்கத்திலுள்ள இடதுசாரிகள் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கூடாது என்று கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

அமெரிக்காவின் மில்லேனியம் சலேஞ்ச் கோப்பரேஷனுடன் செய்து கொள்ளப்படவுள்ள ஒப்பந்தத்துக்கு எதிராக காஷ்யப்ப தேரர் மேற்கொண்ட உபவாசத்தின் போது, உபவாசத்தைக் கைவிடுங்கள். நான் ஜனாதிபதியானதும் சர்வதேசத்துடன் செய்து கொள்ளப்படும் உடன்படிக்கைகள தொடர்பில் மறுபரிசீலனை செய்வேன் என்று ஜனாதிபதி வேட்பாளராக இருக்கும் போது கோதாபய ராஜபக்ஷ கடிதம் அனுப்பியிருந்தார். அப்போது அமெரிக்கத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தேர்தல் முடிந்த பின்னர் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் எனத் தெரிவித்திருந்தது.

## ஹிஜாப்... (12 ஆம் பக்கத் தொடர்)

கவனம் இருப்பது போலவே உள்ளே இருப்பவரால் வெளியே இருப்பவாது மனோநிலை பாதிக்கப்படக் கூடாது என்பதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஒருவரது பாலியல் உணர்வு முதல் அவரது மனஉணர்வு மற்றும் சிந்தனை நடத்தை சார் சீர்மைக்கு இப்படியான சுதந்திரமான இடங்களும் பொழுதுகளும் முக்கியமானவை. அல்-குர்ஆனின் இந்த வசனங்களை வாசித்துச் செல்கின்ற போது இந்த வசனங்கள் ஹிஜாபை ஒரு தடையாக அல்லாமல் ஒரு சுதந்திர எல்லையை பெற்றுத் தரும் ஒரு தடுப்பாகவே குறிப்பிடுவதை பார்க்க முடிகிறது.

இங்கு, அல்-குர்ஆன் ஒருவருக்கு பார்க்கக் கூடாத நிலையில், பருவத்தில், பார்க்கக் கூடாதவர்களது காட்சிகள் காண்பிக்கப்படக் கூடாது என்பதில் முதல் கவனம் எடுத்திருப்பதைக் காண்கிறோம். அதுதான் முதலில் இங்கு தடுக்கப்பட வேண்டியவை. அவை ஒருவனது ஆழ்மனக் காட்சியாக பதிந்துவிட்டால் அதன் விளைவு மிகவும் பாரதூரமானது. அதனைத்தான் நாம் இன்று உலகில் கட்டற்ற பாலியல் கலாச்சார சூழலின் விளைவாக அன்றாடம் அனுபவிக்கின்றோம்.

இங்குதான் ஹிஜாப் குறித்த இஸ்லாத்தின் வழிகாட்டல் எங்கிருந்து நடைமுறைப்படுத்த ஆரம்பிக்க வேண்டும் என்ற விடயம் எமக்கு துளங்குகிறது. எவனோ வடிவமைத்த ஆடையை அணிவது குறித்து சர்ச்சைப்படும் நாம், குந்தியிருக்க வீடற்று வாழும் எத்தனையோ ஆயிரம் மக்கள் எப்படி இந்த வழிகாட்டலை நடைமுறைப்படுத்துவார்கள் என சிந்திக்க வேண்டியுள்ளது.

இரண்டு சுவர்களுக்கும் ஒரு முந்தானைக்கும் மத்தியில் வாழும் குடும்பங்களது கதி என்ன? மாற்றி அணிய ஆடை அற்று ஒட்டுத் துணியுடன் வாழும் மக்களது நிலை என்ன?... பள்ளிவாயில்களுக்கும், உழ்ஹியாக்களுக்கும், நிகாப் மாநாடுகளுக்கும்... கொட்டப்படும் இலட்சங்கள், மணித்தியாலங்கள், மனித வளங்கள் ஏன் இங்கு செலவழிக்கப் படக் கூடாது? இது, மனிதனின் மானம் காக்கும் பணி. இதற்கு யார் வகை சொல்வது? இஸ்லாத்தில் ஹிஜாபை நடைமுறைப்படுத்துவது என்பது ஒரு கறுப்புத் துணியை பல்லாயிரங்கள் கொடுத்து எடுத்து உருவத்தை மூடுவது அல்ல.

## நிதியமைச்சின்... (01 ஆம் பக்கத் தொடர்)

மேம்படுத்தல், வெளிப்படைத் தன்மையை உறுதி செய்தல், பயனாளிகளின் வசதிகள் மற்றும் சேவைகளை உயர் தரத்தில் வழங்குதல் ஆகியன எதிர்பார்க்கப்படுகின்றன.

இலங்கைச் சுங்கப் பிரிவை மேலும் மக்களுடன் நெருக்கமாக்கும் வகையில் தனியான பிரிவொன்றை (Single Window) உருவாக்கி, ஏற்றுமதித் துறையின் சகல சேவைகளையும் தனியான பிரிவினூடாக வழங்குவதும் இதனுள் உள்ளடங்கும். சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் பிரதான மத்திய நிலையமாக இலங்கைச் சுங்கப் பிரிவு கடமையாற்றுகிறது. இதனால் இதனுடன் தொடர்புபட்ட அனைத்து அரச நிறுவனங்களும் இந்தத் திட்டத்தில் இணைக்கப்படவுள்ளன.

தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்தின் உள்ளக அபிவிருத்தி வேலைத் திட்டமாக (Inhouse Development) தகவல் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்த இளைஞர்களின் முயற்சியினால் மேலதிகச் செலவுகள் எதுவுமின்றி இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## நெருக்கடிகளின்... (06 ஆம் பக்கத் தொடர்)

ECD அபாயச் சுட்டியின் அடிப்படையில் இலங்கைக்கு கிடைத்துள்ள புள்ளிகள் 6 ஆகும். முன்னர் இருந்த நிலை கூட 6 ஆகும். இலங்கையை விட அதிகமான புள்ளிகளைப் பெற்றிருப்பது ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மாத்திரமாகும். அந்த இரண்டு நாடுகளின் புள்ளிகள் 7 ஆகும். புள்ளிகளின் அடிப்படையில் இலங்கை மற்றும் மியன்மார் என்பன ஒரே நிலையில் காணப்படுகின்றன. சிங்கப்பூர் 0.0 ஆகும். இந்தியா, பிலிப்பைன், தாய்லாந்து போன்ற நாடுகள் ஒரே நிலையில் காணப்படுகின்றன (3.3).

அபாயச் சுட்டியானது கூடிய அளவில் இருக்கின்ற நாடுகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்வதில்லை. 2016 ஆம் ஆண்டின் வெளிநாட்டு முதலீட்டு வரவு 9.7 பில்லியன் டொலர்களாகும். 2016 ஆம் ஆண்டில் மற்றைய நாடுகளின் வெளிநாட்டு முதலீட்டு விபரங்கள் வருமாறு: தென்கொரியா 185.0, ஹொங்கொங் 1698.8, தாய்வான் 75.0, தாய்லாந்து 188.7, மலேசியா 121.6, சிங்கப்பூர் 1096.3 நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக வெளிநாட்டு முதலீடுகள் அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றன. இலங்கை என்பது வெளிநாட்டு முதலீடுகள் பெறத்தக்க ஒரு நாடாகும். இலங்கையின் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு இனங்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதன் ஊடாக அபாயச் சுட்டியினைக் குறைக்க முடியுமாயின் வெளிநாட்டு முதலீடுகள் வருவதற்கு அது காரணமாக அமையும்.

### தலைக்கு மேல் வளர்ந்திருக்கும் ஊழல்

இலங்கை இப்படியானதொரு பின்னடைவை அடைவதற்கு ஊழல் தலைக்கு மேலாக வளர்ந்திருப்பதையும் ஒரு முக்கிய காரணமாகக் கருதலாம். அதிகார பிரமிட்டில் மேல் பகுதி ஊழல் மிக்கதாகக் காணப்படுகின்றது. ஊழல் என்பது கட்டுப்படுத்த முடியாத ஒன்றாக இருப்பதற்கான காரணமும் அதுவே. ஊழல் தொடர்பான சர்வதேச தரப்படுத்தலில் குறைந்த ஊழல் காணப்படுகின்ற நாடாக இருப்பது டென்மார்க்காகும். நியூசிலாந்து இரண்டாம் இடத்தைப் பிடித்திருப்பதுடன் பின்லாந்து, சிங்கப்பூர் சுவிட்சர்லாந்து ஆகியன மூன்றாவது இடத்தில் இருக்கின்ற நாடுகளாகும். இந்தத் தரப்படுத்தலுக்கு அமைய இலங்கை 89 ஆவது இடத்தில் இருக்கின்றது. முன்னர் அதிக ஊழல் உள்ள நாடாகக் கருதப்பட்டுவந்த ஹொங்கொங் தற்போது 14 வது இடத்தில் இருக்கின்றது.

சட்டத்துக்கு முரணாகப் பொருளீட்டுவதானது அரசியல்வாதிகளின் பண்பாக மாறியது 1997 ஆம் ஆண்டின் பின்னரான காலப்பகுதியிலாகும். அது திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட ஒன்றாகக் கருத முடியாது. ஊழல் குறைந்த நாடுகளாகக் கருதப்படுகின்ற டென்மார்க், நியூசிலாந்து, சிங்கப்பூர், சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் காணப்படுவது திறந்த பொருளாதார முறையாகும்.

1970 ஆண்டு வரை இலங்கையின் அதிகாரத்திற்கு வந்த ஆட்சியாளர்களிடம் குறைகள் காணப்பட்ட போதிலும் அவர்களது அதிகாரங்கள் முறையற்ற விதத்தில் பொருளீட்டுவதற்காகப் பயன்படுத்தப்படவில்லை. தமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சட்டத்திற்கு முரணாக அரசாங்கத்துடன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. இலங்கையில் இருந்துவந்த இந்த நடைமுறையானது தலைகீழாக மாற்றப்பட்டது ஜனாதிபதி ஜயவர்தனவினாலாகும்.

தனது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முறையற்ற விதங்களில் பொருளீட்டுவதற்கு இடமளிக்கும் அமைப்பிலான நடைமுறையொன்றின் ஊடாக அவர்களைக் கட்டுப்படுத்தும் இயலுமை ஜனாதிபதி என்ற அடிப்படையில் தனக்கு கிடைக்கப் பெற்று அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கான தேவைகள் ஏற்படும் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் அதற்கேற்ற வகையில் செயற்படுவார்கள் என்பதாக ஜயவர்தன எண்ணியிருந்தார் என்பதாகத் தெரிகின்றது. அரசாங்கத் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் நிலைக்குத் தள்ளப்பட்டது இதன் பிரதிபலனாலாகும். அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதிகள் அந்த அலங்கோலமான முறைக்கு இன்னும் பல பகுதிகளைச் சேர்த்து இன்னும் அசிங்கப்படுத்தி அவர்களும் அதனைப் பயன்படுத்திக்கொண்டனர்.

அதன் அடிப்படையில் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களில் பொரும்பாலானவர்கள் அரசாங்கத்துடன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களாக மாறியிருக்கின்றனர். சிலர் அரசாங்கத்திலிருந்து பெற்றுக் கொண்ட தோட்டங்கள் ஊடாக தோட்ட உரிமையாளர்களாக மாறியிருக்கின்றனர். இன்னும் சிலர் அரசாங்கத்துடன் ஒப்பந்தப் பணிகளில் ஈடுபடுகின்ற ஒப்பந்தக்காரர்களாகியிருக்கின்றனர். இன்னும் சிலர் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொண்ட மதுபான வியாபாரிகளாவர். இன்னும் சிலர் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்ட கல் மணல் வியாபாரிகளாவர்.

தேர்தல்களுக்காக 1977 ஆம் ஆண்டு வரை நடைமுறையிலிருந்த செலவுக் கட்டுப்பாட்டுச் சட்டம், தேர்தலுக்கான செலவுகள் குறித்து கணக்கறிக்கை சமர்ப்பிக்கும் முறைகள் என்பன நீக்கப்பட்டுவிடட்ன. சில தேர்தல்கள் செலவுகள் உயர்ந்த போட்டிகளாக மாறிவிட்டன. அனைத்துப் போட்டிகளிலும் விலையுயர்ந்த போட்டியாக ஜனாதிபதித் தேர்தல் காணப்படுகின்றது. எனவே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுபவர்கள் அதற்கான செலவுகளைத் தேடிக்கொள்வதற்காக கறுப்புப் பணம் வைத்திருப்பவர்களை நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கருப்புப் பணம் வைத்திருப்பவர்களின் உதவியினால் ஜனாதிபதியானவர்கள் தமக்கு உதவியவர்களுக்கு பிரதி உபகாரமாக வேறு முறைகளில் அனுசரணை வழங்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இந்த ஊழலான செயன்முறை அனைத்துத் துறைகளையும் பாதிப்புக்குள்ளாக்குவதுடன் ஊழலைக் கட்டுப்படுத்தவே முடியாத நிலைக்கும் காரணமாக அமைகின்றது.

கடவுச் சீட்டு வழங்குகின்ற நிறுவனத்திடமிருந்து பணத்துக்காக போலி கடவுச் சீட்டுக்களை பெற்றுக்கொள்ள முடியுமான நிலை காணப்படுகின்றது. தேசிய அடையாள அட்டை வழங்குகின்ற நிறுவனத்திடமிருந்து பணத்துக்காக அடையாள அட்டை பெற்றுக்கொள்ள முடிகின்றது. தேசிய அடையாள அட்டை வழங்குகின்ற நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் எல்.டீ.டீ.ஈ.க்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான தேசிய அடையாள அட்டையினை விநியோகித்தமையை குற்றவியல் தடுப்பு பிரிவினர் கண்டுபிடித்திருந்தனர். அரச வரி சேகரிக்கும் நிறுவனங்கள் அனைத்துமே ஊழல் மிக்கதாகவே காணப்படுகின்றன. பதிவாளர் நாயகம் நியூஸ் பெஸ்ட் செய்திகளுக்காக வழங்கியிருக்கும் செவ்விக்கு அமைவாக பதிவு செய்யப்பட்டிருக்கின்ற காணி உறுதிகளில் 40 க்கும் 50 க்கும் இடைப்பட்ட வீதமானவை போலி உறுதிகளாகக் கருதப்படுகின்றன. பாடசாலை ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்படுகின்ற பதிவுச் சான்றிதழ்களில் பாரிய தொகை போலியானவை என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

நாட்டின் நிறுவன முறைகளில் காணப்படுகின்ற அழுகல் நிலையை வெற்றி கொள்ளாத நிலையில் இலங்கையை முன்னேற்றப் பாதையில் எவ்வாறு தான் நகர்த்த முடியும்?

## ஜனாதிபதித் தேர்தல்... (03 ஆம் பக்கத் தொடர்)

அண்மையில் உள்ள நாடுகளையும் வரலாறுகளையும் நாம் பாடமாகக் கொள்ள வேண்டும். சிங்கப்பூர் என்பது ஒரு சிறிய நாடு. பல்வேறு இனங்களைக் கொண்ட நாடு. ஆனால் லிகுவான் என்ற மனிதரால் நாட்டைக் கட்டியெழுப்பும் ஒரு பொது வேலைத் திட்டத்தால் மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து ஒவ்வொரு இனத்தினதும் மொழி, கலாசாரம், இனம், மதம் என்பவற்றை அங்கீகரித்ததன் ஊடாக நவீன அபிவிருத்தியடைந்த சிங்கப்பூர் ஒன்றை அவரால் உருவாக்க முடிந்தது.

இவ்வாறே மலேசியா என்ற நாடும், இந்திய, சீன, மலாய மக்களைக் கொண்ட அந்த நாடும் பல்லினத் தன்மையைப் புரிந்துகொண்டு அவர்களின் தனித்துவத்தை மதித்து நடந்ததன் ஊடாக மலேசியா ஒரு வளர்ந்த நாடாக உருவாகிக் கொண்டு வருகின்றது.

இதேபோன்று 40 வருடங்களுக்கும் மேலாக உள்நாட்டு யுத்தம் நடைபெற்று பல இலட்சம் மக்கள் இறப்பதற்குக் காரணமாக இருந்த, போர் முடிவுற்று கம்போடியா என்ற நாடு இன்று இனவாதத்தை தூக்கி எரிந்து விட்டு நாட்டின் நலன், அபிவிருத்தி என்பதே முதன்மையானது என்ற கோஷத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்து வருவதை நாம் அவதானிக்கலாம். அந்த நாட்டின் ஜனாதிபதி கடந்த கால முரண்பாடுகளை மறந்து அரசியல் கைதிகளை விடுதலை செய்து மக்களுக்கிடையே வெறுப்புப் பேச்சு, இனவாத நடவடிக்கைகளுக்கு எதிரான கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக ஒற்றுமையான ஒரு நாட்டைக் கட்டியெழுப்பி வருகிறார். இது எல்லோரினாலும் இன்று ஆச்சரியமாக நோக்கப்படுகின்றது.

இந்த வகையில் கற்ற பாடங்களையும் அண்மைய நாடுகளின் வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டு கடன் சுமையற்ற, சுய உற்பத்தி கொண்ட அபிவிருத்தி அடைந்த பல்லினங்களும் ஒற்றுமையாக வாழும் ஒரு நாட்டையே மக்கள் விரும்புகின்றனர். இந்த எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்யும் குறுகிய, நீண்டகால வேலைத் திட்டங்களை உள்ளடக்கிய அரசாங்கமாக புதிய ஜனாதிபதி அவர்களும் பிரதமர் அவர்களும் நாட்டை வழிநடாத்திச் செல்வார்கள் என்று நம்புவோமாக.

இறுதியாக பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த புத்திஜீவி ஒருவரின் வார்த்தைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது "இனவாதம் அரசியல் வெற்றியைக் கட்டியெழுப்பப் பயன்படலாம். ஆனால் நாட்டைக் கட்டியெழுப்ப ஒரு போதும் பயன்படப் போவதில்லை" என்பது அவரின் பொன்மொழியாகும். இலங்கை போன்ற நாட்டிற்கு தற்போதைய சூழ்நிலையில் இக்கருத்து மிகவும் பெறுமதி வாய்ந்ததாகும்.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் - 4000.00 | ஐக்கிய இராச்சியம் - 5500.00 |
| 12 இதழ்கள் - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா - 4000.00 | அமெரிக்கா - 6500.00 |
| 24 இதழ்கள் - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் - 4000.00 | அவுஸ்திரேலியா - 4700.00 |
| | | | | சீனா - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline [illegible] (Branch: Sri Sangaraja Mawatha)


## நான் அரசியலில்.... (07 ஆம் பக்கத் தொடர்)

நான் அரசியலில் இருக்கும் வரை ஒருபோதும் முஸ்லிம்களின் கலாசாரம், தனியார் சட்டங்கள் போன்ற விடயங்களில் கைவைப்பதற்கு இடமளிக்கப் போவதில்லை. நான் இதற்காக வேண்டிப் போராடுவேன். ஒருபோதும் எமது மார்க்கத்தின் பிரகாரம் உள்ள சட்டங்களை மாற்றுவற்கோ அதில் வேறு வேலைகளைச் செய்வதற்கோ இடமளிப்பதில்லை. பொது ஜன பெரமுன மாத்திரமல்ல ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருசிலரும் ஒரேநாடு, ஒரே சட்டம் தொடர்பில் கதைத்திருக்கிறார்கள். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலரும் இது விடயத்தில் பேசியிருக்கிறார்கள். இதனால் சகல அரசியல் கட்சிகளுக்கும் ஒவ்வொரு நிலைப்பாடு இருக்கும். நாம் எமது கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதியிடமும் இந்த விடயத்தை பற்றிப் பேசியுள்ளோம். எனவே யாரும் இவ்விடயத்தில் அச்சப்படவும் தேவையில்லை, இனவாத அரசியல்வாதிகளின் கருத்துக்களுக்கு அடிபணியவும் தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வி நிலையென நினைத்தால்



தொகுப்பு: எ.ஸீ.எம். நதீர்

கடல் வாழ் உயிரினங்கள் பற்றிய ஓர் ஆய்வாளர் பெரியதொரு தடாகத்தில் திமிங்கிலம் ஒன்றை இட்டார். அதன் பின்னர் சில சிறிய மீன் வகைகளை அதனுள் இட்டார். எதிர்பார்த்தது போலவே உடனடியாகவே அத்திமிங்கிலம் சிறிய மீன்களை சாப்பிட்டுவிட்டது.

அதன் பின்னர் குறித்த ஆய்வாளர் அந்தத் தடாகத்தை ஒரு கண்ணாடி தடுப்பின் மூலமாக இரண்டாகப் பிரித்தார். ஒரு பக்கத்தில் திமிங்கிலம் இருந்தது. மற்றைய பக்கத்தில் மீண்டும் சிறிய மீன்களை இட்டார். திமிங்கிலம் முன்னரைப் போன்றே சிறிய மீன்களை சாப்பிட முயற்சித்தது. எனினும், அதனால் கண்ணாடி தடுப்பினை கடந்து வர முடியவில்லை. பல தடவைகள் முயற்சித்தும் முடியவில்லை. இறுதியாக அது முயற்சியை கைவிட்டுவிட்டது.

சில நாட்களின் பின்னர் ஆய்வாளர் அந்த கண்ணாடித் தடுப்பை அகற்றிவிட்டார். ஆனால், திமிங்கிலம் அந்த சிறிய மீன்களைச் சாப்பிடுவதற்கு முயற்சிக்கவில்லை.

படிப்பினை: சில மனிதர்களும் தமது வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு தோல்விகளினால் விரக்தியடைந்து முயற்சியை கைவிட்டு விடுவார்கள். ஆனால், அவர்கள் தோல்வியடைந் தமைக்கான காரணங்கள் அல்லது தடைகள் அகன்றிருக்கும்.

# உலகில் சனத்தொகை கூடிய பத்து நாடுகள்



உலகில் சனத்தொகையின் அடிப்படையில் பத்தாவது இடத்தில் இருக்கும் நாடு மெக்சிகோ ஆகும். இங்கு 128 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். 1,972,550 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட மெக்சிகோவின் தலைநகரம் மெக்சிகோ சிட்டி ஆகும்.

சனத்தொகையின் அடிப்படையில் ஒன்பதாவது இடத்தில் ரஷ்யா காணப்படுகின்றது. இதன் மொத்த சனத்தொகை 146 மில்லியன்களாகும். இதன் தலைநகரம் மொஸ்கோ ஆகும்.

உலக சனத்தொகையின் அடிப்படையில் எட்டாவது இடத்தில் இருக்கும் நாடு பங்களாதேஷ் ஆகும். இங்கு 167 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். பங்களாதேஷின் தலைநகரம் டாக்காவாகும்.

இந்த வரிசையில் ஏழாவது இடத்தில் நைஜீரியா காணப்படுகின்றது. நைஜீரியாவில் 202 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இதன் தலைநகரம் லாகோஸ் ஆகும்.

211 மில்லியன் மக்கள் தொகையை கொண்ட பிரேசில் இப்பட்டியலில் ஆறாம் இடத்தைப் பிடிக்கின்றது. பிரேசிலின் தலைநகரம் பிரேசீலியா ஆகும்.

உலக சனத்தொகையின் அடிப்படையில் ஐந்தாவது இடத்திலுள்ள நாடு, பாகிஸ்தான் ஆகும். இங்கு 217 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். பாகிஸ்தானின் தலைநகரம் இஸ்லாமாபாத் ஆகும்.

இந்தோனேசியா இப்பட்டியலில் நான்காம் இடத்தை வகிக்கின்றது. இங்கு 270 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். ஜகார்த்தா இந்நாட்டின் தலைநகரமாகும். இந்நாடு சுமார் 17000 தீவுகளை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய அமெரிக்கா இவ்வரிசையில் மூன்றாம் இடத்தைப் பெறுகின்றது. இங்கு 329 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இதன் தலைநகரம் வொஷிங்டன் ஆகும்.

1.37 பில்லியன் மக்கள் தொகையை கொண்ட இந்தியா இப்பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பெறுகின்றது. இதன் தலைநகரம் புதுடில்லி ஆகும்.

உலகில அதிகூடிய சனத்தொகை கொண்ட நாடாக சீனா காணப்படுகின்றது. இங்கு 1.43 பில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இதன் தலைநகரம் பீஜிங் ஆகும்.

# ரொபர்ட் கியோசாகியின் வெற்றிக்கான 15 விதிகள்



ரொபர்ட் கியோசாகி அமெரிக்காவை சேர்ந்த தொழிலதிபர், முத லீட்டாளர், சுய முன்னேற்ற மற்றும் நிதி சார்ந்த எழுத்தாளர், கல்வியியலாளர், ஊக்கமூட்டும் பேச்சாளர், நிதி சார்ந்த நிதி கல்வியறிவாளர். நிதி (Financial) மற்றும் வணிக கல்வியறிவு (Business Education) வழங்கும் Rich Dad நிறுவனத்தின் நிறுவனர். ரொபர்ட் கியோசாகி உலக அளவில் அதிகமான விற்பனையான நிதி மற்றும் முதலீடு தொடர்பான Rich Dad Poor Dad புத்தகத்தின் ஆசிரியர். அவர் வெற்றி பெறுவதற்கான 15 வழி முறைகளைக் குறிப்பிடுகிறார். அவை வருமாறு.

- அனுபவங்கள் உங்களை மிகச் சிறந்தவராக்கும்.
- உங்கள் வாழக்கையை மிக எளிமையாக்குங்கள்.
- தவறுகளிலிருந்து பாடம் கற்று கொள்ளுங்கள்.
- தொடர்ந்து கற்றுக் கொண்டே இருங்கள். கற்றுக் கொள்வதை நிறுத்திவிடாதீர்கள்.
- உங்கள் செலவுகளை (Spending) உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருங்கள்.
- எதிர்பாராத எதிர்கால செலவுகளுக்கும் திட்டங்களை தீட்டுங்கள்.
- தெளிவான மற்றும் துல்லியமான நிதி இலக்குகளை (Financial Goals) கொண்டிருங்கள்.
- பொறுப்புகளை ஏற்றுகொள்ளுங்கள்.
- உங்களை சுற்றி உங்களை போல் எண்ணம் (Like minded) கொண்ட ஆதரவான மனிதர்களை வைத்திருங்கள்.
- நீங்கள் வெற்றி அடையும் வரை ஒரே பாதையில் செல்லுங்கள். வெற்றியிலேயே உங்கள் முழு கவனத்தையும் (Focus) செலுத்துங்கள்.
- கடினமான தருணங்கள் உங்களுக்கு புதிய வாய்ப்புகளை (Opportunities) உருவாக்கும்.
- தோல்வியடைவதற்கும் (failure), இழப்பதற்கும் (losses) பயப்படாதீர்கள்.
- நீங்கள் எதற்காக கடினமாக உழைக்கிறீர்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.
- நீங்கள் சேமிப்பதை விட முதலீடு செய்யுங்கள்.
- எப்போதும் ஒரு பொருளை வாங்கும் முன், எப்படி என்னால் இதை வாங்க முடியும் என்று கேளுங்கள்.

மூலம்: தமிழ் எண்டர்பிரேனர்

## மாற்றம்... (05 ஆம் பக்கத் தொடர்)

இப்போது 'ஒரு நாடு, ஒரு சட்டம்' பற்றி நான் எழுதியுள்ளேன். எனது தாழ்மையான கருத்து என்னவென்றால், என் தலைமையிலான குழு முன்மொழிந்த முறையை சீர்திருத்துவதற்கு பதிலாக முஸ்லிம் விவாக விகாரத்துச் சட்டத்தை ரத்து செய்வது விஷயங்களை மோசமாக்கும். குளியல் நீருடன் சேர்த்து குழந்தையையும் வீசி எறிய வேண்டாம் என நான் அரசாங்கத்தை வேண்டிக் கொள்கிறேன். இலங்கையர்களாகிய நாம் அனைவரும் பெருமிதம் கொள்ளும் வகையிலான வளமான கலாச்சார மற்றும் சட்ட பாரம்பரியத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்பு நாம் ஒரு முறை அல்ல, நூறு முறை சிந்திக்க வேண்டும். ஒற்றுமையைப் போலவே பன்முகத்தன்மையும் வலிமையானது என்று நான் நம்புகிறேன்!

### சிவில் சமூகத்தின் பங்கு

இன்று உலகம் எதிர்கொள்ளும் நிச்சயமற்ற எதிர்காலத்துடனான இந்த சவால்களின் பின்னணியில் அவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் சிவில் சமூகத்தின் பங்கை நான் வலியுறுத்த விரும்புகிறேன். ஐக்கிய நாடுகள் சபை, அரசுகளுக்கிடையேயான அமைப்புகள் அல்லது தேசிய அரசாங்கங்கள் உலகிற்கு மிகவும் தேவையான மாற்றத்தைக் கொண்டு வரும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. தேவையான மாற்றத்தைக் கொண்டு வருவதில் சிவில் சமூகமே முக்கிய பங்கு வகிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

சிவில் சமூகம் என்பது நமக்கு புறம்பான ஒன்றல்ல. ஏனென்றால் நாம் அனைவரும் 'சிவில் சமூகம்' என்பதில் ஒரு பகுதியாக இருக்கிறோம். எனது சக பட்டதாரிகள் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கும் எங்கள் தாய் நிலத்துக்கும் உலக சமுதாயத்துக்கும் தங்கள் கடனை திருப்பிச் செலுத்த முடியும். நாங்கள் கூட்டாக இந்த தேசத்தின் இறையாண்மைகள். தற்போது நான் எனது கிரீடத்தை என் சிறிய விரலில் அணிந்திருக்கிறேன், எனது வாக்கு மை இன்னும் மங்கவில்லை. நமது சேவைகள், வெளியீடுகள், கற்பித்தல், வழிகாட்டுதல் மற்றும் பல தரப்பட்ட பிற வழிகளில் நமது கற்றலின் பலன்களை சமூகத்தினதும் எதிர்காலத் தலைமுறையினதும் நல்வாழ்வுக்கு பெரிதும் பயனளிக்கும் வகையில் பகிர்ந்து கொள்ள வேண்டிய பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது.

உயர் சான்றுகளுடன் இன்று பட்டம் பெறுபவர்களின் நிபுணத்துவத்தின் பல்வகைமையாலும் செழுமையாலும் எல்லா இடங்களிலும் தேவைப்படும் மகத்தான மாற்றங்களைக் கொண்டுவருவது சாத்தியமாகும். உலகத்தை மாற்றுபவர்களாக இருக்கக்கூடிய அதன் பழைய மாணவர்களின் பட்டியலை உருவாக்க வேண்டும் என கொழும்பு பல்கலைக் கழகத்திற்கு நான் பரிந்துரைக்கிறேன்.

ஒருவருக்கொருவர் தொடர்புகொள்வதற்கு ஏற்ற வகையில் அவர்கள் பிணைக்கப்பட்டிருந்தால், அவை ஒரு சிறந்த சிந்தனைக் குழுவாகவும், இலங்கையின் மிக சக்திவாய்ந்த சிவில் சமூக அமைப்புகளில் ஒன்றாகவும் அமைய முடியும். ஏறக்குறைய எனது சக பட்டதாரிகள் அனைவரும் அரசுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ இருப்பார்கள், என் பார்வையில், தனியார் துறையும் மாற்றுவதற்கான ஒரு சக்திவாய்ந்த இயக்கியாக இருக்க முடியும். வறுமை, பசி, ஊட்டச்சத்துக் குறைபாடு, நோய், சகிப்புத்தன்மை, புரிந்துணர்வின்மை, வெறுப்பு, ஒற்றுமை, குடும்பப் பராமரிப்பு எனப் பலவற்றை சமாளிக்கும் பொறுப்பில் இரு துறைகளுக்கும் முக்கிய பங்கு உண்டு.

தொழில் முனைவோர் மற்றும் தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் அதேவேளையில், எங்கள் கல்வி முறையை மறுபரிசீலனை செய்ய வேண்டும். புதுமை மற்றும் கண்டுபிடிப்புக்களுக்கு உதவும் வழிகளைக் கண்டறிய வேண்டும். ஒரு எடுத்துக் காட்டுக்கு, தென் கிழக்கு ஆசியாவில் மூடுபனி வெளியில் எல்லை தாண்டிய காற்று மாசடைதலை நாம் அண்மைக் காலங்களில் கண்டிருக்கிறோம், சில மாசடைவுகள் டெல்லி மற்றும் இந்தியாவின் பிற தொழில்துறை நகரங்களிலிருந்து இலங்கையின் சில பகுதிகளுக்கு கடத்தப்படுகின்றன. தூய காற்றை சுவாசிப்பது ஒரு மனித உரிமை. ஆனால் இப்போது மூச்சு விட முடியாதவர்களுக்கு ஆக்ஸிஜன் கிடைக்கச் செய்வதற்கான ஒரு புதிய தொழில்துறை உருவாகி உள்ளது. மருத்துவமனைகள், ஆக்ஸிஜன் சாவடிகள் மற்றும் சிறிய போத்தல் போன்ற பொதிகளில் அவை விலைக்கு விற்கப்படுகின்றன. இது தொழிலாகவும் சேவையாகவும் அமைகிறது.

தற்போது உலகம் கொந்தளிப்பில் உள்ளது. நிச்சயமற்ற தன்மையும் விரக்தியும் மலிந்துள்ளன. சர்வதேச சட்டம் அதன் தற்போதைய நிர்க்கதி நிலையிலிருந்தும் பயனற்ற தன்மையிலிருந்தும் புத்துயிர் பெற வேண்டும். மேலும் உலக நீதி மற்றும் பசிக்கு எதிரான போராட்டம் என்று வரும்போது உலகம் இதை விடச் சிறப்பாகச் செயற்பட முடியும். நீதியை அடைவதன் மூலம்தான் பேராசை, ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றிலிருந்து உலகைக் காப்பாற்ற முடியும். காலநிலை மாற்றம் ஒரு பெரிய பிரச்சினையாகும்.

இன்று நான் பேசும்போது, சிஓபி 25, பாரிஸ் ஒப்பந்தத்தை அமல்படுத்துவது குறித்து பரிசீலிக்க மாட்ரிட் காலநிலை மாற்ற மாநாடு உலகை ஒன்றிணைத்துள்ளது. மேலும் காலநிலை மாற்றத்தின் ஆபத்துகள் தொடர்பில் மக்களை விழிப்பூட்டி காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கைகளை அது எடுக்கவுள்ளது. அமெரிக்க போர்க்குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுத்தால் அவர்களை கைது செய்யுமாறு சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நீதிபதிகள் மீது அமெரிக்கா முன்வைத்துள்ள அச்சுறுத்தல் குறித்தும் தொடர்ந்து விவாதம் நடைபெற்று வருகிறது. இலங்கையில் நாங்கள் ஒரு முக்கியமான அரசியல் திருப்புமுனையில் இருக்கிறோம். சுதந்திரம் பெற்றதிலிருந்து நாம் எடுத்த பாதையில் அந்த மந்திர யு-டர்னை உருவாக்க முடியும் என்று நம்புகிறோம்.

மற்றொரு சவால் என்னவென்றால், மனிதனின் தொலைநோக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தாலும், இதுவரை கற்பனை செய்திராத சாத்தியக் கூறுகளின் பால் மனதை ஈடுபடுத்தி எதிர்காலத்தில் எந்தவொரு சிக்கலையும் சமாளிக்கும் வகையிலான உத்திகளை உருவாக்குவது அவசியம். எதிர்காலம் மிகவும் நிச்சயமற்றதாக இருக்கும்போது, வாழ்க்கை எந்தத் திசையை எடுக்கப் போகிறது என்பது எங்களுக்குத் தெரியவில்லை, மூலோபாய ரீதியில் எதிர்காலத்திற்கான மையத்தை அமைப்பது பயனுள்ளதாக இருக்கும்.

இன்று இங்கு ஒன்றுகூடியுள்ளது போன்ற உயர் சபைகளினால் இதைச் சிறப்பாகச் செய்ய முடியும். சிங்கப்பூர் உட்பட பல வளர்ந்த நாடுகள் ஏற்கனவே இந்த ஆட்டத்தை ஆரம்பித்திருக்கின்றன. பொருளாதார மீட்சிக்கும் செழிப்புக்குமான ஒரு முற்போக்கான பாதையில் தொடரவும், அவசர நிலைகள் உருவாக்கக்கூடிய எதிர்பாராத மற்றும் எதிர்பார்க்க முடியுமான நிகழ்வுகளுக்கு கூட உடன் செயற்படும் வகையில் எங்கள் சிந்தனைக் களஞ்சியத்தைப் பயன்படுத்த முடியும் என்று நான் நினைக்கிறேன்.

அத்தகைய அவசரநிலைக்கு ஒரு சிறிய விளக்கத்தை தருகிறேன். 2019 WR3 என அறியப்படும் எகிப்திய பிரமிடு போல பிரமாண்டமான சிறுகோள் 5 மில்லியன் கிலோமீட்டருக்கும் குறைவான தூரத்தில் ஒரு மணி நேரத்திற்கு 27,000 கிலோமீட்டர் வேகத்தில் இன்று இரவு கிரக பூமியைக் கடக்கும் போது தனது பாதையை மாற்றி பூமியை நோக்கி வருகிறது என்றால், நமது கிரகத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய சிறுகோள்களைத் திசைதிருப்புவதை நோக்கமாகக் கொண்ட ஐரோப்பிய விண்வெளி ஏஜென்சி (ஈஎஸ்ஏ) உடனடியாக தன்னார்வத் தொண்டு அமெச்சூர் வானியலாளர்களுக்கு அழைப்பு விடுக்கிறது. அது செயல்படும்போது, அது சிவில் சமூகமாக செயல்படும்.

மாற்றத்தைக் கொண்டுவருவது எளிதானது அல்ல, மாற்றத்திற்குப் பதிலளிப்பதும் எப்போதும் எளிதானது அல்ல., இது நம் வாழ்வின் பெரும் பகுதி. மாற்றத்தைத் தேடும் எவரும் தடைகளைச் சந்திப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் இந்த தடைகளை சமாளிக்க வழிகள் உள்ளன. என்னைப் பொறுத்தவரையில் மிகவும் தேவையான மாற்றத்தைத் தடுக்கும் ஒரு முதன்மைக் காரணி, மனித குடும்பத்தின் உள்ளுணர்வுதான். இதனை பலம் தான் சரியானது (Might is Right) என்று சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

ஒரு புதிய பாதையில் செல்ல அல்லது அரசாங்கங்களினதோ ஐ.நா போன்ற நிறுவப்பட்ட சர்வதேச அமைப்புகளினதோ நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு எதிராகச் செல்ல மனிதர்கள் பயப்படுகிறார்கள். தெளிவானதும் உறுதியுமான தொலைநோக்கு இல்லாமை அல்லது சாத்தியமான அணியினுடன் தொலைநோக்கைப் பகிர்ந்து கொள்வதில் உள்ள தோல்வி, மூலோபாய மற்றும் செல்வாக்குச் செலுத்தும் கூட்டணிகளின் எண்ணிக்கையைப் பெருக்கி ஆதரவைப் பெறத் தவறியமை, நேரத்தையும் சாத்தியமான வெகுமதிகளையும் சிறந்த வாழ்க்கைக்கான ஊக்குவிப்புக்களயும் தியாகம் செய்ய விருப்பமின்மை, அவசரம் மற்றும் அர்ப்பணிப்பு உணர்வை நிறுவத் தவறியமை, மாற்றத்தின் இயக்கவியலை நிர்வகிக்க இயலாமை, குறிப்பாக மாற்றத்திற்கான அர்த்தமுள்ள உத்திகளை உருவாக்காமல் பகுதி பகுதியான வியூகங்களை வகுத்தமை போன்ற இன்னும் பல விடயங்களும் மாற்றத்துக்குத் தடையாகவிருக்கின்றன.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், மாற்றத்தைக் கொண்டுவருவது எளிதான காரியமல்ல. மாற்றத்தின் செயல்முறையைத் திட்டமிட்டு நிர்வகிப்பது முக்கியம். உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி என்ற வகையில் எனது வாழ்க்கையில் மாற்றுக் கருத்துக்கு அழைக்கப்பட்டபோது மாற்றுக் கருத்தினை நான் முன்வைத்த போக்கினை எனது சொந்த உதாரணத்தில் இருந்து தருகிறேன். ஏனெனில் பொதுவான சட்ட மரபில், மாற்றுக் கருத்துக்கள் தீர்ப்பின் மாற்றத்தின் முன்னோடிகளாக இருந்தன என்பது இரகசியமல்ல.

என் பார்வையில், கருத்து வேறுபாடு என்பது ஒரு முன்னோக்கிய வழி. தீவிர சிந்தனையை விட சகிப்புத்தன்மை நிலவும் சூழலில் மட்டுமே அது சிறந்த முடிவுகளைத் தர முடியும். மக்கள் பரந்த கண்ணோட்டங்களை வளர்த்துக் கொண்டுள்ளனர். கற்றுக்கொள்ளவும் மாற்றிக் கொள்ளவும் தயாராக உள்ளனர் என்பதே எனது பார்வையாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org








கொழும்பு ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரியின் மாணவத் தலைவர் நிகழ்ச்சி அதிபர் அத்ஹாம் தலைமையில் நடைபெற்றது. இதில் மாணவத் தலைவர்களின் கலை நிகழ்ச்சிகளும் அரங்கேறின.



MFCD இன் தந்தையை இழந்த பயனாளிப் பிள்ளைகளின் தாய்மார்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கான அம்பாறை மாவட்ட வருடாந்த ஒன்றுகூடல்கள் சம்மாந்துறை, மருதமுனை மாவடிப்பள்ளி, கல்முனை மற்றும் நற்பிட்டிமுனை பிரதேசங்களில் நடைபெற்றன. MFCDயின் அம்பாறை பிராந்திய திட்ட முகாமையாளர் எஸ். இம்தியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ''பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான வலுவூட்டல்'' எனும் தொனிப்பொருளில் ஏ.ஆர். தஹ்லான் (உளவளத்துணை ஆலோசகர், கல்முனை பிரதேச செயலகம்) அவர்களினால் பயனாளிளுக்கான விழிப்புணர்வு வழங்கப்பட்டது. அத்துடன் இஸ்லாமிக் ரிலீஃப் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி இப்றாஹீம் சப்ரி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.




# காலங்கள் மாறும் கோலங்கள் மாறும்




Printed and Published by Focus Media (Pvt) Ltd. 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org